தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1974 ஏப்ரல் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மானாமதுரை அரசு மருத்துவமனை

*837 வினா.—**திரு. த. சோணையா** : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு திட்டம் மக்கள் நல் வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குனரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அரசாங்க கவனத்திற்கு இன்னும் வரவில்லை.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, இராமனாதபுரம் மாவட்டம் மானாமதுரையில் இருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரி ஒரு சிறிய குகை போன்ற இடத்தில் இருக்கிறது. மானாமதுரையைச் சுற்றி ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்துதான் சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக அரசாங்கம் பெரிய மருத்துவ மனையொன்றை அங்கே கட்டுவதற்கு அந்த இடம் போதுமானதாக இல்லாத காரணத்தால் சித்ரா ஓட்டு கம்பெனிக்கு எதிரே அரசாங்கத்திற்கு சொந்தமாகவுள்ள பத்து ஏக்கரா நிலப் பகுதியில் ஆஸ்பத்திரியைக் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[1974, ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மானு மதுரை மருத்துவ மனையைத் தமிழக அரசு அண்மையில்தான் அரசு மருத்துவ மனையாக ஆக்கியிருக்கிறது. அப்படி ஆக்கப்பட்ட அந்த மருத்துவ மனை மிகச் சிறிய வசதியுடையதாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, அதற்குப் பின்னர் புதிய மருத்துவ மனையொன்று கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான புறம்போக்கு நிலம் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலத்தை மருத்துவத் துறையினிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த நிலம் கிடைத்ததற்குப் பின்னர், அதிலே மருத்துவ மனை கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குறைந்தது ஒரு இலட்ச ரூபாயாவது நன்கொடை வசூலிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நன்கொடை வசூலிப்பதை சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் தீவிரப்படுத்துவார்களானால், அடுத்த ஆண்டிலாவது அதற்கு மருத்துவ மனை கட்ட வாய்ப்பு ஏற்படும்.

Non-clinical Professors

*838 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state the number of non-clinical Professors under stagnation of salary in the Medical Department as on 30th November 1973?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பன்னிரண்டு.

திரு. என். கே பழனிசாமி : தலைவர் அவர்களே, மெடிகல் காலேஜில் இருக்கக்கூடிய நான்-கிளினிகல் ப்ரொஃபஸர்களும் எம்.பி.பி.எஸ். படித்திருப்பதால், மற்றவர்களுக்கு என்ன ஸ்கேல் ஆஃப் பே கொடுக்கப்படுகிறதோ அது இவர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ரூபாய் 900—50—1,300 என்று பேராசிரியர்களுக்கு வழங்கப்படுகிற அந்தச் சம்பள விதத்தில் ரூபாய் 1,300 என்ற நிலையை ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு முன்னரே இவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஓர் உயர்ந்த சம்பளத்தில் எல்லைக்கோடு வருகிறது. அதை அடைந்த பிறகு மேலும் சம்பளம் தர இப்பொழுது வாய்ப்பு

1974, ஏப்ரல் 17]

இல்லை. ஆனால், கல்லூரியின் முதல்வராக, இயக்குநராக, துணை இயக்குநராக இப்படி யாருக்கு ஆர்வம் இருக்கிறதோ அதைப் பொறுத்து அவர்களில் சிலர் பதவி உயர்வு பெறக்கூடும். எட்டு ஆண்டு, பத்து ஆண்டு சம்பள உயர்வு பெற்ற பின்னர் ஒரு குறிப்பிட்ட எல்லையை அடைந்த காரணத்தால் ஏற்பட்டிருக்கிற ஸ்டாக்னேஷனே தவிர, அதுவும் உயர்ந்த சம்பளத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஸ்டாக்னேஷனே தவிர, குறைந்த சம்பளத்தில் ஏற்பட்ட ஸ்டாக்னேஷன் அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது திருத்தியமைக்கப்பட்ட யு.ஜி.ஸி. ஸ்கேல் ஆப் பே கொடுக்கவேண்டும் என்று பரிந்துரை அண்மையில் வந்திருக்கிறதே அது இந்த நான்-க்ளினிகல் ப்ரொபஸர்களுக்கும் பொருந்துமா ? அப்படியிருந்தால், அந்த முறையில் என்ன அதிகச் செலவாகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. அது தெரிந்த பின்னர்தான் அதுபற்றி நான் எதுவும் கூற முடியும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, ஒரு குறிப்பிட்ட நிலையை சம்பள உயர்வில் அடைந்தபிறகு ஸ்டாக்னேஷன் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நான்-க்ளினிகல் சைடில் பணியாற்ற முன்வருவதில்லை. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது விசேஷ சலுகை அளிக்கும் வகையில், ஸ்டாக்னேஷன் ஏற்படும்போது மேலும் ஒரு உயர்வு கொடுக்கும் வகையில் அரசு ஏதாவது பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இவர்களில் பெரும்பாலோர் 'நான்-கிளினிகல்' என்ற பகுதியில்தான் வருகிறார்கள். பையோ-கெமிஸ்ட்ரி, பதாலஜி, பார்மகாலஜி, ஃபாரன்ஸிக் மெடிஸன், மைக்ரோ-பயாலஜி, அனாடமி, ஃபிஸியாலஜி ஆகிய இப்படிப்பட்ட பாடங்களுக்குள்ள பேராசிரியர்கள் இந்தப் பிரிவில் வருகிறார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்வதில்லை என்ற அடிப்படையில் அதற்காக ஈட்டுத் தொகையொன்று தரப்படுகிறது. ஆகவே, அந்த நிலையில் இவர்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசவேண்டிய நிலை இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான் க்ளினிகல் ப்ரொஃபஸர்கள் தனியாக வெளியில் மருத்துவ விடுதிகள் வைத்து, அங்கு ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்பதற்காகத் தனியாகப் பணம் தரப்படுகிறது என்றாலும், பல ப்ரொபஸர்கள் வெளியிலே பெரிய க்ளினிக்குகள் வைத்துக்கொண்டு ப்ராக்டிஸ் செய்கிறார்கள். அதிலே பல அமைச்சர்கள்கூட போய் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட ப்ரொபசர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் க்ளினிகல் ப்ரொபசர்கள் என்ற தகுதியைப் பெறுகிறவர்கள் யாருக்கும் மருத்துவம் செய்வதில்லை, என்ற அடிப்படையில்தான் அவர்கள் நான்-க்ளினிகல் ப்ரொபசர்கள் ஆகிறார்கள். மெடிசின், சர்ஜரி, கைனிகாலஜி ஆகிய யூனிட்களில் உள்ள கிளினிகல் ப்ரொபசர்கள், அசிஸ்டெண்ட் கிளினிகல் ப்ரொபசர்கள் நேரடியாக மருத்துவம் செய்யக் கூடாதே தவிர, மருத்துவ ஆலோசனை வழங்க எல்லா வாய்ப்பும் அவர்களுக்கு உண்டு.

They should practise but they can give consultation.
என்று இயற்கையாகவே உரிமை இருக்கிறது. கன்சல்டேஷன் அவரிடமிருந்து பெற்றால்தான் ஒருவருக்கு உடல் நலக் குறைவு நீங்கும் என்று கருதும் நிலைமை இருக்குமானால், அந்தக் கன்சல்டேஷன் தரும்போது அதைக் குற்றமாகக் கருதவில்லை, ப்ராக்டிஸ் வேறு ; கன்சல்டேஷன் வேறு.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கு பொதுவாக, பத்து ஆண்டுகள், 12 ஆண்டுகள் என்று டைம் ஸ்கேல் வைத்திருக்கிறார்கள். காரணம், இந்தக் காலத்திற்குள் அவர்களுக்குப் பதவி உயர்வு வந்துவிடும் என்றுதான் ஒவ்வொரு காடிகரிக்கும் இப்படி டைம் ஸ்கேல் வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஹெல்த் டிபார்ட்மெண்டில் நான்-க்ளினிகல் ஸ்டாஃபுக்கு ப்ரொமோஷன் சான்ஸ் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதிகப்படியான பதவி உயர்வு கொடுக்க அவர்களுக்கென்று ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய அரசாங்கம் வகுக்குமா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட துறைகளை அப்-கிரேடட் டிபார்ட்மெண்ட்ஸ் என்று சென்னை மருத்துவக் கல்லூரியில், இந்திய அரசு அகில இந்திய அடிப் படையில் தரும் உதவியை வைத்துக்கொண்டு சில பகுதிகளில் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி எல்லா இடங்களிலும் பதவி உயர்வு தர வேண்டும் என்பதற்காக எதையும் செய்ய முடியாது. பதவி உயர்வு வேண்டும் என்பதற்காக உயர்ந்த பதவியை, தலைமைப் பதவி போன்ற ஒன்றை உருவாக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான்-க்ளினிகல் ஸ்டாஃப் என்று சொல்லக்கூடிய ப்ரொபசர்கள் கன்சல்டேஷன் செய்வதற்கு உரிமை இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. கன்சல் டேஷன் என்னும்போது, வியாதியஸ்தரைப் பார்த்து, அவருக் குள்ள நோயைத் தீர்ப்பதற்கு ஆலோசனை சொல்வதுதான் கன்சல் டேஷன் என்பது. அதைத்தான் மற்ற மருத்துவர்களும் செய்கி றார்கள். மருந்து கொடுப்பதற்கென்று உதவியாளர்கள் இருக்கி றார்கள். அவர்கள் மருந்து கொடுக்கிறார்கள். ஆகையால், கன்சல்டேஷன் என்று சொன்னால் ஒரு டாக்டர் இன்னொரு டாக்ட ரிடம் போய், இம்மாதிரி வியாதிக்கு உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று கேட்டு, இப்படி இப்படி வைத்தியம் செய்யவேண்டும் என்று அந்த டாக்டர் சொல்வதுதான். ஆனால், வியாதியஸ்தரே நேரடியாகச் சென்று அவர்களிடம் கன்சல்டேஷன் செய்துகொள்வ தெல்லாம்கூட ப்ராக்டிஸ்தான். மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் கன்சல்டேஷன் என்றிருப்பதையும் அவர் களைப் பொறுத்து தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் தெரிவிக்கிறபோதே, நான்-க்ளினிகல் ப்ரொபசர் அல்லது அப்படிப்பட்ட துறையிலுள்ள ஸ்டாஃப் கன்ஸல்டேஷன் செய்வதும் ப்ராக்டிஸ்தான் என்று சொன்னார்கள். நான்-க்ளினிகல் ஸ்டாஃப்புக்கு—அதாவது நான்-க்ளினிகல் ப்ரொபசருக்கு— கன்ஸல்டேஷன் உரிமை கூடக் கிடையாது. அதற்காக ஈட்டுத் தொகை தரப்படுகிறது. க்ளினிகல் ஸ்டாஃப்புக்கு ஈட்டுத் தொகை தரப்படவில்லை. ஈட்டுத் தொகை தராத காரணத்தால், அகில இந்தியாவிலும் Consultation is permitted for any Professor who is concerned with clinical side என்று இருக்கிறது. கன்ஸல்டேஷன் என்பது என்ன, ப்ராக்டிஸ்

என்பது என்ன என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இன்ன மருந்து கொடு, அல்லது இன்ன ஊசி போடு என்று எழுதித் தருகிறார்களே அது கன்ஸல்டேஷன். இந்த ஊசியை இன்னொரு டாக்டர் வேறொரு இடத்தில் போடுவது ப்ராக்டிஸ் ஆகும். டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒருவர் கன்ஸல்டேஷன் செய்துகொண்டார் என்று சொன்னால், டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் மருந்து எழுதிக் கொடுத்துவிடுவார்கள். அந்த மருந்தை வாங்கி வேறொரு இடத்திலுள்ள டாக்டரிடம் கொண்டுபோய் போட்டுக் கொள்ளவேண்டும். இதுதான் அவர்கள் கையாண்ட முறை. இதை மாற்றுவதென்றால், அகில இந்திய அடிப்படையில்தான் ஒரு எண்ண ஓட்டம் ஏற்பட்டு மாற்ற வேண்டும்.

Treatment for Tuberculosis

* 839 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to prepare a scheme for a shorter period of treatment for T.B. patients in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்விக்கும் விடை சொல்லிவிடலாம்.

* *840 வினா—திரு. என். கிட்டப்பா:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடமாடும் காசநோய் மருத்துவ மனைகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், தனிப்பட்ட டாக்டர்களிடம் இப்பொழுதுள்ள முறையில் சீக்கிரமாக சொஸ்தமாக்கக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. இப்பொழுது சர்க்கார் ஆஸ்பத்திரி களிலேயும் இம்மாதிரி சீக்கிரமாகக் காசநோய் வியாதியை நீக்கு வதற்காக அதே முறையைக் கையாள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தனிப்பட்ட டாக்டர்கள் விரைவாகக் காசநோயைத் தீர்த்துவிடுவதற்கு மருந்து அளிக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது இன்னும் 'க்ளினிகல் ஸ்டடீஸ்'-ல் இருக்கிறது என்று தெரிவித்திருக் கிறார்கள். ஆராய்ச்சிக் கட்டத்தில் இருக்கிறது என்றும், 1½ ஆண்டு மருந்து தொடர்ந்து அளிக்கப்பட்ட பிறகுதான் காச நோய் அடியோடு நிற்கிறது என்று தரப்படும் மருந்துகளைவிட, 6 மாதகாலம் தொடர்ந்து அந்த மருந்தை உட்கொண்டால்தான் காசநோயை நிவர்த்திக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அது இப்பொழுது பரீட்சை முறையில் நடந்துகொண்டிருக்கிறது. அது வெற்றிகரமாக இருந்தால், அந்த மருந்து கிடைக்கின்ற வாய்ப்பு இருந்தால் அந்த முறையை எதிர்காலத்தில் மேற் கொள்ளலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, காசநோயினால் அதிக மாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற நோயாளிகள் பெரும்பாலும் நட மாடக்கூடிய சக்தியை இழந்துவிடுகிறார்கள். எனவே நடமாடக் கூடிய மருந்தகங்களை இந்த காசநோய்ப் பிரிவிற்காக ஏற்படுத்தி அத்தகையவர்களுக்கு உதவி செய்ய இனிமேலாவது அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருந்துச் செலவு மிகவும் குறைவாக இருந்து, அந்த மருத்துவ மனையை நகர்த்திக்கொண்டு செல்லக்கூடிய செலவு மிகவும் பெரிதாக ஆகிவிடுமோ என்ற அச்சமிருக்கிறது. ஏனென்றால், நடமாடும் மருத்துவ மனைகளை அதிகச் செலவோடுதான் நடத்த வேண்டி யிருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடங்கள் அல்லது சில கிராமங்களில்

எங்கே இப்படிப்பட்ட நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்களோ அந்த இடங்களுக்குச் சென்று எக்ஸ்ரே படம் எடுத்து, நோய்பற்றி ஆராய்ந்து தொடர்ந்து சிகிச்சை கிடைக்கச் செய்யவும் நடமாடும் எக்ஸ்ரே பிரிவு மருத்துவம், எக்ஸ்ரே பிரிவு பகுதி நடமாடும் வண்டி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்னையிலே ஒன்றும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரில் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 1½ இலட்சம் ரூபாய்க்குமேல் ஆகிறது. திங்கள்தோறும் ஆகின்ற செலவு மிகுதியாக இருக்கிறது. அந்த வகையில் ஏற்பாடு செய்ய நாளாகும். எங்கெங்கு டி.பி. அசோசியேஷன் சார்பாக அப்படி நடத்தக்கூடிய வாய்ப்பிருக்கிறதோ அங்கே நிதி சேர்த்து முயற்சித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், காச நோயாளிகளுக்காக எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலேயும் ஒரு பகுதியை நிலையாக வைத்துக்கொள்ளவும், அதைப்போல பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற மருத்துவ மனைகளிலே ஏதாவது ஒரு குறிப்பிட்ட நாளிலே இந்தக் காசநோயைப் பார்ப்பதற்கு என்று வைத்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்தால் அதிகப் பயன் அளிக்குமே. அது போன்ற திட்டம் ஏதாவது அரசின் முன் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பல மாவட்ட மருத்துவமனைகள், ஒன்றிரண்டு வட்ட மருத்துவ மனைகள் இவைகளிலே 4 படுக்கைகள் அல்லது 6 படுக்கைகள் என்று காசநோய்க்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவை தவிர பெரிய சானடோரியங்கள் சில இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு நாளை இதற்கென்று ஒதுக்கிவைக்க முடியாது. எல்லா நாட்களிலும் காசநோயாளிகளுக்குத் தொடர்ந்து மருந்து தர, எப்பொழுது வந்தாலும் அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்குகின்ற முறை இருக்கிறது. அந்த முறையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள டாக்டர்கள் இதைக் கவனித்தாக வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, கிராமப்புறங்களில் உள்ள காசநோயாளிகளுக்குச் சரியான வசதி இல்லாத சூழ்நிலையிருக்கிறது. கிராமப்புறங்களில் மருத்துவ அதிகாரிகளைப் போடும் பொழுது காசநோய் மருத்துவத்திலே நல்ல தேர்ச்சிபெற்றவர்களை

1974 ஏப்ரல் 17]

ஒவ்வொரு வட்டப் பகுதியிலேயும் ஏற்பாடு செய்தால் கிராமப் புறங்களில் மிகவும் வசதியாக இருக்கும். இதை அரசாங்கம் செய்ய முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் சொல்வதில் ஒருவேளை எண்ணிக்கை தவருக இருக்கலாம், தமிழ் நாட்டில் சுமார் 50,000 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, 50,000 தேர்ச்சி பெற்ற டாக்டர்களை ஏற்பாடு செய்வது என்பது நடக்கக் கூடிய காரியம் அல்ல, அதை எண்ணிப் பார்க்கவும் முடியாது. மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி காசநோய் மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர் கிடைப்பதே அரிது. ஏனென்ருல் காசநோயில் தேர்ச்சி பெற்ருல் வருமான வளர்ச்சிக்கு வாய்ப்பாக இல்லை என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதால் மிகச் சிலரே வருகிருர்கள். அப்படி வருகின்றவர்களை ஊக்கப்படுத்த முடிகிறது. ஆகவே, அது தொழு நோயானுலும் சரி அல்லது காசநோயனுலும் சரி, டாக்டர்கள் ஆர்வமாக வரும் காலம் இனிதான் வரவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பஞ்சாலைகளிலே பணி யாற்றக்கூடிய தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழி லாளர்கள் ஆகியவர்கள் காசநோயினுல் அதிகமாகப் பாதிக்கப் படுகிருர்கள். அவர்களை ஏதாவது மருத்துவமனைக்கு அனுப்பினுல் ஒரு வாரம் வைத்திருந்து அனுப்பிவிடுகிருர்கள். மீண்டும் அந்தக் காசநோய் அவர்களுக்கு வருகிறது. சில டி.பி. சானடோரியங்கள் தான் இருக்கின்றன. எனவே, இம்மாதிரி காசநோய் என்று தெரிந்த பிறகு அது பரிபூரணமாக சொஸ்தமாகக்கூடிய முறையில் இந்த மருத்துவமனைகளில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பரிபூரண மாகச் செய்வதற்கு இந்த நாட்டினுடைய வருமானம் எந்த வகையிலேயும் இடம் தராது. ஆனல் கடுமையான நிலையிருக்கும் பொழுது ஒரு வாரம் அல்லது 10 நாள் மருத்துவமனைகளில் வைத்து உடனடியாகச் சிகிச்சை வழங்கி, தொடர்ந்து இந்த மருந்து சாப்பிட வேண்டுமென்று மருந்து வழங்குகின்ற முறையில் சிகிச்சை அளித்தால், ஒரு வாரம் என்று வைத்திருந்து அனுப்பினுலே ஒரு மாதத்திற்கு 4 பேர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும், 8 பேர் காத்துக்கொண்டு இருப்பார்கள். தொடர்ந்து 3 மாதம், 6 மாதம் என்று வைத்திருக்கின்ற முறை இப்பொழுது

பெரும்பாலும் வரவேற்கப்படுவதில்லை. ஏனென்றால் அவரவர்கள் வீட்டிலேயிருந்தே இந்த மருந்தைத் தொடர்ந்து உட்கொண்டால் தகுந்த பலன் கிடைக்கும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் சில கடுமையான நிலைமைகளில் மட்டும்தான் சானடோரியத்தில் இரண்டு, மூன்று திங்கள் வைத்து மருந்து தரப்படுகிறது. மற்ற நேரங்களில் ஒரு வாரம் அல்லது 10 நாள் வைத்திருந்து ஓரளவு குணமடைந்தவுடன் மருந்து கொடுத்து அனுப்பினால்தான் பலருக்கும் அதே வாய்ப்பை வழங்கு வதற்கு இடம் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, திருச்சியில் இராஜாஜி டி.பி. சானடோரியம் நல்ல வசதிகளோடு இருக்கிறது. ஆனால் ஏழைகள் அங்கே வைத்திய வசதி செய்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அதை அரசே மேற்கொண்டு நடத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதுபற்றித் தனியான கேள்வி எழுப்பினால் நான் விடையறிந்து சொல்ல முடியும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பஞ்சாலை களிலேயும் மற்றத் தொழிற்சாலைகளிலேயும் பணியாற்றுபவர் களுக்குத்தான் அதிகமாகக் காசநோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதற்கு முன் ஜாக்கிரதையுடன் முன் நடவடிக்கை எடுத்து அவர்கள் சுவாசிக்கின்ற காற்றின் மூலமாக அதிகமாகப் பரவாமல் தடுக்க ஆலைகள் மட்டத்திலே ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது? மேலும் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பவர்கள் போஷாக்குள்ள சத்துணவுச் சாப்பிட முடியாத காரணத்தினால்தான் இந்த வியாதி நீண்டு போய்க் கொண்டிருக்கிறது. அதுசம்பந்தமாக அரசாங்கம் அந்த ஏழை களுக்கு உதவியளித்து அந்தமாதிரி போஷாக்குச் சத்துணவு கொடுக்கும் வாய்ப்பைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சத்துள்ள உணவு ஏழை மக்களுக்குக் கிடைக்க பரவலாகத்தான் முயற்சி செய்ய முடியும். ஏழை என்பவன் இன்ன இடத்தில்தான்

1974 ஏப்ரல் 17]

இருக்கிறான் என்று அங்கத்தினர் சொல்ல முடியாது. எனவே பரவலாக உள்ள ஏழை மக்களுக்கு எல்லா வகையிலும் சத்துணவு கிடைக்க வேண்டுமென்றால் நாட்டிலே உற்பத்தி அதிகமாகக் கிடைப்பதற்கு வழி செய்வதுதான் துணை செய்யும் என்ற அந்தப் பொதுநோக்கம் நமக்கு உண்டு. ஆனால் காசநோயினால் பாதிக்கப் பட்ட ஏழைகள் சிலருக்குக் காசநோய்க் கழகத்தின் மூலம் அல்லது மருத்துவத் துறையின் மூலமாக அவர்களின் வேண்டு கோளின்மீது, நிலைமைகளை அறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்களின் சான்றிதழ்களின்மீது மாதம் 20 ரூபாயோ 15 ரூபாயோ உதவித்தொகை தரப்படுகிறது. அந்த விடை இப் பொழுது என்னிடத்தில் இல்லை. ஆனால் எல்லாவற்றையும்விட ஆலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் அந்தக் காற்றி னாலே பாதிக்கப்படுகின்ற நேரத்தில் மேலும் அந்த இடத்திலேயே பீடி குடிப்பதும், சத்துணவு கிடைத்தாலும் உடம்பை வருத்தக் கூடிய வேறுபல பழக்கங்களை வைத்திருந்தால் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, பீடி முதலியவைகளைக் குடிக் காமல் இருக்கும்படி தொழிலாளர்களுக்கு, அதுவும் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. ஏனென்றால் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகுகின்ற வேகத் தைப் பார்த்தால் இந்த நாட்டின் பொருளாதார நிலை அவர்களைக் காப்பாற்றுகின்ற அளவிற்குப் போதுமான அளவில் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரோடு தொடர்புகொண்டு செயல்படும் சில யூனிட்டுகள் கிராமங்களில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களைப்பற்றி சில ரிசர்ச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது சரியாக இயங்கவில்லை என்பது மக்கள் கருத்தாக இன்றையதினம் இருக்கிறது. அதைத் தவிர்க்கின்ற முறையில் மத்திய சர்க்காரோடு நமது அரசு இணைந்து சில யுனிட்டுகளைத் தனியாகத் தமிழ்நாட்டில் உருவாக்குவதற்கு முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மத்திய அரசு நேரடியாகச் செய்கிற காரியம் என்பது எதுவும் இல்லை. இ.எஸ்.ஐ. கார்ப்ப ரேஷன் மூலமாக சில இடங்களில் இ.எஸ்.ஐ மருத்துவ மனைகளோ,

மருந்தகங்களோ ஏற்படுத்தப்படுகின்றன. காச நோயைப் பொறுத்து தமிழக அரசுதான் நடவடிக்கை எடுத்து வருகிறது. பி.சி.ஜி. ஊசி மத்திய அரசு திட்டத்தின் அடிப்படையில் போடப் படுகிறது. 18 வயது முதல் 20 வயதுக்குள் அனைவருக்கும் பி.சி.ஜி. ஊசி போடப்படுமானால் காச நோய் ஏற்பட வாய்ப்பில்லை. இதிலே ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்க முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : காச நோயைக் குணப்படுத்துவதற் காக கிராமப் புறங்களில் ஊமத்தம்பூவைப் பயன்படுத்துகிறார்கள். அது ஒரு வகையில் குணமாகிறது என்றும் சொல்லுகிறார்கள். சித்த வைத்திய முறையில் இதைப் பயன்படுத்தி இந்த நோயைக் குணப்படுத்த முடியுமா என்று ஆராய்ச்சி செய்து அந்த முறை யைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காச நோயில் பலவகைகள் இருக்கின்றன. இன்ஃபெக்ஷன் என்ற முறையில் ஏற்பட்டுவிடுகிற காச நோய்க்கு ஆங்கில முறைதான் சிறந்தது. அலபதி முறை தான் இன்ஃபெக்ஷன் க்யூரெட்டிவ் கபாசிடி உள்ளதாக இருக் கிறது என்று நம்பப்படுகிறது. வேறு சில வகை காசநோய் போன்று இருக்கும். என்னைப்போன்று நன்றாக இருப்பவர் களுக்குக் கூட காலையில் எழுந்தவுடன் சளி வருகிறது. அப்படி வரக்கூடியவர்கள் கூட நோயைத் தெரிந்து மருந்து சாப்பிட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பற்றி அந்தத் துறையில் உள்ளவர்கள் அது எந்தெந்த அளவில் பயன்படும் என்று ஆராயும்படி கேட்டுக் கொள்கிறேன்

திரு. த. சோணையா : மதுரை மாநகருக்கு அருகாமையில் இருக்கும் கப்பலூரில் காச நோயாளிகள் அனுமதிக்கப்படுவதற் காக வரிசைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். நீண்ட நாட்களாகப் பலருக்கு இடம் கிடைக்கவில்லை. ஆஸ்ட்டின் துணைக் கட்டடம் கட்டப்பட்டு படுக்கைகள் போடப்பட்டு அமைச்சர் அவர்கள் திறந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். போதுமான டாக்டர் களும், செவிலியர்களும் இல்லாத காரணத்தால் அது செயல் படாமல் இருக்கிறது. ஆஸ்பத்திரி இருந்தும், நோயாளிகள் இருந்தும் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. அதை மாற்று வதற்கு அரசு முன்வருமா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதை மாற்றுவது அல்ல. டாக்டர்களைப் போட்டு அது அங்கே இயங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் நல்ல யோசனை ஒன்று சொன்னார்கள். ஒரு மாத்துத் தென்னங்கள்ளை ஒரு மாதம் தொடர்ந்து சாப்பிட்டால் காச நோய் போய்விடும் என்று சொன்னார்கள். அதுசம்பந்தமாக ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காசநோய்க்கு அதைச் சாப்பிட வேண்டுமென்று சொல்லவில்லை. கக்குவானுக்கு என்று சொன்னேன். குழந்தைகளுக்கு கக்குவான் ஏற்பட்டால் அதைத் தருவது வழக்கம். நான் குழந்தையாக இருந்தபோது கொடுத்திருப்பார்கள். இப்போது எனக்கு வயதாகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு துணைக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது காசநோய்த் துறையில் போதிய பயிற்சி பெற்று தன்னுடைய தொழிலைத் தொடங்கினால் வருமானம் கிடைப்பதில்லை என்ற எண்ணம் இருப்பதன் காரணமாக அதிகமான மருத்துவர்களைப் பெற முடியவில்லை என்று சொன்னார்கள். இது காச நோயைவிட பயங்கரமான நோயாக டாக்டர்களிடையே உருவாகி இருக்கிறது. காச நோயைக் கட்டுப்படுத்த என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அதே முறையில் டாக்டர்கள் எண்ணத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த நோயைத் தடுக்க அதிகமான டாக்டர்களை இதிலே ஈடுபடுத்த அரசாங்கம் என்ன கட்டாய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எம்.பி.பி.எஸ். டாக்டர் பட்டம் பெற்றவர்களை நாங்கள் எந்த வேலைக்குப் போட்டாலும் செல்லத் தயாராக இருக்கிறார்கள். தரப்படுகிற ஊதிய அடிப்படையில் இல்லை என்றால் லத்தீப் போன்ற அங்கத்தினர்கள் சிபாரிசு செய்வார்கள், தனிப்பட்ட முறையில் போகமாட்டார்கள். மேலும் டி.டி.டி. படிக்க வேண்டும்; செஸ்ட் டிசீஸ் எம்.டி. படிக்க வேண்டும். அந்தத் துறையில் ஈடுபட நான்கு இடங்கள் இருக்கின்றன என்றால் மூன்று பேர்தான் வருவார்கள். இப்போது 4 பேர் வந்திருக்கிறார்கள். வேறு சிலவற்றுக்கு 12 இடங்களுக்கு 60

பேர் வருகிறார்கள். அப்படி இதிலே ஊக்கம் காட்டப்படவில்லை. இதிலே அதிகமான வருமானத்தைப் பெற முடியாது என்ற எண்ணம் இயல்பாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனில் இருந்து சானடோரியத்திற்கு உதவித் தொகை கொடுக்கப் படுகிறது. பெருந்துறை ராமலிங்கம் சானடோரியத்திற்கு ஒவ்வொரு இ.எஸ்.ஐ. ஒர்க்கருக்கும் 6 ரூபாய் வீதந்தான் கொடுக்கப் படுகிறது. இது பத்து வருஷத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட தொகை. இப்போது 13 ரூபாய் செலவாகிறது. நம்முடைய மாநிலத்தில் அதிகப்படியான நோயாளிகளைச் சீக்கிரம் குணப் படுத்துகிற ஆஸ்பத்திரியாக இருப்பதால் அந்த உதவித் தொகையைக் கூட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது ஒன்று மட்டுமல்ல; பெருந்துறையில் இருக்கிறது; செங்கிப்பட்டியில் இருக்கிறது; தாம்பரத்தில் இருக்கிறது; கப்பலூரில் (ஆஸ்டின்பட்டி என்று பெயர்) இருக்கிறது; நாகர்கோயில் பகுதியில் இருக்கிறது; தேவகோட்டை பக்கத்தில் இருக்கிறது. பெருந்துறை பெயர் பெற்ற காரணம் பெருந்துறை என்ற பெயர் இருப்பதுதான். அது கோவை மாவட்டத்தில் இருப்பதுதான். தரப்படுகிற உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றால் தனியாக இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு எழுத வேண்டும். தமிழக அரசு இதிலே செய்வதற்கு ஒன்றுமில்லை.

Petrol consumption charges

* 841 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total amount due from the Central Government to the State Government towards petrol consumption during the last two years; and

(*b*) whether it is a fact that there is inordinate delay on the part of the Central Government in allocating this amount?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1971-72, 1972-73 ஆண்டுகளுக்கு ரூபாய் 1,65,29,286.26.

(இ) இல்லை.

1974 ஏப்ரல் 17]

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் பயன்படுத்துகிற பெட்ரோலுக்கு மத்திய அரசு ஒரு வரி வசூலிக்கிறார்கள். அதிலே 70 சதவிகிதத்தை அந்தந்த மாநிலங்களுக்குத் தந்துவிட வேண்டும். 30 சதவிகிதத்தை ரிசர்வ் ஃபண்டில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி நமக்கு ஒரு கோடி சொச்சம் ரூபாய் வரவேண்டியிருக்கிறது. 70 சதவிகிதம் திருப்பித் தருவதில் காலதாமதம் ஏற்படுகிறது; 30 சதவிகிதம் ரிசர்வ் பண்டை வைத்துக்கொண்டு அந்தந்த மாநிலங்களில் அவ்வப் போது தேவைக்கேற்ப நிதியை ஒதுக்குகின்றார்கள். அது நம் மாநிலத்திற்குக் குறிப்பாக ஒதுக்கப்படவில்லை. போக்குவரத்துத் துறை மானிய விவாதத்தின்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி அவர்களோடு பேசினார்கள் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசை வற்புறுத்தி விரைவில் 70 சதவிகிதத்தைத் தருவதற்கும் ரிசர்வ் பண்ட் தொகையை முழு வதும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 70-30 அல்லது 80-20. 20 சதவிகிதம் ரிசர்வ் பண்ட். 80 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுத்து விடுகிறார்கள். பணத்தை ஒதுக்குவதில் காலதாமதம் இருப்பதாகத் தகவல் இல்லை; காலதாமதம் இல்லை. ரிசர்வ் பண்ட் எது எதற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்பது பற்றி மத்திய அரசு கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்ளும்போது விரிவாகப் பேசப் படும்.

Overbridge near Pachakuppam

* 842 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to construct an overbridge on Madras–Bangalore Railway line near Pachakuppam level crossing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இப்பணி நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

[1974 ஏப்ரல் 17

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the railway crossing at Pachakuppam has become a bottleneck to vehicular traffic not only from our State but from Karnataka, Maharashtra, Andhra, etc., as all of them have to pass through that level crossing. So, all vehicles stop there for furlongs and furlongs and the level crossing is closed for long time as many trains have to pass and a lot of time is wasted causing great inconvenience. This is the second time I am putting this question. I therefore request the Hon. Minister whether he would give top priority for this and take up this work immediately. Will he do that?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, only to relieve the traffic bottleneck there, Government have taken steps to lay an over-bridge there. The alignment is being investigated. As soon as the alignment is finalised, work will be taken up.

குடனாற்றுப் பாலத்தை அகலப்படுத்தல்

*843 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுமேல் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : ஆத்தூர் தொகுதியில் செம்பட்டியிலிருந்து பலகனூத்து போகும்வழியில் உள்ள குடனாற்றுப் பாலம் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது என்று மதுரை மேற்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கூறப்பட்டு, அதிகாரிகள் மதிப்பீடு செய்து தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்ட ஆவனச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தப் பாலத்திற்கு 6 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை சீர்பட்ட பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

1974 ஏப்ரல் 17]

Industrial Units at Ambattur

* 844 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether small Industrial Units at Ambattur have faced shut down due to power crisis during April 1973; and

(b) the total number of employees affected in this connection?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1973-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் மின்சார தட்டுப்பாடு காரணமாக முழுவதுமாக மூடப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன்: மின்சார வெட்டு இப்போது வருடா வருடம் வருகிற ஒரு பிரச்னையாக மாறிவிட்டது. ஆகவே இந்த மின்சார வெட்டு காரணமாக சிறு தொழில்கள், சிறு வியாபாரிகள், சிறு அளவில் இருக்கிறவர்கள் எல்லாம் பாதிக்கப்படாமல் தடுப்பதற்கு ஒரு புதிய திட்டம் வகுப்பது பற்றி அரசு ஏதாவது யோசனை செய்கிறதா? அப்படி, பெரும் தொழிற்சாலைகளுக்கு அளிக்கிற மின்சாரத்தை சில நாட்கள் நிறுத்திவைத்து மற்றவர்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஒரு ஏற்பாட்டினைச் செய்து, அந்தப் பெரும் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களுக்கு காம்பன்சேஷன் தருவதற்கு இந்த மின்சாரம் பெறுகிறவர்களிடத்தில் ஏதாவது ஒரு தொகையை அதிகமாகப் பெற்று அவர்களுக்கு காம்பன்சேஷன் தருவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படி ஒரு யோசனை கூறப்படுகிறது. அதற்கு மாற்று யோசனையாக அந்தப் பெரும் தொழில்களில் உற்பத்தியாகிற மூலப்பொருள்கள் இல்லாவிட்டால் சிறுதொழில்கள் கவனிக்கப்பட முடியாமல் போய்விடும் என்ற ஆட்சேபனையும் இருக்கிறது. ஆகவே இதற்கெல்லாம் பரிகாரம் அதிகமான மின்சார உற்பத்திதான்.

திரு. கே. என். குமாரசாமி : தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு, மின்சார வெட்டு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு வழங்கப்பட்டதா அல்லது அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேறு ஏதாவது முறையில் நிவாரணம் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான், பாதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை.

New Industries

*845 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Branch of the National Alliance of Young Entrepreneurs has sought the co-operation of the Government in starting new industries in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநிலப்பிரிவு, தொழில் முனைவர்களின் "நேஷனல் அல்லையன்ஸ்" நிறுவனத்தின் மூலமாக புதிய தொழில்கள் துவக்க வேண்டுமென்று சுமார் இருபது தொழில் முனைவர்கள் தமிழக அரசினை அணுகினர். அங்ஙனம் ஆரம்பித்த தொழில்களுள், ஆறு தொழிற்சாலைகள் தங்களின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன

திரு. கே. என். குமாரசாமி : சர்க்கார் தீர்மானிக்கிற தொழில் பட்டியலில், கிட்டத்தட்ட இருநூற்றுச் சில்லறை சிறு தொழில்கள் அந்தப் பட்டியலில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த இருநூற்றுச் சில்லறை தொழில்களில் பெரும்பாலும் அத்தியாவசியப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்களாக இல்லை. எனவே அத்தியாவசியப் பொருள்களை—உணவு, கைத்தறி போன்றவைகளை—உண்டாக்குகிற தொழில்களையும் இந்த பட்டியலில் சேர்த்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி, நேஷனல் அலேயன்ஸ் நிறுவனத்தைப் பற்றியது. சிறு தொழில்களின் பட்டியலை மத்திய அரசு மிகுந்த பரிவோடு கவனித்து அதிகமாக எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டுதானிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த நாஷனல் அலேயன்ஸ் மூலமாக ஒரு ஆறு யூனிட்கள் இப்போது ப்ரொடக்ஷனில் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த ஆறு யூனிட்கள் எவை எவை என்று சொல்ல முடியுமா? பாக்கி 14 பொருள்களின் அப்பிளிகேஷன்ஸின் நிலை என்ன? இவர்களுக்கு எம்மாதிரியான உதவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நேஷனல் அலேயன்ஸ் என்பது ஒரு தனி நிறுவனம். நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் இந்த முயற்சி எடுத்தால் நாங்கள் உதவி செய்கிறோம். அந்த ஆறு—

Mass media Printing and Publishing Private Limited.

Ananda Plastics.

Pandyan tyres.

Vaz International.

Ayyappa Industries.

Southern Agro Industries.

திரு. எம். சுரேந்திரன்: இந்த நாஷனல் அலேயன்ஸ் நிறுவனம் எம்மாதிரியான அமைப்பைக் கொண்டது? அதில், இப்போது ஆரம்பித்திருக்கிற தொழிலில் எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறார்கள்? எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? பாக்டரிகளை எப்போது ஆரம்பிப்பார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாஷனல் அலேயன்ஸ் என்று தொழிற்சாலையை ஆரம்பிக்கவில்லை. அவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இந்த முயற்சியில் அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். இந்த நாஷனல் அலேயன்ஸ் என்பதை அகில இந்தியாவில் டெல்லியில் அமைத்திருக்கிறார்கள். இதேபோல் 'போஸி' என்ற ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ்-னுடைய அசோஸியேஷனையும் டெல்லியில் அமைத்திருக்கிறார்கள். இவர்கள் அந்தச் சிறு தொழில்

அதிபர்களை எல்லாம் அழைத்து வேண்டிய ஆலோசனைகள் எல்லாம் சொல்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நம்மிடம் அணுகும்போது நாம் உதவி செய்கிறோம். நாம் 'ஸிட்கோ' மூலம் உதவி செய்கிறோம்.

Open Air Jails

* 846 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the proposal to start Open Air Jails at Muthupatti village. Sigangai taluk, Ramanathapuram district and at Vengadamangalam in Chingleput district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஓப்பன் ஏர் ஜெயில் கைதிகளின் மனோபாவத்தை மாற்றி அவர்களை சீர்திருத்தக்கூடிய முறையில் அமையுமா? அப்படியென்றால் கறுப்புக் குல்லாய் என்று சொல்லக்கூடிய ஒரு வகைக் கைதிகள் இருக்கிறார்களே, அவர்களையும் இந்த ஓப்பன் ஏர் ஜெயிலில் போட்டு சீர்திருத்த சர்க்கார் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நோக்கத்தோடுதான் அது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் இது நல்ல முறையில் நடை பெற்று வருகிறது. ஆனால் இந்தக் கறுப்புக் குல்லாய் இப்போது கிடையாது. கறுப்புக் குல்லாய் இப்போது போடுவது கிடையாது. வெள்ளைக் குல்லாய் இருந்ததையும் நம் அரசு வந்ததற்குப் பின்னால் எடுத்துவிட்டோம். அவர்கள் சொன்ன வார்த்தை, நிரந்தரமாக இந்தத் திருட்டுத் தொழில் செய்பவர்களுக்குச் சொல்கிற வார்த்தையாகும். சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகளை வைத்திருக்கிறார்கள். இங்கு இருப்பதாக நான் ஒத்துக்கொள்ளவில்லை. சேலத்தில் மட்டும்தான் அந்தக் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமா என்பது பரிசீலிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் இரண்டு இடங்களில் ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள

1974 ஏப்ரல் 17]

சிறைச்சாலைகளிலும் இம்மாதிரியான திறந்தவெளிச் சிறைச் சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த யோசனைதான். எந்தெந்த மாவட்டங்களில் பெரிய சிறைச்சாலைகள் இருக்கின்றனவோ அவற்றிற்கு அருகில் பத்து பதினைந்து மைல்களுக்குள்ளாக ஏராளமான நிலம் இருக்குமானால் அந்த இடத்தைப் பார்க்கும்படி எல்லா மாவட்ட சிறைச்சாலைகளினுடைய தலைவர்களையும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன் : ஆய்வில் இருக்கிற திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைகிற முறையில், சென்னைக்கு 12 மைல் தூரத்தில் புழலேரி, செங்குன்றம் பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வேண்டிய நிலம் இருக்கின்றது. எற்கனவே அதை அரசைச் சேர்ந்தவர்கள் பார்த்திருக்கிறார்கள். அந்த ஆய்வு என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த புழலேரிப் பகுதியிலுள்ள மாற்று இடத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான செலவு வருகிறது என்ற அச்சத்தால் அது அப்படியே நிற்கிறது.

திரு. கோவை செழியன் : இந்தத் திறந்தவெளிச் சிறைச் சாலையில் கோபத்தால் கொலை செய்த கொலைக் கைதிகள், நீண்ட நாட்களாகவுள்ள ஆத்திரத்தால் குற்றம் செய்த இந்தமாதிரியான குற்றவாளிகளை அங்கே வைத்து தினசரி அவர்களுக்கு நல்ல சொற்பொழிவுகள் உபன்யாசங்கள் எல்லாம் நடத்திக் கொடுத்து அவர்களது மனதை மாற்றலாம், நல்ல சினிமாக்களைக் காட்டலாம். "தோ ஆங்கேன் பாரா ஹாத்" என்ற படத்தில் குற்றவாளி மனத்தை மாற்றுவதாக வருகிறது. எனவே அப்பேர்ப்பட்ட நல்ல நடவடிக்கைகள் மூலம் அவர்களை சீர்திருத்தம் செய்து, அன்பான முறையில் சீர்திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது தமிழ் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் அவர்கள் சொன்னதுபோல் நல்ல கருத்துள்ள படங்களை நாம் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். திறந்தவெளிச் சிறைச்சாலையில் அதைவிட ஒரு

மாபெரும் இயக்கமாக, தங்களுடைய கிராமங்களில் வாழ்வதைப் போல் அமைத்து விவசாயத்தில் ஈடுபடச் செய்து ஒரு சிறையில் இருப்பதுபோல் ஒரு எண்ணம் ஏற்படாது பாதுகாப்பதுதான் இதன் நோக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சிறைக் கைதிகளை அடிக்கடி குற்றம் செய்துவிட்டு சிறைக்குச் செல்பவர்களை யும் புதிதாக ஒரு தடவை ஏதோ தவறுதல் காரணமாக மாட்டிக் கொண்டு சிறை செல்பவர்களையும் ஒன்ருகச் சேர்த்து வைப்பதில் புதிதாக சிறை செல்பவர்களை உள்ளே இருக்கக்கூடிய ஜெயில் பேர்ட்ஸ் கடும் கிரிமினல்ஸ்-ஆக மாற்றிவிடுகிருர்கள். மாற்றி அவர்களையும் தங்கள் சகாக்களாக ஆக்கி அதிகக் குற்றங்கள் செய் வதற்குத் தூண்டுகிற முறையில் இன்றைய தினம் இருக்கக்கூடிய அமைப்பு இருக்கிறது. எனவே இவர்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பாகுபடுத்தி, அடிக்கடி குற்றம் செய்து ஜெயிலுக்கு வரும் பெரிய குற்றவாளிகளை ஒரு பக்கம், இப்போது முதல் தடவையாக கன்விக்ட் செய்யப்பட்டு வருகிற கைதிகளை ஒரு பக்கம் என்று பாகுபடுத்தித் தனித்தனியாக வைத்தால் சிறைச் சாலைகள் அபிவிருத்தி செய்ய முடியும் அல்லவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்தின் அடிப்படை யில்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் முன்கூட்டியே பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். சேலம் சிறைச்சாலையில் அடிக்கடி குற்றம் செய்பவர்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கிருர்கள். மற்ற சிறைச்சாலைகளில் அவர்கள் இருக்கமுடியாது என்று நான் கருதுகிறேன். அப்படி ஏராள மான குற்றங்கள் செய்தவர்கள் இருப்பார்களேயானல் பெரும் பாலும் அவர்கள் சேலம் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிருர்கள்.

திரு. த. சோனையா : இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை வட்டத்திலுள்ள முத்துப்பட்டிக் கிராமத்தில் கட்டப்படுகிற திறந்த சிறைச்சாலையில் அந்தக் கைதிகளை விவசாயத்தில் ஈடு படுத்த நிலம் சுமார் எவ்வளவு கிடைக்கும் என்று அறிவிப்பார் களா?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலை கட்டப்படவில்லை. விவசாயம் செய்வதற்கு நிலம் கிடைக்குமா என்று பார்த்து, எந்த இடத்தில் இந்தச் சிறைக் கைதிகளை வைக்கலாம் என்பதுதான் யோசனை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது சொன்னார்கள், சிறைச்சாலையில் இருப்பதைப் போன்ற உணர்வு இல்லாத முறையில் அவர்களை வைத்து இருப்பது தான் இந்த அரசின் நோக்கம் என்று சொன்னார்கள். குற்றம் செய்பவர்களைத் திருத்துவதற்காக அல்லது அவர்களுக்கு ஒரு தண்டனை கொடுப்பதன் மூலம் மற்றவர்கள் அப்படிப்பட்ட குற்றங் களைச் செய்யாமல் இருப்பதற்கான வகையில்தான் சிறைச்சாலை என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. ஆகவே சிறையில் இருக் கிறார்கள் என்ற உணர்வே இல்லாமல் அவர்களுக்கு ஒரு சுகவாழ்வு ஏற்படுத்தித் தந்தால் குற்றவாளிகளின் எண்ணிக்கை பெருகுமே, குற்றம் இழைப்பது ஒரு பெரிய கேடு என்று நினைப்பது மாறாதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினரின் கருத்து பழமையான கருத்து. இப்போது உலகமே மாறி விட்டது. சிறைச்சாலைகளில் பழி வாங்கவேண்டுமென்ற அடிப் படை கிடையாது. கட்டுப்பாடு உணர்வு கொண்டு அங்கே அவர்கள் விவசாயம், மற்ற தொழில்கள் செய்வது என்ற முறையில் செய்து வருகிறார்கள். பழி வாங்கும் எண்ணம் பழமையான கருத்து. இப்போது அது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சாவூரிலுள்ள திறந்தவெளிச் சிறைச்சாலை நல்ல முறையில் இயங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது. அதை அனுபவமாகக் கொண்டு இந்த மாநிலத்தின் மத்திய சிறைச்சாலைகள் பக்கத்திலே அம்மாதிரியான திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே ஒப்புக் கொண்டேன், தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்ல முறையில் நடை பெற்று வருகிறது என்று. அந்த அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும் திறப்பதற்குப் பரிசீலனை செய்யப்பட்டு வரு கிறது.

[1974 ஏப்ரல் 17

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திறந்த வெளி சிறைச்சாலையில் உள்ளவர்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளாவிட்டாலும் வெளி உலகத்தைப் பார்த்து ஏங்கி, வெளி உலகத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு திருந்துவதற்கு வழியேற்படும். கட்டுப்பாடான சிறைச்சாலைக்குள் இருந்தால் வெளி உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. தனியாக அவர்களைப் பிரித்துவைத்தமாதிரி இருக்கும். திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருந்தால் மனம் மாறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, பெரிய சிறைச்சாலைகளில் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்க, சீக்கிரமாக உண்டாக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்போது சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கோவை செழியன் அவர்கள் கேள்வி கேட்டபோது "தோ ஆங்கேன் பாரா ஹாத்" போன்ற படங்களைக் காட்டி கைதிகளைத் திருத்தமுடியும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்கும் அளவுக்குச் சொன்னார்கள். தமிழ்ப்படங்களைப் பார்த்தே திருந்தாத கைதிகள், இந்தியில் வரும் அந்த ஆபாசப் படங்களைக் காட்ட ஆரம்பித்தால், தமிழ்நாட்டின் நாகரிகம் கெட்டுவிடும். ஆகவே, தமிழ்ப்படங்களை மட்டும் காட்ட அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் அந்தப் படத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நல்ல கருத்துள்ள படங்கள் காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, நடைமுறை செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நண்பர் வீராசாமி அவர்கள் 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' படம் பார்த்து இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அது நல்ல கருத்துள்ள படம். அந்தமாதிரி கருத்துள்ள படங்களைக் கைதிகளுக்குக் காட்டுவதற்கு அரசு முன் வருமா ?

(விடை இல்லை)

1974 ஏப்ரல் 17]

Thirupathisaram Agricultural School

* 847 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of students in the Agricultural School at Thirupathisaram in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விதைகள் வழங்கல்.

* 848 **வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொறுக்கு விதைகளை அரசு அதிகாரிகளின் பொறுப்பிலேயே அரசுப் பண்ணைகளிலேயே தயாரித்து வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த மாநிலத்தின் மொத்தத் தேவையில் ஏறத்தாழ 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகிறது. மற்றவை அரசு அலுவலர்களின் மேற்பார்வையில் தனியார்களால் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மொத்தத் தேவையில் 10 சதவீதம் தான் அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தியாவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதி 90 சதவீதம் அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் தனியாரிடமிருந்து பெறப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னதான் மேற்பார்வை செய்தாலும், தனியார்கள் லாப நோக்கத்தோடு பல விதைகளில் கலப்படம் செய்து கொடுத்து விடுகிறார்கள். அதை வாங்கி உபயோகிக்கும் விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு

உள்ளாகிவிடுகிறார்கள். ஆகவே, நமக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய பண்ணைகளை லீசிற்கு எடுத்தோ அல்லது இருக்கிற விதைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தோ, முழுக்க முழுக்க நமக்குத் தேவையான எல்லா விதைகளையும் அரசுப் பண்ணைகளில் உற்பத்தி செய்வதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. க. நாகராசன் : தலைவரவர்களே, விதைப் பட்டம் வருகிற போது வீரிய விதைகள் சரிவரக் கிடைப்பது இல்லை. வீரிய விதைகளைக் கொடுத்து விவசாயிகள் மிகுந்த உற்பத்தியைச் செய்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்குச் சரியான விதைப்பட்டத்தில் விதைகள் வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கனவே சொன்ன படி, இந்த மாநிலத்தின் மொத்தத் தேவையில் 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகிறது. அதை விரிவு படுத்துவதற்கும், மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் சொன்ன மாதிரி எல்லா விதைகளையும் அரசுப் பண்ணையில் உற்பத்தி செய்வதற்குமான திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நமக்குத் தேவையான விதையில் 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் இருந்து கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நமக்குத் தேவையான விதைகளை இன்னும் அதிக அளவில் உற்பத்தி செய்ய தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலுள்ள அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது ஏறத்தாழ 53 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அவற்றை விரிவு படுத்துவதன் மூலம் இன்னும் சிறந்த முறையில் விதைகளைப் பெருக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, 10 சதவீதம், நியூகிளியர் விதைகள் காரண்டி இல்லாமல் இருக்கின்றன. அதற்கு ரெஸ்பான்சிபிலிடி பிக்ஸ் செய்ய திட்டமிருக்கிறதா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, தனியார் அதை உற்பத்தி செய்தாலும் அரசு அலுவலாளர் மேற் பார்வையில் தான் அது செய்யப்படுகிறது. அது தரமான விதை என்பதற்கு சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் கூட உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னது போல் பல தவறுகள் நடந்து உள்ளன. தனியார் துறையில் உற்பத்தி செய்யப் படும் விதைகள் தரக்குறைவாக இருப்பதால், அரசு விதைப் பண்ணையில் எல்லா விதைகளையும் உற்பத்தி செய்யலாம் என்ற முறையில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, பெரும்பாலும் விதைகள் கோயம்புத்தூர் அக்ரிகல்சுரல் காலேஜிலிருந்து வாங்கி அனுப்பப்படுகின்றன. போன வருஷம் எச்.பி. 3 கம்பு, எச்.பி. 4 கம்பு பூராவும் வெள்ளைப்பொட்டாக வந்திருக்கிறது. பூரா விதை யும் மோசமாக இருக்கிறது. அங்கேயிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். காரணம் சரியான நேரத்தில் போய்ப் பார்த்து விதை கொடுப்பது இல்லை. ஆகவே, சரியான முறையில் விதை கொடுக்க அரசு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற சம்பவம் எனக்கு நன்றாகத் தெரியும். எச்.பி. 3 கம்பு விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அது தனியார் துறையில் செய்யப்பட்ட விதை. அதை அதிகாரிகள் சர்ட்டிபை செய்தது உண்மை என்றாலும், தேவையான அளவுக்குக் கண்காணிப்பு இல்லாமல் போய் இருக்கிறது. தனியார் துறை அதிக லாபம் பெறுவதைத் தடுப்பதற்கும், நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கும் என்ன செய்யலாம் என்பது அரசின் ஆய்வில் இருக் கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் 10 சதவீதம் அரசு விதைப்பண்ணையிலும், 90 சதவீதம் தனியார் விதைப் பண்ணையிலும் வாங்குவதாகச் சொன்னார்கள். அப்படித் தனி யாரிடமிருந்து வாங்கும் விதைகளை அதிகாரிகள் சர்ட்டிபை செய் கிறார்கள் என்றும் சொன்னார்கள். அப்படி சர்ட்டிபை செய்யப்

பட்ட விதைகளும் முளைக்காமல் இருந்திருக்கின்றன. அப்படி சர்ட்டிபை செய்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பிட்ட ஒரு சம்பவம் என் எண்ணத்தில் இருக்கிறது. அதற்கு சான்றிதழ் கொடுத்த அதிகாரி யார் என்று பார்த்து அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பு எழுதி அனுப்பியிருக்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் செங்கத்தில் ஒரு அரசாங்க விதைப் பண்ணை இருக்கிறது. அது மத்திய அரசாங்கம் நடத்தும் விதைப் பண்ணை. அதிலிருந்து தமிழக அரசு ஏதேனும் விதை பெறுவதற்கான முயற்சியை எடுத்து இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, செங்கத்திலே இருப்பது விதைப் பண்ணையில்லை. ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலம் நமது மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்து இருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 1 ரூபாய் அளவு மட்டும் வாடகையாக, குத்தகைப் பணமாக நாம் வாங்கிவருகிறோம். அவர்கள் அங்கே பயிர் செய்வது விதைக்கு மாத்திரமல்ல. அவர்கள் அங்கே 'பார்ம்' அமைத்து, அதில் லாபம் பெறமுடியும், பயிர் முறைகளில் அபிவிருத்தி செய்யமுடியும் என்ற அடிப்படையில் செய்து வருகிறார்கள். விதைகள் வழங்கும் நிலைமையில் அந்தப் பண்ணை இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, விவசாய அதிகாரிகள் மேற்பார்வை செய்தும் விதைகள் தரம் குறைந்து இருப்பதற்குக் காரணம் அதிகாரிகள் கவனக்குறைவு தான். அப்படிப்பட்ட சில நேரங்களில் வந்து விடுகிற விதைகளை வாங்கிப் போட்டால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சரியான விதைகளை உற்பத்தி செய்வதற்காக, நௌலாக் விதைப் பண்ணையை அபிவிருத்தி செய்து, சீரிய முறையில் விதைகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பாக நௌலாக் பண்ணைபற்றிச் சொன்னார்கள். விதைப் பண்ணைகளைப் பெருக்குவதற்கும், புதிதாக சீட்ப்ராசசிங் யூனிட் விதைகளை சீர் செய்வதற்குமான இயந்திரம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1974 ஏப்ரல் 17]

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இப்படித் தரக்குறைவான விதைகள் வருவதால் அங்கேயிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் போதிய அளவு தாங்குகிற விதைகளைப் பயிரிடுவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 ஏக்கர் என்று ஒதுக்கி, விவசாய அதிகாரிகளே நேரடியாகப் பயிரிட்டு, அந்த விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது வேறு ஒரு கருத்து. ஒன்றியங்களில் மாடல் பார்ம் அமைக்க வேண்டுமென்று கருத்து சொன்னார்கள். அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

Prize for Municipalities

* 849 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to present every year a rolling shield to the best maintained municipality in the State; and

(*b*) if so, from when?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் இக்கேடயம் வழங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ? எப்படிப்பட்ட முனிசிபாலிடிகளுக்கு இந்தப் பரிசு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தக் கேடயம் வழங்குவதற்கு நகராட்சிகளுக்கு சில விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்திற்கு 10 மதிப்பெண், போக்குவரத்துக்கு 10, கல்விக்கு 20, பொதுசுகாதாரத்திற்கு 20, தெரு விளக்குகள் 5, குடிநீர் அண்டு வடிகால் 20, வருவாய் 5, இதர வகை 5, ஆக 100 மதிப்பெண் வைத்து, அந்த அடிப்படையில்

நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, போக்குவரத்துக்கு வேண்டிய சாலை சரியாக இருக்கிறதா, கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் சரியாக செலவழிக்கப்படுகிறதா, சுகாதார வசதி சரிவர செய்துகொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற அடிப்படையை வைத்து மதிப்பெண்கள் குறிப்பீட்டை வைத்து, அதன்படி முனிசிபாலிடி தேர்ந்தெடுக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : பொது மக்களின் வரிப் பணத்தைப் பாழடித்துக்கொண்டு மோசமான முறையில் நிர்வாகத்தை சீர் கேடாக வைத்துக்கொண்டிருக்கிற மாயூரம் நகராட்சிக்குக் கடுமை யான தண்டனை விதிக்க அரசு ஆலோசிக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிச்சயம் அப்படி நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் நன்றாக நிர் வகிக்கப்படுகிற நகராட்சிக்குப் பரிசுத் திட்டம் வைத்துக் கேடயம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். மிக மோசமாக 'வொர்ஸ்டு மேனேஜ்டு' முனிசிபாலிடிகள் என்று என்னுடைய மாவட்டத்தில் கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி ஆகிய இரண்டு முனிசிபாலிடிகளும் தங்களை விட மோசமாக நிர் வகிக்க முடியாது என்று நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக் கின்றன. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு இந்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை, சிங்காநல்லூர் நகராட்சிகள் மிக மோசமாக நடைபெற்றுவருவதற்கு ஏதோ நிர்வாகத்தில் இருப்பவர்கள் மட்டும் காரணம் அல்ல. அங்கே இருக்கிற மற்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதில் ஈடுபட்ட காரணத்தினால் தான் அந்த நிர்வாகம் சரியாக செயல்பட முடியவில்லை என்று எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்னும் நல்ல முறையில் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நகராட்சிகளுக்கு மட்டும் கேடயங்கள் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் சிறப்பாக நடக்கும் பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும்

1974 ஏப்ரல் 17]

இம்மாதிரி கேடயங்கள் வழங்கக் கூடாது? அதோடுகூட, கேடயங்கள் வழங்குவதற்குப் பதிலாக அந்த நகராட்சிக்கென்று ஒரு சிறப்பான திட்டத்தை அமல்படுத்தலாமே? அவர்கள் கோரியுள்ள ஒரு திட்டத்தை உடனடியாக அரசு செயல்படுத்துவதன் மூலம் அந்த ஊர் மக்களுக்கு ஒரு நல்ல பலன் கிடைக்குமே? ஆகவே, கேடயத்துக்குப் பதிலாக ஊருக்குத் தேவையான ஒரு திட்டத்தை அமல்படுத்துவது பற்றி அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது ஸ்போர்ட்ஸ்மென்ஷிப் என்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. எல்லா நகராட்சிகளும் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்பதற்காக இது வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பரிசு மாவட்ட அளவில், மாநில அளவில் வைக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சிபற்றியும் கவனிக்கப்படும். தனியாக அதற்காக நிதி ஒதுக்கி ஒவ்வொரு ஊருக்கும் என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று பார்த்து அதைப் பரிசாக அளிப்பதற்கு இப்பொழுது இயலாது.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: சில நகராட்சிக்குள்ள வருமானம் எல்லாம் எஸ்டாபிளிஷ்மெண்டுக்கே அதிகமாகச் செலவழிந்துபோய், ஜனங்களுக்கு வசதி செய்வதற்கு காபிடல் எக்ஸ்பெண்டிச்சர் செய்வதற்குப் பணம் ஒதுக்கமுடியாத நிலையில் பட்ஜெட்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து, இன்ஸ்பெக்ஷன் செய்து வருமானத்தில் எந்த அளவுத் தொகையை ஜனங்களுக்கு அதிகமாகப் பயன்படும்படி செலவு செய்வதற்கு, காபிடல் எக்ஸ்பெண்டிச்சருக்கு எவ்வளவு பணம் ஒதுக்கலாம் என்று பரிசீலனை செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நகராட்சிகள் நிதி நிலையைப்பற்றி ஆராய்வதற்கு இப்பொழுதே ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் கிடைத்ததற்குப் பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

[1974 ஏப்ரல் 17

திருப்புவனம்—புல்வாய்க்கரை சாலை.

1 Mr. Srihari Naidu, Madras ..	Sorbitol Monitol	10,000	..
2 Mr. G. M. Swamy, Vellore ..	Salicytic	10,000	..
3 Mr. Obul Reddy	Fibre Glass	25,000	5,000
4 Mr. C. Rajendraprasad, Coimbatore.	Capacitors	13,500	1,350
5 Messrs. Sail	Sodium tripoly phosphate ..	23,500	4,700
6 Messrs. Aruna Sugars Ltd., Madras.	Writing paper	12,500	1,250

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

7 Messrs. Madras Motors (P) Ltd., Madras.	Laminates	18,000	1,800
8 Messrs. Madras Process Chemicals Limited, Madras.	Activated Calcium Carbonate (ACC).	10,000	..
9 Messrs. Industrial Instruments (P) Limited, Madras.	Rectifiers	13,500	1,350
10 Messrs. Tamil Nadu Industrial Development Coproration Limited. (TIDCO).	Fishing Trawlers Building	Approximately. 25,000	5,000
11 Thiru A. Bond Strands	Extruded fibre glass and reinforced plastic goods.	24,000	4,800
		1,85,000	25,250

The cost borne by the entrepreneurs amounted to Rs. 25,250 and the balance of Rs. 1,59,750 has been borne by State Industries Promotion Corporation of Tamil Nadu Limited as subsidy under the scheme of subsidy for feasibility studies.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

V. The following 72 industrial units have been sanctioned Central subsidy on fixed assets for a total amount of Rs. 77,18,965 under the Central Outright Grant or Subsidy Scheme of the Government of India, which State Industries Promotion Corporation of Tamil Nadu Limited is implementing as the agent of the State Government :—

	Name of the units. (1)	*Amount sanctioned.* (2)
		RS.
1	Messrs. Ramachandran Chmicals Private Limited	5,00,000
2	Sri Pondy Stone Works	19,113
3	Messrs. Joseph Table Mould Chamber Brick Works	16,970
4	,, Pandian Rubber Industries	17,644
5	,, Sri Murugan Rubber Industries	4,003
6	Karuna Popcorn Industries	259
7	Revathi Engineering Industries	3 825
8	Sholingur Textiles Limited	3 04 200
9	Sree Balraj Paper and Straw Board Mill (P) Ltd.	53,700
10	Tamil Nadu Minerals and Chemicals	1,23,209
11	Vellore Steel Rolling Mills	97,165
12	Polyspin Private Limited	93,211
13	Alamelu Machine Works	33,500
14	Arignar Anna Vanna Achagam	31,500
15	,, Srinivas Industries	25,061

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

16	Messrs Gnanagiri Brick Works	23,076
17	„ T. M. N. S. Shanmugasundaram and Company	10,948
18	„ Bara Polythene Products	9,315
19	„ Jupiter Automatic Gram Mills	9,000
20	„ Veeriaperumal Nadar and Sons	7,246
21	„ C. N. Venkatasamy	6,870
22	„ Jaya Paper Industries	5,780
23	„ Sree Meenachi Tyres	4,190
24	„ Sri Balamurugan Steel Industries Company	3,446
25	„ The Orient Processors	3,036
26	„ Lakshmi Ice Factory	2,550
27	Sri Siva Engineering	2,298
28	Messrs. Sri Rama Printing Works	2,110
29	„ Aruna Process	2,030
30	„ Paper Coaters	1,792
31	„ Raj Industries	1,614
32	„ Diamond Art Printers	1,575
33	„ Lakshmi Cutting Works	1,329
34	„ Jayanthi Printers	1,210
35	„ Sri Balamuthuswami Punching Works	588
36	„ The International Steel Furniture Industries	548
37	„ Srivatsa Engineers (Additional subsidy of five per cent)	58,713

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

	Name of the Units.	Amount sanctioned.
	(1)	(2)
		RS.
38	„ S. R.P. Tools Limited	15,00,000
39	Messrs. Thirumalai Chemicals Limited	15,00,000
40	„ Sree Karpagambal Mills Limited	6,50,250
41	„ Southern Synthetics Limited	7,40,400
42	„ Secale, Limited	6,44,000
43	„ A. Abdul Shukoor and Company	3,12,109
44	„ Thabesh Process	95,875
45	„ The Nadar Press Limited	50,253
46	„ Srinivasa and Company	86,888
47	„ J. V. Steel Rolling Mills Private Limited.	86,238
48	„ The Poornamala Process	83,018
49	„ Kala Agencies	58,987
50	„ Triveni Chemical Industries	46,613
51	„ Papco Offset Printing Works	43,609
52	„ Excel Printers	42,366
53	„ L. G. Offset Printers	33,570
54	„ The Pioneer Match Works Printing Department	32,537
55	„ Bharat Offset Printers	31,291

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

56	,,	Lovely Offset Printers	27,168
57	,,	Rainbow Offset Printers	26,729
58	,,	Krishna Offset Printers	26,564
59	,,	Limenaph Chemicals	23,503
60	,,	K. V. P. Offset Printing Works	21,751
61	,,	,The Ruby Fine Art Litho Works	17,072
62	,,	M. S. Abdulla Basha and Company	16,619
63	,,	The Raja Litho Works	14,018
64	,,	Ashok Agencies	13,772
65	,,	C. S. A. Manicka Nadar and Sons.	11,175
66	,,	Gopal Fire Works Industries	10,681
67	,,	The Orient Industries	9,167
68	,,	The Pilot Printers	6,819
69	,,	Vijay Printers	3,039
70	,,	Shahayi Mech Whites	3,026
71	,,	M. P. C. N. Industries	2,453
72	,,	Chellam Cutting Works	378
			77,18,965

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வடார்க்காடு மாவட்ட சப்ளை அண்டு மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கம்.

36 வினா—திரு கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடஆற்காடு மாவட்ட சப்ளை அண்டு மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தற்போது நடத்தப்பட்டு வரும் அங்காடிகள் எத்தனை?

(இ) அவைகளில் லாபத்தில் நடப்பவை எத்தனை?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்ட வழங்கல்-விற்பனைச் சங்கத்தின் மூலம் வேலூரில் ஒரு சிறப்பங்காடியும், வாணியம்பாடி திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் மூன்று சிறிய சிறப்பங்காடிகளும் நடத்தப் பட்டு வருகின்றன.

(இ) மூன்று சிறிய சிறப்பங்காடிகளும் ஆதாயத்தில் செயல்பட்டு வருகின்றன. முன்பு விரயத்தில் செயல்பட்ட சிறப்பங்காடி, தற்போது ஆதாயம் பெற்று வருவதுடன், இதுவரை சேர்ந்து வந்த விரயத்தை ஈடு செய்தும் வருகிறது.

(a) One Super Market at Vellore ; three Mini-Super Markets at Vaniampadi, Tiruppathur and Tiruvannamalai.

(b) All the three Mini Super Markets are working at profit. The Super Market, which had earlier incurred a loss, is now earning profits and is in the process of wiping out the accumulated loss.

Private Electricity Undertakings.

37. *Q.*—THIRU N. DENNIS : Will the Honourable the Minister for Electricity be pleased to state—

(a) the details of the Private Electricity Undertakings now functioning in this State; and

(b) the details of them which have been taken over by the Government?

A.—

(a) The Government have notified the vesting of all the seven private eletrical undertakings in Government under the provisions of the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Act, 1973. The seven private electrical undertakings are :—

(1) The Trichinopoly—Srirangam Electric Licensee.

(2) The Kumbakonam Electric Supply Corporation Limited.

(3) The Negapatam Electric Supply Company, Limited.

(4) The Vellore Electric Corporation, Limited.

(5) The Salem-Erode Electricity Distribution Company, Limited.

(6) The Tinnevelly-Tuticorin Electric Supply Company, Limited.

(7) The Shencottah Electric Supply Agency.

(b) (i) The Shencottah Electric Supply Agency vested in Government on 1st December 1973.

(ii) The Kumbakonam Electric Supply Company, Limited, the Negapatam Electric Supply Company, Limited, and the Vellore Electric Corporation, Limited, have vested in Government on 7th January 1974.

(iii) The Trichinopoly-Srirangam Electric Licensee of the South Madras Electric Corporation, Limited, the Salem-Erode Electricity Distribution Company, Limited, and the Tinnevelly-Tuticorin Electric Supply Company, Limited, have vested in Government on 1st December 1973 but they have been given time till 31st January 1974 to hand over the undertaking to Government.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டா புத்தகம் வினியோகம்.

38 வினா—திரு. த. சோணையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் விவசாயிகளுக்கு பட்டா புத்தகம் இதுவரை வழங்கப்பட்டு இருக்கிறது?

விடை—

1974 ஜனவரித் திங்கள் 31-ந் தேதி முடிய இராமநாதபுரம் மாவட்டத்தில், வட்டம், மேலும் துணை வட்ட வாரியாக வழங்கப்பட்ட பட்டா புத்தகங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

வட்டம் அல்லது துணை வட்டம்.	31–1–1974 முடிய வழங்கப்பட்ட பட்டா புத்தகங்கள்.
1. திருவில்லிப்புத்தூர்	35,018
2. இராஜபாளையம்	13,400
3. சாத்தூர்	42,330
4. விருதுநகர்	35,768
5. இராமநாதபுரம்	32,742
6. முதுகுளத்தூர்	48,771
7. கமுதி	25,285
8. பரமக்குடி	47,604
9. திருப்பத்தூர்	30,313
10. காரைக்குடி	22,150
11. திருவாடனை	58,806
12. தேவகோட்டை	10,155
மொத்தம்	402,342

Treatment for workers under E.S.I. Scheme in Private Hospitals.

39 *Q.*—THIRU N. K. PALANISWAMI : Will the Honourable the Minister for Labour be pleased to state—

(*a*) the names of private hospitals in the State where in-patient treatment was provided to the workers under the E.S.I. Scheme during the period 1972–73; and

(*b*) the extent of assistance rendered by the Government to those hospitals?

A—

(*a*) (1) Scudder Memorial Hospital, Ranipet, North Arcot District.

(2) Ramalingam Tuberculosis Sanatorium, Perundurai, Coimbatore.

(3) Rajaji Tuberculosis Sanatorium, Tiruchirappalli.

(*b*) The assistance given to the above hospitals by the Government during 1972–73 is as follows :—

(1) Scudder Memorial Hospital :

	RS.
For in-patient treatment	39,750
For out-patient treatment	9,550
For costly medicines	6,000
Total ...	55,300

(2) Ramalingam Tuberculosis Sanatorium—
For in-patient treatment only 1,28,586 00

(3) Rajaji Tuberculosis Sanatorium—
For in-patient treatment only 10,713 60

(அ) (1) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டையிலுள்ள ஸ்கடர் நினைவு மருத்துவமனை,

(2) கோவை மாவட்டம், பெருந்துறையிலுள்ள இராமலிங்கம் காசநோய் உடல்நல நிலையம்,

(3) திருச்சிராப்பள்ளியிலுள்ள இராசாசி காசநோய் உடல்நல நிலையம்.

(இ) மேற்கண்ட மருத்துவமனைகளுக்கு 1972–73-ம் ஆண்டு கீழ்க் கண்ட உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன :—

	ரூ.
(1) ஸ்கடர் நினைவு மருத்துவமனை :—	
உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சைக்கு	39,750
வந்தேகும் நோயாளிகளுக்கான மருத்துவ சிகிச்சைக்கு.	9,550
உயர்வகை மருந்திற்காக	6,000
மொத்தம் ..	55,300
(2) இராமலிங்கம் காசநோய் உடல்நல நிலையம் :—	
உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சைக்காக மட்டும் ..	1,28,586
(3) இராசாசி காசநோய் உடல்நல நிலையம்—	
உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சைக்காக மட்டும் ..	10,713,60

Flush-out Latrines in Jails.

40 Q.—THIRU N. K. PALANISWAMI : Will the Honourable the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that flush-out latrines have been constructed in jails for the convenience of the prisoners; and

(*b*) if so, the names of the jails where such convenience is provided?

A—

(*a*) Yes

(b) Names of the jails, where such convenience is povided, are given below :—

1. Central Jail, Madras.
2. Central Jail, Vellore.
3. Central Jail, Salem.
4. Central Jail, Tiruchirappalli.
5. Central Jail, Coimbatore.
6. Central Jail, Madurai.
7. Central Jail, Cuddalore.
8. Central Jail, Palayamkottai.
9. Special Sub-Jail (Men), Salem.
10. Special Sub-Jail, Kokkirakulam.
11. State Jail for Women, Vellore.
12. Borstal School, Pudukkottai.
13. Sub-Jail, Tirumangalam.
14. Sub-Jail, Salem.
15. Sub Jail, Tiruchengode.
16. Sub-Jail, Satiyamangalam.
17. Sub-Jail, Avanashi.
18. Sub Jail, Udumalpet.
19. Sub-Jail, Tuticorin.
20. Sub-Jail, Gobichettipalayam
21. Sub-Jail, Kangayam.
22. Sub-Jail, Kancheepuram.

23. Sub-Jail, Tirupathur.

24. Sub-Jail, Arknoam.

25. Sub-Jail, Cheyyar.

26. Sub-Jail, Nannilam.

27. Sub-Jail, Mayuram.

28. Sub-Jail, Tiruvaiyaru.

29. Sub-Jail, Vedasandur.

30. Sub-Jail, Melur.

31. Sub-Jail, Kumbakonam.

32. Sub-Jail, Tiruvidaimardur.

33. Sub-Jail, Sivaganga and

34. Sub-Jail, Thanjavur.

TEMPLE RENOVATION.

41 *Q.*—THIRU N. K. PALANISWAMI : Will the Honourable the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of temples in the State taken up for renovation during the calendar year, 1973;

(*b*) the amount of grant given by the Government for such renovation works; and

(*c*) the basis on which such grants were given ?

A.—

(*a*) 1,100.

(*b*) Rs. 5 (five) lakhs.

(*c*) The Government grant is sanctioned and disbursed to the poor and the needy religious institutions, when such help is absolutely necessary. The financial capacity of the villages to complete the Thiruppani is also taken into consideration.

(அ) 1,100.

(ஆ) ரூபாய் 5 (ஐந்து) லட்சம்.

(உ) வருமானம் இல்லாதவையும் நிதியுதவி தேவைப்படுவதுமான சமய நிறுவனங்களுக்கு, நிதியுதவி முற்றிலும் அவசியமாகத் தேவைப்படும் பொழுது, அரசு மானியம் அனுமதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. திருப்பணியை முடிக்க அந்தந்த கிராமங்களின் நிதி வசதியும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

HOUSES CONSTRUCTED BY STATE HOUSING BOARD.

42 Q.—THIRU N. K. PALANISWAMI: Will the Hon'ble the Minister for Labour be pleased to state—

(a) the number of houses constucted as on this date for middle income group by the State Housing Board; and

(b) the cost of their construction?

A.—

(a) The total number of houses constructed by the State Housing Board as on this date under the Middle Income Group Housing Scheme is 3,210.

(b) The approximate cost of construction is Rs. 778.42 lakhs. (Rupees seven hundred and seventy-eight lakhs and forty two thousand only).

(அ) நடுத்தர வருவாய் உள்ளோருக்கு வீட்டு வசதி வாரியத்தால் இதுவரை 3210 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(இ) அதனுடைய தோராய மதிப்பு ரூ. 778.42 இலட்சமாகும்.

TREATMENT TO WORKERS UNDER THE E.S.I. SCHEME IN GOVERNMENT HOSPITALS.

43 Q.—THIRU N. K. PALANISWAMI: Will the Hon'ble the Minister for Labour be pleased to state—

(a) the number of Government Hospitals under the Employees' State Insurance Scheme in the State which provide in-patient treatment for the period 1972–73; and

(b) the total number of beds provided in such hospitals?

A.—

(*a*) and (*b*) Three Employees' State Insurance Hospitals, 46 Government Hospitals and three Medical Institutions run by private agencies provide in-patient treatment for Employees' State Insurance patients and the total number of beds in them is 1,922. [The Employees' State Insurance Hospitals at Coimbatore, Madras and Madurai have a total bed stength of 1,127. The total number of beds in the 46 Government Hospitals where separate Employees' State Insurance wards/annexes have been constructed and those, where only beds have been reserved for in-patient treatment under the Employees' State Insurance Scheme is 694. Besides the above The Ramalingam Tuberculosis Sanatorium, Perundurai (Coimbatore). The Rajaji Tuberculosis Sanatorium, Tiruchirappalli and the Scudder Memorial Hospital, Ranipet all private institutions) provide in-patient treatment for Employees' State Insurance patients and the number of beds reserved for such purpose in those institutions are 101.]

(அ & இ) மூன்று அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனைகளிலும், 46 அரசாங்க மருத்துவமனைகளிலும், மூன்று தனியார் மருத்துவ நிறுவனங்களிலும் தொழிலாளர் ஈட்டுறுதி நோயாளிகள் உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப் படுகிறார்கள். இவற்றிலுள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 1,922. (கோவை, மதுரை, சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனைகளில் மொத்தம் 1,127 படுக்கைகள் உள்ளன. 46 அரசாங்க மருத்துவ மனைகளில் தனியாகக் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி வார்டுகள்/இணைப்புகள் ஆகியவற்றிலும் தொழிலாளர் ஈட்டுறுதி நோயாளிகட்கு உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காகவும், மருத்துவமனைகளில் படுக்கைகள் மட்டும் ஒதுக்கீடு செய்யப்படுவதன் வாயிலாகவும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 694. இவையன்றி, தனியார் துறை நிறுவனங்களான பெருந்துறையிலுள்ள இராமலிங்கம் காச நோய் உடல்நல நிலையத்திலும், திருச்சியிலுள்ள இராசாசி காச நோய் உடல்நல நிலையத்திலும், இராணிப்பேட்டையிலுள்ள ஸ்கடர் நினைவு மருத்துவமனையிலும் தொழிலாளர் ஈட்டுறுதி நோயாளிகட்கு உள்ளிருப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப் படுகிறது. இதற்காக இம்மருத்துவ நிலையங்களில் 101 படுக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.)

1974 ஏப்ரல் 17]

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்.

44. வினா.—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இப்பொழுது நடந்து கொண்டு வரும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர்?

விடை—

24—1—1974 அன்று உள்ளபடி—

ஆண்கள்	1,951 பேர்கள்.
பெண்கள்	679 பேர்கள்.

கோவையில் அரசு அலுவலகங்களுக்கான வாடகை.

45. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில அரசு பல்வேறு இலாக்காவிற்காக கோவை நகரில் மட்டும் கொடுக்கும் வாடகை 1972 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு வாரியாக எவ்வளவு?

விடை—

கோவை நகரில் மட்டும் அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள தனியார் கட்டடங்களுக்கு வாடகையாக ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை வருமாறு:

1972–73 ஆம் ஆண்டு	ரூ. 3,93,936.
1973–74 ஆம் ஆண்டு	ரூ. 4,05,456.

The annual expenditure incurred towards the payment of rent to the private buildings taken on rent in Coimbatore City for Government purposes is as follows:—

1972–73		Rs. 3,93,936.
1973–74		Rs. 4,05,456.

கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை நிலையங்கள்

46. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை நிலையங்கள் எங்கெங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

விடை—

1. Mylapore.
2. Chingleput.
3. Salem.
4. Mettur.
5. Tiruppur.
6. Udumalaipettai.
7. Coimbatore.
8. Ootacamund.
9. Thanjavur.
10. Tiruchirappalli.
11. Nagercoil.
12. Madurai.
13. R. S. Puram, Coimbatore.
14. Tuticorin.
15. Tiruchendur.
16. Palayamkottai.

1. மைலாப்பூர்.
2. செங்கற்பட்டு.
3. சேலம்.
4. மேட்டூர்.
5. திருப்பூர்.
6. உடுமலைப்பேட்டை.
7. கோயம்புத்தூர்.
8. உதகமண்டலம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 17]

9. தஞ்சாவூர்.

10. திருச்சிராப்பள்ளி.

11. நாகர்கோயில்.

12. மதுரை.

13. ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்.

14. தூத்துக்குடி.

15. திருச்செந்தூர்.

16. பாளையங்கோட்டை.

கதர்-கிராமத் தொழில் வாரியம் மூலம் மூங்கில், பிரம்புத் தொழில்

47. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூங்கில், பிரம்புத் தொழில் தற்போது கதர்-கிராமத் தொழில் வாரியம் மூலமாக எங்கெங்கே நடைபெற்று வருகிறது?

(இ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்கிறது?

விடை—

(a) (1) Shencottah, Viswanathapuram in Tirunelveli district.

(2) Kollidam in Thanjavur district.

(3) Uthukottai in Chingleput district.

(b) Rs. 64,136.

(அ) (1) திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை, விசுவநாதபுரம்.

(2) தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொள்ளிடம்.

(3) செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்துக் கோட்டை.

(இ) ரூபாய் 64,136.

மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள்.

48. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் மீன் பிடிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது எத்தனை உள்ளன?

விடை—

61.

நிலவள வங்கிகள்

49. வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசு முடிவுப்படி எத்தனை நிலவள வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன?

(இ) அவைகளுள் தற்போது செயல்பட்டு வருபவை எத்தனை?

(உ) இதுவரை, கலைக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வங்கிகள் எத்தனை?

விடை—

(அ) தமிழ் நாட்டில் அரசு முடிவுப்படி—

1968–69-க்கு முன்பு	106
1968–69-ல்	67
1969–70-ல்	56
ஆக மொத்தம்	223

ஆரம்பிக்கப்பட்டன.

(இ) எல்லா வங்கிகளும்.

(உ) ஒன்றுமில்லை.

HIND KUSHT NIVARAN SANGH.

50 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Honourable the Minister for Health be pleased to state—

(*a*) whether the Hind Kusht Nivaran Sangh has been given any grant by the Governent; and

(*b*) if so, the details of the grants given to it during the calendar years 1970, 1971 and 1972.

A

(*a*) Yes.

(*b*)

Year.	*Amount of grant given.*
	RS.
1970–71	38,708.81
1971–72	36,466.65
1972–73	28,966.65

விடை—

(அ) ஆம்.

(இ) —

	வழங்கப்பட்ட மாணியத் தொகை.
	ரூ
1970–71	*38,708.31*
1971–72	*36,466.65*
1972–73	*28,966.65*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1974 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர் மாரிமுத்து, எம்.ஏ. லத்தீப் ஆகிய மூவரும் சேர்ந்து

the serious situation arising out of the strike of 40,000 beedi workers in North Arcot district, affecting the economy of the district

என்ற பொருள் பற்றி விவாதிக்க, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை இது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து

திரு. கே. டி. கே. தங்கமணி: அவைத் தலைவரவர்களே, நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்தில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சுமார் 40,000 பீடித் தொழிலாளர்கள் மட்டும்தான் வேலைநிறுத்தம் செய்தார்கள். இப்போது கிட்டத்தட்ட மாநிலம் பூராவிலுமுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை

1974 ஏப்ரல் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் பரிபூரணமாக வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு அவர்கள் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். ஏற்கெனவே ஒரு சமயத்தில் வேலை நிறுத்தம் செய்து, அதன் காரணமாக குறைந்தபட்ச சம்பளம் நிச்சயம் செய்ய ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ஆயிரம் பீடிக்கு ரூ. 3.50 என்று நிர்ணயம் செய்திருந்தது. அப்போதே பல தொழிற்சங்கங்கள் மத்திய சங்கங்கள் எல்லாம் அமைச்சர்களிடம் வந்து, போதாது என்று முறையிட்டார்கள். நம்முடைய மாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளத்தில் இதைவிட ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே கூட சேலம் மாவட்டத்தில் அதிகமாகக் கொடுக்கிறார்கள். மைசூர் மாநிலத்திலும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் இந்தக் குறைந்த சம்பளத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

இப்போது பேச்சு வார்த்தை நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்று, சுமுகமான முடிவு ஏற்படும் என்று தெளிவாகச் சொல்வதற்கில்லை. நேற்றுகூட தமிழ் நாடு பூராவிலும் இருந்து 2,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து கமிஷனரைப் பார்த்திருக்கிறார்கள். இது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான ஒரு நிலைமையாக இருக்கிறது. வடஆற்காடு மாவட்டத்தில் முக்கியமாக இந்தத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் கடந்த 10 நாட்களுக்கு மேல் நடந்துகொண்டிருக்கிறது. அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கு எந்தவிதமான துரித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பீடி முதலாளிகள் மாதிரி பிடிவாதம் பிடித்த முதலாளிகள் வேறு எங்கும் இருக்க முடியாது. அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு அழைத்தாலும் அவர்கள் வருவது கிடையாது. இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் அவர்கள்மீது ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் பெரிதா அல்லது 100 முதலாளிகளின் தயவுதான் பெரிதா என்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். இது இப்போது ஒரு முக்கியப் பிரச்சனையாக

எழுந்திருக்கிறது. சமுதாயத்தில் பீடித் தொழிலாளர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய வருமானம் மிகவும் குறைவு. நிம்மதியற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நான் அவர்களைக் குறைந்த பட்ச சம்பளம் பெறும் தொழிலாளர்கள் பட்டியலில் சேர்த்திருக்கிறோம்.

அவர்களுக்குத் தற்போது பாதுகாப்பு இல்லை. அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பைக் கொடுப்பதற்கும் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்வதற்கும், வேலை நிறுத்தத்திற்கு ஒரு முடிவு ஏற்படுவதற்கும் பரிகாரம் காணும் வகையில், இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே மிகக் குறைந்த ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள் பீடித் தொழிலாளர்கள். அவர்கள் இப்போது ஒரு பெரிய போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள். இப்போதுதான் இந்தப் போராட்டம் நடைபெறுகிறதா என்றால் இல்லை. கடந்த பல ஆண்டுகளாகவே வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் வேண்டுமென்று நாடு பூராவும் கிளர்ச்சிகள் செய்து, கூட்டங்கள் போட்டு, தீர்மானங்கள் போட்டு, போராட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இன்றைய தினம் விலைவாசி ஏறியிருக்கக்கூடிய நிலையில் மிகக் குறைந்த ஊதியம் பெற்று வந்தவர்கள், போதாது என்று போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. போராட்ட காலத்தில் எந்தவிதமான ஊதியமும் கிடையாது. லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படும். ஆகையால் அரசாங்கம் தலையிட்டு இதற்கு ஒரு நிரந்தர பரிகாரம் காண ஏற்பாடு செய்ய வேண்டும்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இதில் ஒருகாலத்திலும் நிரந்தரமான ஏற்பாடு செய்ய முடியாது என்று நினைக்கிறேன். இப்போது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. சின்னச் சின்ன அளவிலே தொழில் நடத்திக்கொண்டிருக்கிற சில முதலாளி களும் இருக்கிறார்கள்; பெரும் முதலாளிகளும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒரு முடிவு எடுப்பதில் சிரமங்கள் இருக்கலாம். இருந்தாலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் பிரச்சனையாக இது இருப்பதால், அரசாங்கம் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி, முடிவு செய்ய வேண்டும். நியாயமான கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கடந்த 9—4—1974 முதல் தமிழ்நாடு பூராவும் இருக்கின்ற பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். சாதாரணமாக, ஒரு நாளைக்குக் கூலி பெற்றால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலையில் இருப்பவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் எந்தவிதமான கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கி றார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் நாடு முழுவதும் உள்ள பீடித் தொழிலாளர்கள் சுமார் 2½ லட்சம் பேர் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 2½ லட்சம் தொழிலாளர்கள் என்றால் அவர்களை நம்பி இருக்கின்ற அவர்கள் குடும்பத்தினர் 8 லட்சம் பேர் இருப்பார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் பட்டினி கிடக்கக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலைமை உருவாகி இருக்கிறது.

பீடித் தொழிலாளர்களில் பலர் இன்றைக்குக் கூட சென்னைக்கு வந்து அவர்கள் கோரிக்கைகளுக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது வரை எந்த விதமான நியாயமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

பீடி முதலாளிகள் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை முதலில் பார்த்துக் கொள்வோம் என்று அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

அவர்கள் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற அளவிலேயே காலத்தை நீட்டிக் கொண்டு போவார்கள். முடிவு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உருவாகாது. அப்படிக் காலம் நீண்டு கொண்டே போனால் சுமார் 10 லட்சம் மக்கள் பட்டினி கிடந்து சாவார்கள்; அமைதி கெடும்; ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகும்.

1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழில் சட்டம் இருக்கிறது. இதை இதுவரை அமுல்படுத்தவில்லை. அதுபற்றி ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டும் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. இருந்த போதிலும் அதை அமுல்படுத்த பீடி முதலாளிகள் முன்வரவில்லை. இன்றைக்கு ஆயிரம் பீடிக்கு 3½ ரூபாய் கூலி கொடுக்கிறார்கள் என்றால் ஒரு தொழிலாளிக்கு ஒரு நாள் பூராவும் வேலை செய்தால் தான் 1,500 பீடி சுற்ற முடியும் என்றால், அதிகபட்சம் 6 ரூபாய் தான் சம்பாதிக்க முடியும். ஒரு குடும்பத்தில் 8 பேர், 10 பேர் இருந்தால் இந்த 6 ரூபாயைக் கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? அதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதிகமாக வற்புறுத்தினால் முதலாளிகள் அண்டை மாநிலங்களுக்குத் தங்களுடைய தொழிலை மாற்றிவிடக் கூடும் என்று பதில் சொல்லப்படுகிறது. அப்படி ஒன்றும் நடக்காது. ஆகையால் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்ன மாதிரி 100 முதலாளிகளின் தயவு பெரிதா அல்லது 10 லட்சம் மக்களின் வாழ்க்கை பெரிதா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்தப் பிரச்சனையில் மந்த நிலை இருக்கக் கூடாது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனை ; 10 லட்சம் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனை. ஆகவே இதைப்பற்றி தீவிரமாக விவாதித்து, உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக சபையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இம் மாநிலத்திலுள்ள பீடி, சுருட்டு ஆகிய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ., எல்.பி.எப்.; ஏ. டி. யூ. ஆகிய பல்வேறு தொழிற்சங்கங்களோடு இணைந்து

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

9—4—1974 முதல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்னிட்டு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக வேலை நிறுத்த அறிக்கைகள் விடுத்துள்ளனர் :—

(1) 1,000 பீடிகளைச் சுற்றுவதற்குக் குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் ரூ. 5.75.

1,000 சிறிய அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 10.

1,000 நடுத்தர அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 12.

1,000 பெரிய அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 15.

(2) தனியாக பஞ்சப்படி அளித்தல்.

(3) வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்வது (பீடித் தொழிலாளர்களின் கோரிக்கை) வேலையில்லாத நாட்களுக்கு ஈட்டுத் தொகை கொடுப்பது.

(4) பீடி, சுருட்டுத் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966 அமுலாக்குதல் (வேலை தருவதற்குரிய விதிமுறைகள்) முதலியன.

சுருட்டு: இத்தொழிற்தகராறு 8—4—1974 அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சுருட்டு உற்பத்தித் தொழிலாளர் எழுப்பிய தகராறுபற்றி சென்னை துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (ஆய்வுப் பிரிவு), உதவித் தொழிலாளர் ஆணையாளர் முன்னிலையில் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாகத் தொழில் தகராறு சட்டம் 1947, 12(3) பிரிவின்கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி 1,000 சுருட்டுகள் சுருட்டுவதற்கு எந்த அளவானாலும் தற்போதுள்ள ஊதியத்திற்கு மேலாக இடைக்கால ஊதிய உயர்வாக ரூ. 1 9—4——1974 முதல் தமிழ் நாட்டில் உள்ள எல்லா இடங்களிலும் வேலை செய்யும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் அளிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இந்தத் தற்காலிக நிவாரணத்தின் பயனாக சங்கங்கள் வேலை நிறுத்த அறிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டுள்ளன. மேலும் இரு தரப்பினரும் சம்பள விகிதத் திருத்தம் பற்றி துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (ஆய்வு) அவர்கள் முன்னிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் கூடிய விரைவில் நடத்துவார்கள்.

சுருட்டுத் தொழிற்சாலைகளில் இந்த ஒப்பந்தத்தின் பலனாக வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் (வேலை அளிப்பதற்கான விதிமுறைகள்) அமுலாக்குதல்: தொழில் ஆய்வாளர்கள், உதவித் தொழில் ஆய்வாளர்கள் அனைவரும் பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் 1966 (வேலை அளிப்பதற்கான விதி முறைகள்) அமுல்படுத்தும்படி ஏற்கனவே அறிவுறுத்தப் பட்டிருக்கின்றார்கள்.

பீடி: பீடித் தொழிற்சாலைகளில் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 5.75-ம் தனியாக பஞ்சப்படியும் தரப்பட வேண்டுமென்று சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசு ஆணை 415, தொழிலாளர் & வேலை வாய்ப்புத் துறை தேதி 18-6-73-ல் புகையிலை பீடித் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதிய விதத்தை இவ்வரசு அறிவித்துள்ளது. அதன் விபரம் கீழ் வருமாறு:—

1,000 ஜாடி பீடிகள் எந்த அளவாயினும் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.50.

1,000 சாதா பீடிகள் எந்த அளவாயினும் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.25.

1,000 சிறிய அளவு முக்கூடல் பிரிவைச் சார்ந்த பீடிகள் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.25.

பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கான (எந்த அளவு பெயர்ச் சீட்டு ஒட்டுவதாயினும்) ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. 2.65 அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 68.90.

அடுத்த சம்பள விதி திருத்தம் 1-7-74 முதல் அமுல்படுத்தப் படும். இதுபற்றி நடவடிக்கை தனியாக எடுக்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

8-4-1974 அன்று நடந்த விரிவான விவாதத்திற்குப் பிறகு சங்கம் 1,000 பீடி சுருட்டுவதற்கு குறைந்த பட்சம் ரூ. 1.50 இடைக்கால நிவாரணமாக அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. இந்தக் கோரிக்கைக்கு நிர்வாகம் கலந்து ஆலோசனை செய்ய அவகாசம் கேட்டுக் கொண்டுள்ளது. இருந்த போதிலும் பீடித் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்த அறிக்கையின்படி 9-4-1974 முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

மேலும் இந்தத் தொழிற் தகராறு சம்பந்தமாக 16-4-1974 அன்று பேச்சுவார்த்தை நடக்கவிருந்தன. ஆனால் அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் பீடி முதலாளிகள் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் வேலைநிறுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது சமரசப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கில்லை என்று கூறி பேச்சு வார்த்தைகளை ஒத்திப் போடும்படி கூறியிருக்கிறார்கள். ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ., ஐ.என்.டி.யூ.சி, லேபர் புரோக்கிரசிவ் பெடரேஷன், அண்ணா தொழிலாளர் யூனியனைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்கள். மறுபடி பேச்சுவார்த்தை 20-4-1974 அன்று நடக்கவிருக்கிறது. பீடி முதலாளிகளையும் கலந்து கொள்ள கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 20-ந் தேதி பேச்சு வார்த்தை தொடர்ந்து நடக்கும் என்று சொல்லுகிறார்கள். 9-4-1974-லிருந்து வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் கூலி பெற்றால் தான் அவர்கள் சாப்பிட முடியும் என்ற நிலையில், முதலாளிகள் வேண்டுமென்று இதைத் தள்ளிப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 20-ந் தேதி பேச்சு வார்த்தை நடக்கும் என்று சொல்லியிருப்பதால், அவர்களுக்கு ஒரு நாள் குறைந்தபட்சக் கூலியாவது, வேலை செய்தாலும், வேலை செய்யாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு ஆர்டினென்ஸ் போடுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான ஆர்டினென்ஸ் போடுவதற்கு வழிவகை இருக்கிறதா என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தப் பேச்சு வார்த்தையை விரைவில் முடிக்க வேண்டுமென்று நான் 3 நாட்கள் முன்னதாக வேலூருக்குப் பக்கத்தி

விருக்கிற நம் தோப்பூர் திருவேங்கடத்தின் தொகுதிக்குப் போகின்ற நேரத்தில் கூட, தொழிலாளிகளைச் சந்தித்தேன். அவர்களிடத்தில் நான் இதைப்பற்றிப் பேசி, மாவட்ட ஆட்சித் தலைவரோடு கூட அன்று கலந்து கொண்டு விரைவில் பேச்சு வார்த்தை முடிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறேன். அதற்காக துணைத் தொழில் ஆணையாளர் அவர்கள் போயிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் அந்தப் பேச்சு வார்த்தை முடிவுறும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய தேவை யில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கின்றேன்.

(ஆ) பக்கிங்காம்-கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. எம். சுப்பிரமணியம், ஆர். பொன்னப்ப நாடார் ஆகிய இருவரும் சேர்ந்து

stay-in strike by Buckingham and Carnatic Mill Staff Union from 19th April 1974 on the basis of charter of demands which hampers the working of the Mills resulting in serious consequences.

என்ற பொருள் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை இது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து சில நாட்களாயிற்று. இந்த இடைவேளையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பது எல்லாம் அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். அங்கிருக்கின்ற அந்த ஸ்டாஃப் யூனியனுடைய அவர்களின் சில நிபந்தனையின் அடிப்படையில் அவர்கள் உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

முன்பு அவர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் பல தீர்மானங்கள் கொடுத்தும், பல தடவை நிர்வாகத்தை நேரடியாகச் சந்தித்தும், அவர்களுக்கு எந்தவித முடிவும் வரவில்லை என்ற காரணத்தினால், அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு, கட்டாயமான தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள். பொதுவாக இன்றிருக்கின்ற விலைவாசி அடிப்படையில் அவர்களுக்குப் பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. சம்பள விகிதம் குறைவாக இருக்கிறது. பஞ்சப்படி குறைவாகயிருக்கிறது.

அது மட்டுமின்றி அவர்களுக்கு ஓய்வு போன்ற சலுகைகள் காலா காலத்தில் கிடைக்கவில்லை என்று பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் இங்கு எடுத்து விரிவாகக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை.

பொதுவாக இந்த நிறுவனமானது பெரிய நிறுவனமாக இருக்கின்றது. அதிலும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் இந்த மாதிரி வேலை நிறுத்தம் போன்ற முடிவுகள் ஏற்படுமானால், இது மாநிலத்தை வெகுவாகப் பாதிக்கும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இது அண்மையில் நடந்த பஞ்சாலைத் தொழில் போராட்டத்தில் ஒரு பகுதியாக இருப்பதால் இதற்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்தைச் சேர்ந்தது என்ற காரணத்தினால் இந்த அவசரப் பொது முக்கியத்துவமான நிலைமையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கூறி, இத்தோடு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, so far as the B & C Mills is concerned, it is on a different footing than other Mills. There are two organisations one for labour and another for clerical staff organisation. The clerical staff organisation consists of not a small number but about 1,300 people. There was 42 days' strike in the mills but fortunately due to the good interference of the Minister for Labour, the strike ended. We were all happy that the mill would work well.

But unfortunately taking advantage of the labour strike, another thing has happened. The remuneration that is applicable to the clerical staff in the same management working outside

the mill is treated on a different level and clerical staff working inside the mill is treated on a different level. Ultimately what has happened?

When demands were made, it is the duty of the enlightened management to call the leaders and have discussion. But nothing happened and today after I gave the adjournment motion I understand that there has been a lockout. The entire working of the mill, the fulcrum, the centre of working, is on the clerical staff. It is the clerical staff who have to supply the cotton, who have to take note of the work load, etc. The mill cannot work without them.

So, it is very necessary that we should adjourn the House and discuss it so that the fate of 13,000 to 14,000 direct labour and about 10,000 others who are indirectly employed may not be affected.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சென்னை பின்னி லிமிடெட் (பிரிவு பி அண்ட் சி மில்ஸ்)-இல் 1,200 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். பின்னி லிமிடெட் (பிரிவு பி அண்ட் சி)-இல் பணிபுரியும் ஊழியர்களால் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி இவைகளை சீராய்வுக்குட்படுத்தும்படி எழுப்பப் பட்ட தொழில் தகராறு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பஞ்சாலை களின் பணிபுரியும் ஊழியர் அனைவரின் ஊதியம், அகவிலைப்படி இவற்றை சீராய்வுக்குட்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப் பெற்ற சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அரசு ஆணை எண் 206, தேதி 2—2—1974-ல் இவ்வரசு ஆணையிட்டது.

மேற்கூறிய குறிப்பில் பி. அண்ட். சி. மில்லில் பணிபுரியும் ஊழியர்களும் ஒரு பிரிவைச் சார்ந்தவர்களாவர். ஆனால் சங்கம் தங்களுடைய 7—3—1974 தேதியிட்ட வரைவில் தங்களுக் கும் நிர்வாகத்தினருக்கும் இடையே எந்தவிதத் தகராறும் இல்லாததால் சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்தின்முன் வர இயலாது என்று சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்திற்கு அறிவித்தது. இருந்தபோதிலும், சிறப்புத் தொழிலாளர் தீர்ப் பாயம் தனது தீர்ப்பை வழங்கியது. பின்வரும் கோரிக்கைகளைக்

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

குறித்து பி. அண்ட். சி. மில் ஊழியர் சங்கம் அறிக்கை விடுத்த 14 நாட்கள் கழித்து வேலைநிறுத்தம் செய்யப் போவதாகத் தனது 1—4—1974 தேதியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

1. அகவிலைப்படி சீராய்வு.
2. இரவு நேரப் பணிக்கான படி.
3. ஊதியத்திற்கான நிறையிட்டல்.
4. சம்பள விகித சீராய்வு.
5. ஊதிய உயர்வு விரிவாக்கல்.
6. வீட்டு வாடகைப்படி.
7. ஈ. எஸ். ஐ-யில் வராத ஊழியருக்கு மருத்துவச் செலவைத் திரும்பப் பெறும் சலுகை.
8. வருகைப் பதிவேட்டில் சலுகை நேரம் அளித்தல்.
9. சிறப்பு விடுப்பு.
10. பண்டிகை விடுப்பு.
11. உயர்ந்த பதவிக்கான பதவி உயர்வு.
12. பாதிக்கப்படாமலிருப்பதற்கான விதிமுறைகள்.

பி. அண்ட் சி. மில்ஸ் ஊழியர் சங்கத்தினரால் விடுக்கப்பட்ட வேலை நிறுத்த அறிக்கை குறித்து சென்னை தொழிலாளர்கள் அலுவலர்-1, சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர். மேற்கூறிய கோரிக்கைகள் குறித்து முன்னறிவிப்பு கொடுத்து 14 நாட்கள் கடந்து போகும் முன் 10—4—1974 முதல் ஊழியர் வேலை நிறுத்தம் செய்தனர். அதன் விளைவாக 11—4—1974 முதல் நிர்வாகத்தினர் மின்சார ஊழியர்களையும் சேர்த்து ஒரு பகுதியினருக்குக் கதவடைப்பு செய்தது. சமரசப் பேச்சு வார்த்தையின் விவர அறிக்கை பின்னால் எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) அரிசனத் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லையென்று அரிசன நலத்துறை அமைச்சர் பொதுக் கூட்டத்தில் பேசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள்

"That the Hon. Minister for Harijan Welfare has said in a public meeting on 13th April 1974 in Madras as follows: "Let the Harijan mothers have no family planning but bear as many children as possible and to take a vow to wreak vengeance against those trying to suppress us". This statement of the Hon. Minister for Harijan Welfare is against the national policy of the Centre and the Tamil Nadu and dangerous to the country",

என்பதாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவிற்கு முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் 13—4—1974-ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் சிலை திறப்பு விழா நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் . . .

3. நடைமுறைக் கேள்வி.

அரிசன நலத்துறை அமைச்சர் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குறித்து பொதுக்கூட்டத்தில் பேசியதை ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் எழுப்பலாமா என்பது குறித்து.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, on a point of order. (Interruption). I am raising a point of order, Sir, even assuming that the reported speech was made by the Hon. Minister, how can it attract the Rules of our Assembly to bring in an adjournment motion and how is the Hon. Speaker allowing the notice to be taken up in the House?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is a national policy that there should be Family Planning and the Centre and State are spending crores and crores of money on it. When a

Minister without realising the collective responsibility of the Cabinet preaches against the policy, it is definitely a matter of urgent importance. What else is it then?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, . . .

THIRU M. A. LATHEEF: No doubt in the Ministry any Minister is responsible because of the concept of collective responsibility. But no statement was made by the Hon. Minister for Harijan Welfare which is a policy statement and it was not made on the floor of the House. It was an individual opinion made by an individual, Mrs. Sathyavani Muthu and not by the Ministerfor for Harijan Welfare who is a member of the Cabinet. Family Planning is only a policy, not a Constitutional mandate. It is only a national policy. Therefore, there is no question of bringing in the concept of Cabinet joint responsibility in this.

THIRU R. PONNAPPA NADAR: May I make a submission, Sir? (Interruption). Sir, I want to make a submission. Sir, so far as this important matter is concerned, I think it would be well advised that the policy statement always emanates from the Chief Minister. The Hon. Minister for Harijan Welfare is reported to have made a speech; whether that speech is justified or not is not the question which is now being discussed here.

As a responsible member of the Cabinet, there could be no place for any Minister to make an individual opinion in public utterances. If that is done, it is likely to be misconstrued as the opinion of the Cabinet. That is the reason why this important motion given notice of by our party member, Mr. James arises, and I think there is nothing inappropriate in the matter being discussed now.

Further, the Hon. Speaker has given Mr. James permission to explain how the matter comes within the ambit of the Rules. There is therefore no further point in discussing about it.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை வைத்துக் கொண்டு இங்கு உறுப்பினர்கள் எல்லாம் இந்தப் பிரச்சனைகளைக் கிளப்புகிறார்கள். (திரு. வி. கிருஷ்ண மூர்த்தி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. கோவை செழியன் : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அவர்கள் ஏற்கெனவே இந்த மன்றத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள்—அதைத்தான் அங்கும் சொல்லியிருக்கிறார்களே தவிர—நாட்டுக்கு விரோதமாக இருக்க வேண்டுமென்று பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கோவை செழியன் : எப்படி நான் பேசி முடிவதற்குள் இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்ல முடியும்?

திரு. முனு ஆதி : மற்றவர்களை எல்லாம் பேசச் சொன்னீர்கள். எங்கள் கட்சி உறுப்பினரை மட்டும் உட்கார் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள். அவரையும் பேசச் சொல்லித்தான், பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று பிறகு சொன்னேன். . .

திரு. கோவை செழியன் : திரு. லத்தீபைப் பேசச் சொன்னீர்கள். நாங்கள் எங்கள் கருத்தை அவையில் எடுத்துச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன? அவையில் இதை எழுப்பக் கூடாது என்பது தானே? அவர்கள் இந்த அவையில் முன்பு சொன்ன கருத்துக்களுக்கு எல்லாம் ஏன் போகிறீர்கள்?

1974 ஏப்ரல் 17]

திரு. கோவை செழியன்: அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். இதை இந்த அவையில் அட்ஜர்ன்மெண்டு மோஷனுக்க் கொண்டுவந்திருக்கக் கூடாது. அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் பேசின கருத்தைத்தான் முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கவேண்டுமென்ற முறையில் அங்கே பேசியிருக்கிருர்கள். நானே முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றிக் கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லே.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லே. உட்காருங்கள். திரு. கே. டி. கே. பேசுவார். (திரு. முனு ஆதி எழுந்திருந்தார்.) நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோவை செழியன்: உட்கார், உட்கார் என்று எங்களேப் பேச அனுமதிக்கமாட்டீர்கள் என்ருல் நான் இந்த அவையில் இருந்து வெளிநடப்பு செய்ய வேண்டியதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டரைப் பற்றிச் சொன்னுல் ஆட்சேபனே இல்லே.

திரு. கோவை செழியன்: திரு. லத்தீப் பேசினுர்களே.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: அவர் எழுப்பியதும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லே என்று சொல்லிவிட்டேன்.

திரு. கோவை செழியன்: நான் சொல்வதை ஏன் கேட்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலேவர்: தாங்கள் சொல்வதைச் சொல்லியாகிவிட்டது. திரு. கே. டி. கே. தங்கமணி.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக 42-வது விதியைப் பொறுத்தவரையில் இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று முடிவு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. வெளியில் தனிப்பட்ட அமைச்சரோ, தனிப்பட்ட உறுப்பினரோ பேசினுர் கள் என்று சொன்னுல்--முறையாக இந்தச் சபைக்கு அந்த விஷயத்தைக் கொண்டுவர வேண்டுமென்ருல்--அவர் இந்த அவையை அவமதித்ததாக—ப்ரிவிலேஜ் மோஷனைக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்குமே தவிர அட்ஜர்ன்மெண்டு மோஷனைக் கொண்டு வருவது சரியல்ல என்பது என் கருத்து. நாளேக்கு இதுபோல வேறு ஒரு உறுப்பினர் மீது கூடக் கொண்டு

வரலாம். வேண்டுமென்றால் இதை ப்ரிவிலேஜ் மோஷனாகக் கொண்டு வரலாம், அதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE: I am raising a valid point, Sir, I am not going into the politics of the whole thing. What I say will help the Hon. Speaker to arrive at a decision.

Sir, the practice has been this. Whenever we give notice of adjournment motions, they are disposed of in three ways. Firstly, the Hon. Speaker sends a communication to us saying that the matter could not be raised as there is no direct involvement of the Government in it. Usually, he sends a letter.

Now, in allowing this matter to be taken up for discussion or explanation so that the Hon. Speaker could decide whether the motion is to to be admitted or not, he has not sent a communication to the hon. Member disallowing it.

The hon. Member, Krishnamoorthy has rightly raised the point of order and he has raised a very valid point of order. The Speaker could have sent a communication, if he had felt that the matter does not involve direct administration of the Government and sent a communication.

(டே டு டே அட்மினிஸ்டிரேஷன் கிடையாது)

The Hon. Speaker has not done it.

He had sent similar communications on several occasions. The fact that the Speaker has allowed the matter to be brought to the House indicates that the Speaker feels that there is responsibility of the Government. Otherwise, he could have raised that it was not in order. On that score I do not say that all adjournment motions should be disposed off in his chamber.

ஹாண்டே அப்படிச் சொன்னார் என்று தள்ளி விடாதீர்கள்.

Therefore I feel that Mr. Krishnamoorthy and Mr. Chezhian have raised very valid points. And a little heat also had been brought in. Therefore, if the Hon. Speaker gives a ruling that this is a matter of urgent public importance, it would be helpful. Otherwise, he would have sent a communication.

1974 ஏப்ரல் 17]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ரூல் 50 பிரகாரம் Sub-clause-x இல் கூறப்பட்டிருப்பது 'A motion must refer that the responsibility of the Government is cleary involved' அப்படியிருந்தால் கொண்டுவரலாம். அப்படி இருக்கிறதனாலே தான் தாங்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு பேச அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இது பற்றி அதிகப்படியான விவாதம் இல்லாமல், எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களை அதுபற்றிப் பேச அழைக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணை சரியானதா இல்லையா என்பதுபற்றி இங்கே பல கருத்துக்கள் பேசப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு என்பது அரசாங்கத்தால், மத்திய அரசால், மாநில அரசால் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. இந்தக் கொள்கையை அமுலாக்குவதற்கு அமைச்சரவை முக்கிய பங்கெடுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறது. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை நடைமுறையிலே காரியங்கள் ஆற்றிவருகிறபொழுது, இந்த அமைச்சரவையிலே இருக்கிற ஒரு அமைச்சர் இதற்கு மாறான கருத்தைக் கூறுவது எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தைக் கருத்திலே கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற ஒரு திட்டத்திற்கு எதிரான கருத்தை நாட்டிலே நிலவவிடுவது, பொருளாதாரத்தை சீர்குலைத்துவிடுகின்ற நடவடிக்கையாகிவிடும். ஆகவே, இதை, அட்ஜெர்மெண்ட் மோஷனில் கொண்டுவராமல் வேறு எப்படிக் கொண்டு வரலாம்? ஆகவே, கனம் தலைவர் அவர்கள் இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU V. KRISHNAMOORTHY: It is not violation of the policy of the Government and how can it come under an adjournment motion?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினுர்கள். அதற்காகச் சொல்ல வரவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கின்ற நேரத்திலே, முடிவெடுக்கின்ற நேரத்திலே, அறையிலேயே பேரவைத் தலைவர் அவர்களுக்குத் திட்டவட்டமாக, இதை மறுக்கலாம் என்ற காரணமிருந்தால், அதற்கு அறையிலேயே கூட அனுமதி மறுத்திருக்கலாம். கொஞ்சம் சந்தேகம் வந்து அவையிலே எழுப்பலாம் என்ற அளவில், உறுப்பினரிடத்திலே விளக்கமும், அமைச்சரிடத்திலே விளக்கமும் பெற்று, பிறகு அதைப்பற்றிய முடிவெடுப்பது ஒரு முறை. அந்த முறையிலே, இரண்டாவது முறையில், இது அவைக்கு வந்திருக்கிறது. இது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வரக்கூடியதா என்பதல்ல. இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கக் கூடிய அளவு உள்ளதா, அல்லது இதற்கு அனுமதி மறுக்கலாமா என்பதை விவாதிப்பதற்குத்தான் இப்பொழுது கேட்கப்பட்டதே தவிர, அவையிலே இதை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது என்ற கருத்திலே எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(இ) அரிசனத் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லையென்று அரிசன நலத் துறை அமைச்சர் பொதுக்கூட்டத்தில் பேசியது குறித்து.—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் 13—4—1973-ந் தேதியன்று டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலைத் திறப்பு விழாவின்போது ஆற்றிய உரையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைபிடிக்கத் தேவை இல்லை, அத்தோடு தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள் அதிகமான குழந்தைகளைப் பெற்று, அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எதிராக இருக்கிற சக்திகள் மீது ஒரு போராட்டம் நடத்த நான் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன்—அதற்கு நான் தலைமை தாங்க இருக்கிறேன்—அதற்காகப் போராட்ட வீரர்கள்

டாக்டர் எச். வி. ஹாண்டே : மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது; இல்லை யென்று சொல்லவில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து ஆக வேண்டும். இதுவரையிலே அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது குறித்து அம்மையார் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள், நான் விளக்கம் தரத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த விளக்கமே நல்ல விளக்கமாக அமைந்திருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப்பேரவை 50-வது விதியில் 6-வது பிரிவில் " The motion shall not raise a question of privilege " என்று இருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி பேசப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டு தீர்ப்புக் கொடுக்கப்பட்டாகிவிட்டது, உட்காருங்கள்.

அடுத்து, திரு. லத்தீப் அவர்களும் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) கௌரவ மாநகர மாஜிஸ்ட்ரேட் நியமன முறையை மாநில அரசு எடுத்து விடுவது குறித்து

THIRU M. A. LATHEEF : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the decision of the State Government to abolish the system of Honorary Presidency Magistrates from 1st April 1974 as a result of the recent Central Government's order and the need to continue the practice of appointing Honorary Magistrates.

1974 ஏப்ரல் 17]

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the decision of the State Government to abolish the system of Honorary Presidency Magistrates from 1st April 1974 as a result of the recent Central Government's order and the need to continue the practice of appointing Honorary Magistrates.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகளை நியமனம் செய்யவும் சென்னை மாநகருக்கு வெளியே மாவட்டங்களில் தனி மாஜிஸ்டிரேட்டுகளை—இவர்கள் எந்த தரத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்—நியமிக்க 1898-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அதாவது, தற்போதுள்ள கி.பு.கோ.) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. இவர்கள் ஊதியம் பெறாத மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பின் நேர்வுக்கேற்ப, கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் அல்லது கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் என அழைக்கப்படுகின்றனர். சென்னை மாநகரிலும் வெளி மாவட்டங்களிலும் மாஜிஸ்டிரேட் ஆயங்களை (Benches of Magistrates) அமைக்கவும் மேற்படி விதிக்கோவை அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட் நியமனத்திற்கு குறிப்பிட்ட தகுதி எதுவும் தற்போதைய விதிக்கோவையில் வரையறுக்கப்படவில்லை. ஆனால், தகுந்த நிலையிலுள்ளவர்களும் கல்வித் தகுதியுடையவர்களும் சட்டங்களின் பொருளுணர்ந்து இரு தரப்பினரிடையேயுள்ள வழக்கைப் புரிந்து கொண்டு முடிவு செய்யக் கூடியவர்கள் தான் இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமனம் பெற ஒருவர் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது, கல்வித் தகுதிகளையும் ஏனைய தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் அரசு ஊழியராகவோ பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியராகவோ இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அவர் அரசுச் சார்பற்றவராகவும் இருக்கலாம்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1974) 1898-ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பதிலாகச் செயலுக்கு வரும். தனி மாஜிஸ்டிரேட்டுகள் நியமனம் குறித்து புதிய சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மாஜிஸ்டிரேட்டு ஆயங்கள் எடுத்துவிடப்பட்டுள்ளன. ஆயினும், மாநகரில்

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 17

மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகளையும் வெளியூர்களில் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளையும் நியமனம் செய்ய அரசுக்கு உரிமையுண்டு. ஆனால், தற்போது பணியிலுள்ள அரசு ஊழியர்கள் அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் ஆகியோர் மட்டுமே இந்த நியமனம் பெறத் தகுதியுடையோராவர். மேலும் அவர்கள் உயர்நீதிமன்றம் விதிகள் பிறப்பித்து நிச்சயிக்கக்கூடிய சட்டக் கல்வித் தகுதியை அல்லது சட்ட விவகாரங்கள் குறித்த அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசு அல்லது மாநில அரசு வேண்டுகோள் விடுத்தால், உயர்நீதிமன்றம், நிர்ணயிக்கப்பட்ட தகுதியுடையோருக்கு அத்தகைய மாஜிஸ்டிரேட் அதிகாரங்களை வழங்கும்.

தற்போதைய சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள கௌரவ தனி மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், தனி மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோர் பதவியிலிருப்பது 1—4—1974 அன்று அற்றுப் போகும். புதிய அமைப்பின் கீழ் மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகள், நீதித் துறை தனி மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோரின் நியமனத்திற்கான தகுதிகளை வரையறுக்க உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத் துள்ளது. இப்பொழுது தேவைப்படக்கூடிய அளவுக்கு விதிகளின் கீழ் தகுதியுடையோருக்கு மாநகர தனி மாஜிஸ்டிரேட்டுகள் அல்லது நீதித்துறை தனி மாஜிஸ்டிரேட்டுகளின் அதிகாரங்களை வழங்குமாறு அரசு உயர்நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளும்.

மாஜிஸ்டிரேட்டு ஆயங்களை அமைப்பதற்கான அதிகாரம் புதிய சட்டத்தினால் எடுத்துவிடப்பட்டதே தவிர, கௌரவ மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், கௌரவ தனி மாஜிஸ்டிரேட்டுகள் எனப்படும் பதவிகளை எடுத்து விடவில்லை என்பது நான் கூறிய வற்றிலிருந்து தெளிவாகும். மாறாக, இவ்விரு பதவிகளும் புதிய அமைப்பிலும் தொடர்ந்து இருந்து வரும். பணியிலுள்ள அரசு ஊழியர்கள் அல்லது பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியர் கள் மட்டுமே இப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டு மென்பதும், நியமனம் செய்யப்பெற விழைபவர்கள் உயர்நீதி மன்றம் வரையறுக்கக் கூடிய சட்டக் கல்வித் தகுதி அல்லது சட்ட விவகாரங்களில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இந்த நியமனம் குறித்து செய்யப்பட்டுள்ள மாற்றங்களாகும்.

1974 ஏப்ரல் 17]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் என்பது மாநில அரசினுடைய பொறுப்பாகும். இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிற முறைப்படி, சமீபத்திலே பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே, கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் எல்லாம் 1—4—1974 லிருந்து அவர்களுடைய பதவிகளை இழந்துவிடுவார்கள் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடியவர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறவர்கள். அதே நேரத்திலே அரசுத் துறையிலே வேலை செய்தவர்கள், அரசுத் துறையிலே வேலை செய்து பணியாற்றியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பதவிக்குப் போதிய அளவிற்குச் சட்டத் துறையிலே நீதி நிர்வாகத்திலே கல்வி வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை.

ஆனால், சிலர் சமுதாயத்திலே அவர்களுக்கு இருக்கின்ற கௌரவத்தின் காரணமாக மக்களுடைய பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, மக்களால் மதிக்கப்படுகிறவர்களாக அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டு வந்தார்கள். மக்கள் தங்களுக்குத் தாங்களே நீதி வழங்கிக் கொள்கின்ற முறை இருக்கிறது என்ற நல்ல எண்ணம் இருந்தது.

அவர்கள் 'பெட்டி கேஸஸ்' என்று சொல்லப்படுகின்றவைகளைத்தான் நடத்தி வந்தார்கள். அதற்கு அதிகமான சட்டப் பயிற்சி தேவையில்லை. பாராளுமன்றத்திலே அப்படி ஒரு சட்டத்தை அவர்கள் நிறைவேற்றியிருந்தாலும்கூட மகாராட்டிரத்திலே நீதி நிர்வாகம் மாநிலத்தின் பொறுப்பிலே உள்ளது என்று கூறி, இப்பொழுது அவர்கள் 'override the effects of the Act of Parliament' என்ற முறையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள், அதைப் போலவே நாமும் நம்முடைய தனித்தன்மையைக் காட்டுவதற்காக சுதந்திர உணர்ச்சியைக் காட்டுவதற்காக அதுபோன்ற சட்டத்தைக் கொண்டுவந்து ஏன் நிறைவேற்றக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கருத்தை இந்த அரசு பரிசிலித்து ஊர் நீதி மன்றம் என்ற முறையிலே ஒரு மசோதாவைத் தயாரித்தோம். அதற்கு வழக்கறிஞர், நீதிமன்றங்கள் ஆகியவர்களிடமிருந்து எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே அதை ஆராய்ந்து பரிசிலிக்கலாம்.

DR. H. V. HANDE: May I know from the Hon. Minister whether it is the policy of the Government to do away partly with the appointment of Honorary Magistrates? Is it for that purpose they are waiting for the amendment of the Central Government? I think under that coverage they want to take a decision. I want to know the exact position with regard to the Honorary Magistrates or whether there is any proposal to suggest alternative amendment to the Central Act because it is in the concurrent list or whether there is any proposal to continue the present system. What is the exact policy of the Government? What has prompted the Government to wait for the amendment of the Centre? I want to know whether any malpractices in the procedure has been noticed. I want to know the thinking and mind of the Government. The Hon. Minister can take the House into confidence and share the views of the Members.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, this is not the policy of this Government. It is the policy of the Government of India to incorporate this in the Central Act. If the hon. Member supports the Resolution which we are discussing now fully wholeheartedly and co-operatively, the State Government will get the power to amend the Act.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மகாராஷ்டிரா அரசாங்கத்திலே திருத்தியிருக்கிறுர்கள். எனவே, நீங்களும் அப்படித் திருத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. 'ஆனரரி மாஜிஸ்ட்ரேட்' வேண்டாமென்று இருந்தால் அது வேறு விஷயம். விரும்பினுல் திருத்த முடியும். Why should the Hon. Minister recoil himself into the shell? He can say what exactly is his point. உங்கள் பாலிசி என்ன?

THE HON. THIRU S. MADHAVAN: We will always put our policy without any fear from any body else. But the hon. Member should not give a wrong impression to this House that

1974 ஏப்ரல் 17] [திரு. செ. மாதவன்]

Maharashtra has passed the Bill. They only introduced the Bill. They are waiting for the consent of the Centre. We have already brought our resolution. The hon. Member must support the resolution. In the resolution we have mentioned that without waiting for the consent of the President we must be given the power to bring the Bill. That is the request in our resolution. If the hon. Member supports the resolution, we will consider it.

DR. H. V. HANDE : On a point of Order, Sir. The Hon. Minister is giving a wrong impression that the Centre is withholding their consent. But so far as I understand, I do not think for any bills we have passed, consent has been withheld by the Centre. Maharashtra is waiting for consent. But what are you doing? Are you not going to send it for concurrence? இனிமேல் அனுப்ப மாட்டீர்களா? 'கன்கரன்ஸ்' கொடுக்கிறார்களா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்காக அனுப்ப மாட்டீர்களா? How do you escape from that? இதுவரையில் அனுப்பவில்லையா? பாலிசியைச் சொல்வதற்கு என் பயப்படுகிறீர்கள்?

THE HON. THIRU S. MADHAVAN : There is no question of fear in introducing the Bill. It is a recent Bill which originated in Parliament. Even earlier we expected it. But only in January they passed it. They have implemented the Bill from 1st April 1974. Maharashtra has framed the Bill. So far as information available to us is concerned, consent has been refused. Whether it is correct or not, I shall have to verify. Recently Criminal Procedure Code has been amended by the Government of India. If we have to amend the Act, it has to be considered in detail. Let the hon. Member support our resolution. Then we will get the power and we will implement the suggestion.

THIRU M. A. LATHEEF : An impression is sought to be created here that Maharashtra has already drafted the Bill giving effect to Central Amendment Act and that those changes are pending for concurrence of President. What I want to say is this. In so far as administration of justice is concerned, it is the responsibility, exclusive responsibility of the State Government. The President is constitutionally bound to give his assent. So saying that President is withholding consent, etc., does not carry any value. What we feel is that this healthy institution has

served its social utility and it has stood the test of time beyond reasonable doubt. Therefore we would like the Government very much to retain that system as it is. That is our request.

The Hon. Thiru S. MADHAVAN : I agree with the interpretation of the hon. Member about constitutional provision for getting consent of the President. Of course, he is supporting our resolution. I am glad. We have already told that we are setting up *ஊர் நீதிமன்றம்* which incorporates this suggestion. We will soon take it up for consideration.

(ஆ) கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்திரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்படுவது குறித்து.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் :—

"கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்தரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்பட்டு விடுவதால், இதை உடனடியாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பது பற்றி".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதைப்பற்றி என்னுடைய அறிக்கை@ பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையில் ஒன்றும் நமக்கு சாதகமாகப் பதில் இல்லை. இதே தீர்மானத்தை நான் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே கொண்டு வந்தேன். சென்ற ஆண்டு இந்த ரிசர்ச் எந்த நிலையில் இருந்ததோ அதேநிலையில்தான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை இங்கே யாரும் உணர்ந்ததாகவே தெரியவில்லை. கொஞ்ச நாளிலே தமிழகத்திலே சோற்றுக்கு

@ 399-402-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

லாட்டரி அடிக்க வேண்டிய நிலைமை வந்துவிடும்போல் இருக்கிறது. எனவே இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை யாரும் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள். இதை ஒழிக்க முடியாது என்று சொல்கிறார்கள். 'போளிரியல்' என்ற மருந்தை சான்டோஸ் கம்பெனி ஸ்விட்சர்லாந்திலேயிருந்து வரவழைத்து அதை உடுக்கம்பாளையம் என்ற இடத்திலே போட்டு அங்கே நூற்றுக்கு நூறு வெற்றி கண்டிருக்கிறார்கள். அதேபோல் டார்டன் 20. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கேள்விகள் மட்டும் போடுங்கள்.

திரு. கோவை செழியன்: இது ரொம்ப கஷ்டமான காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கஷ்டமான காரியம் என்றால் அதை வேறு டிஸ்கஷனிலே வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

திரு. கோவை செழியன்: டார்டன் 22-ஐப் பயன்படுத்துகிறார்கள். டார்டன் 20-ஐப் பயன்படுத்தினால் வெற்றி பெறும் என்று அந்தக் கம்பெனியார் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். எனவே, எது எதற்காகவோ ஃபாரின் எக்சேஞ்ச் இல்லை என்று போராடுவதைப் போல் இதற்கும் மத்திய சர்க்காரிடத்திலே இந்த அரசு சொல்லியதா? அந்த கெமிகலை இம்போர்ட் செய்வதற்கு என்ன முயற்சியை எடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த காட்டுக்கண்டங்கத்தரி களையைப்பற்றி எப்படி மருந்து மூலம் அகற்ற முடியும் என்பதற்கு ஆராய்ச்சியில் முடிவு தெரியவில்லை. இதிலே இருப்பதற்குள்ளே டார்டன் 22-20 அல்ல 22—என்பது கூடியவரையில் நல்ல மருந்தாகத் தெரிகிறது. போன வருஷம் கொஞ்சமாக அதைப் பரிசோதனை செய்து பார்த்து இந்த வருஷம் வயல்களிலே போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வெற்றியடைந்தால் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்ய முடியும். விலையும் அதிகம் இல்லை, ஒரு எக்கருக்கு சுமார் 18 ரூபாய் அளவிற்கு ஆகியிருக்கிறது. அந்த மருந்து வருகின்ற வரையில் காத்திராமல் விவசாயிகள் இந்தக் களையை வளரவிட்டுப் பிறகு பிடுங்குவதை முளையிலேயே கிள்ளி எறிந்தால் நல்லது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டு நாளில் ஒரு அடிக்குமேல் வந்துவிடுகிறது. எனவே அதற்குக் கூலி கொடுத்துக் கட்டாது. ஒன்றைச் செய்யுங்கள், சீரியல் பயிற்சி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதை கம்ப்ளிட்டாக 'எராடிகேஷன்' செய்துவிட்டால் மற்ற இடங்களுக்குப் பரவாது. வெள்ளாமை வராவிட்டாலும் போகட்டும், இதை யாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த மருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அடிக்க வேண்டிய மருந்து என்று சொன்னார்கள். எங்கிருந்து அதைக் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. ஏனென்றால், நான் எழுதிக் கொடுத்திருப்பதில் கடைசி பாராவில் இருக்கிறது, இந்த மருந்தை நான்கு மாத இடைவெளியில், நான்கு மாதங்களுக்கு ஒரு முறையே அடித்தால் போதும் என்று. அதைச் செய்தால் வேரோடு களையை அகற்ற முடியும் இந்த மருந்தால் என்று வேளாண்மைத் துறை நம்புகிறது. ஆனால் இன்னும் சோதனை முடியவில்லை என்ற கட்டத்தில், நான் சொல்வதெல்லாம், அது உயரமாக வளர்வதற்கு முன்னால், 10 அடி நீளத்திற்கு வேர் விடுவதற்கு முன்னால் களையைக் கிள்ளிவிடுவதால் இலகுவாக அகற்ற முடியும். அந்த முறையில் செய்தால் விவசாயிகள் இந்தக் களையைக் களைந்து இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்.

5. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை விதி 21 (3)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"நிகழ்ச்சி நிரலில் உள்ள (பிற்பகல் 4 மணிக்கு நடைபெறுவதாகவுள்ள) இனம் 4-பேரவைத் துணைத் தலைவர் தேர்தல், இனம் 1-க்கு அடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1974 ஏப்ரல் 17]

(6) பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

பேரவைத் துணைத் தலைவர் தேர்தலுக்கான நியமனத் தாள்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் 5 (2) விதியின்படி, அப்பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயரை முதலில் நான் அறிவிக்க வேண்டும்.

அவர்களின் விவரம் வருமாறு :—

நியமனம் பெற்றவர் :—திரு. நா. கணபதி

முன்மொழிந்தவர் :—மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.

வழிமொழிந்தவர் :—மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் திரு. நா. கணபதி அவர்கள் இப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கணபதி அவர்கள் பழகுவதற்கு இனிய பண்பு வாய்ந்தவர்கள். வழக்கறிஞராக நல்ல பயிற்சி பெற்றவர்கள். அவை பலன் அளிக்கின்ற முறையில் பயன்படுத்தத் தெரிந்தவர்கள். அப்படிப்பட்ட ஒருவர் பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு என்னுடைய பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் இந்த மன்றத்தின் துணை சபாநாயகராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அன்னாரைப்போன்ற சீரிய உறுப்பினர் வழக்கறிஞர் தொழிலிலே அதிகமாக ஈடுபட்டுக் கொண்டு நல்ல அனுபவமும், பணிவும் கொண்ட அத்தகைய பெரியார் அவர்கள் இந்த அவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன் ; வாழ்த்துகிறேன்.

இது ஒரு பெரிய பொறுப்பு என்பதை நமது சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் உணருவார்கள். இத்தகைய மாபெரும் பொறுப்பை ஏற்று, அன்னார் நல்ல

முறையில் செயலாற்றுவார் என்பதில் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் எப்போதானாலும் சரி—சட்டப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்திலே ஒழுங்காக நல்ல முறையில் படித்து தன்னுடைய சீரிய கருத்துக்களை இந்த மன்றத்தில் கூறக் கூடியவர்கள். அவர்கள் நடுநிலைமையோடு இயங்க இந்த மன்றமும், எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். அன்னாரைப் போன்ற வழக்கறிஞர்கள் இந்த மாதிரி மன்றத் துணைத் தலைவர்களாக முன்பே இருந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் நல்ல முறையில் நடந்திருக்கிறார்கள். அந்த வழியில் நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் உயர்திரு கணபதி அவர்களும் நல்ல முறையில் செயலாற்றுவார்கள் என்று சொல்லி அன்னாரை வாழ்த்தி நல்ல தீர்ப்புகளை, இனிய தீர்ப்புகளை வழங்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் கணபதி அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது கண்டு மெத்த மகிழ்ச்சி. என்னைப் போன்றவர்களுக்குத் தாங்கள் எப்படி எல்லாம் வழி காட்டுகிறீர்களோ அதைப் போல் அவர்களும் இந்தச் சட்டமன்றத்தில் சட்டங்கள் எல்லாம் தெரியாதவர்களுக்கு அதைச் சுட்டிக்காட்டி நல்ல முறையில் மன்றத்தை நடத்திச் செல்லுவார்கள் என்பதில் பெருத்த நம்பிக்கை எங்கள் கட்சிக்கு உண்டு.

அவரோடு நாங்கள் எல்லாம் நீண்ட ஆண்டு காலம் பழகியவர்கள். ஒன்றே ஒன்று—நாங்கள் இங்கே இருந்து கொண்டும் அவர் அங்கே இருந்து கொண்டும் வாதாடுவோம். அது இனி இல்லாமல் போகும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லும் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்போம். இந்த மன்றத்தின் மாண்பையும், பாரம்பரியத்தையும் காக்கின்ற வகையில் திரு. கணபதி அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது சாலப் பொருத்தமாகும். நல்ல பெருமைக்குரிய வழக்கறிஞரான அவர்கள் சட்டமன்றத்தின் துணைத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற பெருமையைப் பெற்றதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 17]

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, சட்டமன்றத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு திரு. கணபதி அவர்கள் வயதில் குறைந்தவராக இருந்தாலும், பொதுவாழ்வில் தனக்கென தனிப் பாதையை வகுத்துக் கொண்டு நேர்மையோடு பொதுமக்களுக்குப் பணி யாற்றுவதில் நல்ல உள்ளம் கொண்டு தொண்டாற்றுபவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்த அரசு பின் தங்கிய சமுதாயத்திற்காகவும், தாழ்ந்தப் பட்ட சமுதாயத்திற்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது என்பதற்கு அடையாளமாக எவ்வளவோ காட்டினாலும் கூட, பொற்கொல்லர் சமுதாயத்தைச் சேர்ந்த கணபதி அவர்கள் சட்ட மன்றத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் பின்தங்கிய சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் தொடர்ந்து இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது சரியான சாட்சியமாக விளங்குகிறது.

திரு. கணபதி அவர்கள் நடுநிலைமை தவறாமலும், எந்தக் கட்சியின் சார்பாக நிற்காமலும் பொது நிலையில் நின்று தனக்கு இந்த மாமன்றம் முழு மனதாக வழங்கியிருக்கும் அந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அவர்கள் இந்தப் பதவியைக் கண்டு பெருமை அடையா மல், பதவி கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சி அடையாமல், எவ்வளவு பெரிய பொறுப்பை நமக்கு இந்த மாமன்றம் தந்திருக் கிறது என்பதனை உணர்ந்து அந்தப் பொறுப்பைச் சரிவர நிறை வேற்றுகிறோமா என்று சிந்தித்து நல்ல முறையில் செயல்படு வார்கள் என்ற பூரணமான நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த நம்பிக்கை பொய்க்காத வகையில் திரு. கணபதி அவர்கள் துணைத் தலைவராகப் பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து எங்கள் கட்சியின் சார்பாக அவரைப் பாராட்டு கிறேன். நன்றி கூறுகிறேன். வணக்கம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவைக்கு உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற மதிப்புக்குரிய எனது நண்பர் கணபதி அவர்களைப் பற்றி நான் மிகவும் மரியாதை வைத்திருப்பவன். பதவி என்பது வரும், போகும். மனிதனிடத்தில் இருக்க வேண்டியது பண்பு,

தன்னடக்கம். அந்தத் தலைசிறந்த தன்னடக்கம், புன்சிரிப்பு, எதையும் செவி கொடுத்துக் கேட்கிற ஒரு நல்ல உள்ளம், இளம் வயதிலேயே தன்னகத்தே கொண்டிருக்கும் அந்தப் பெருமைகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அவர்கள் ஒரு வழக்கறிஞர் என்பதோடு மட்டுமல்லாது ஒரு அரசியல் கட்சியில் ஈடுபாடு உடையவர்கள். யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்தவர்கள். தலை சிறந்த தன்னடக்கம் உடையவர்கள். 'தன்னடக்கம்' என்ற சொல்லை நான் இரு முறை உபயோகித்த காரணம்—பதவியோடு தலைக் கனமும் வந்து விடுகிறது. அந்தத் தலைக் கனத்திற்கு இடம் இல்லாமல் தன்னடக்கத்தோடு இருக்கிற ஒரு பண்பு அவரிடம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அந்தப் பெருமைகளைப் பார்த்துத் தேர்ந்தெடுத்திருப்பதில் இன்னொரு முறையையும் முதல்வர் அவர்களும், முன்னவர் அவர்களும் கையாண்டிருக் கிறார்கள். அதாவது பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த குலத்தி லிருந்து, பின்தங்கிய மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும் முறையில் அவரைத் தேர்ந்தெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.

அதிலே நம்முடைய அண்ணா தி.மு.க.வைச் சார்ந்த முனி ஆதி அவர்கள்—(குறுக்கீடு—முனு ஆதி) நான் எப்போதும் முனி ஆதி என்றே சொல்வது, அதே மாதிரி கூறிவிட்டேன்—'நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். நான் இங்கே இருக்கிறேன்' என்று சொன்னார்கள். எங்கே இருந்தாலும் அவர் நடுநிலைமையோடும், நாணயத்தோடும் நடந்து கொள்வார் என்று உறுதி கூறுகிறேன். எங்கிருந்தால் என்ன? இங்கும் இருக்கலாம், அங்கும் இருக்கலாம். நடை முறைதான் முக்கியம். அதைப் பின்பற்றுவதில் சிறப்போடு இந்தச் சபையின் கவுரவத்தைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உண்டு. அந்த இளம் தலைமுறையைச் சார்ந்த ஒருவரைப் பேரவையின் உப தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது பெருமைக் குரியது என்று கூறி எங்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டி அமர்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் கணபதி அவர்கள் இந்த அவையினுடைய உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு எங்களது கட்சியின் சார்பில் முதலில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அவர் சட்டம் பயின்றவர். நன்கு இனிமையோடு பழகக்கூடிய பண்புடையவர். தகுதியான இடத்திற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அவையில் நல்ல அனுபவத்தை அடைந்திருக்கிறார்கள் என்ற காரணத்தாலே இந்த அவையின் கடந்த கால சரித்திரத்தை எல்லாம் நன்கு தெரிந்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இந்தப் பொறுப்புக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே அவர்கள் இந்த அவையிலுள்ள எல்லோருக்கும் தலைவராகிறார்கள். ஆகையினாலே இனிமேல் கட்சி என்பதைக் கொஞ்ச காலத்திற்கு—இந்தப் பொறுப்பில் இருக்கிற வரையில்—ஒத்திவைத்துவிட்டு இந்தப் பொறுப்பில் இருந்து நடுநிலையோடு செயலாற்றக் கூடிய திறன் உடையவர்கள் என்பதிலே சந்தேகம் கிடையாது.

அதோடு கூட அவர்கள் எங்களுடைய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதைச் சொல்லுவதால் அவரிடம் சலுகைக்காகச் சொல்லுகிறேன் என்று கருதி விடக் கூடாது. நிச்சயமாக சலுகைக்குப் போக மாட்டேன். அவரை நன்றாகப் புரிந்தவன் என்ற காரணத்தால் கூறுகிறேன். அவர்கள் நடுநிலையோடு இருந்து இந்த அவையினுடைய கவுரவத்தைக் காப்பாற்ற, இந்த அவை நன்கு செயல்பட அவர்களுடைய திறமை, பண்பு உதவ வேண்டும், உதவும் என்று கூறி அவர்களுக்கு வாழ்த்தை மறு முறையும் கூறி அமைகிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Sir, on behalf of our Party, I congratulate our young lawyer with smartness and with good personality on his elevation as Deputy Speaker. It is a matter of joy that he has been elected by all the members of this House unanimously.

As mentioned by other party leaders, I hope he will carry on the business of the House with impartiality and get the appreciation from all members, not only from the members of the ruling party, but also from members of opposition parties. I hope he will be a model Deputy Speaker in Tamil Nadu which has a special reputation and he would keep it up and do justice to the Constitution. Thank you, Sir.

[1974 ஏப்ரல் 17

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, இன்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உதவி சபாநாயகர் திரு. கணபதி அவர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு சம்பிரதாயமாக இருந்தாலும்கூட, எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்வதை அவர்கள் கொஞ்சம் ஊன்றி கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த உதவி சபாநாயகர் அவர்களும் இளைஞர். இவரும் இளைஞர். அவர்களும் சட்டம் படித்தவர்கள், இவர்களும் சட்டம் படித்தவர்கள். ஆனால் திரு. கணபதி அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு வித்தியாசம் என்னவென்றால் சட்டம் படித்ததோடு நிற்காமல் நேரடியாக அவர்கள் கோர்ட்களுக்கு எல்லாம் சென்று வாதாடி நல்ல அனுபவம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

நானும் சட்டம் படித்தவன் என்ற முறையில் ஒரு காலத்தில் இந்தப் பயிற்சியில் இருந்து கைவிட்டுவிட்டாலும் கூட அவர்களிடத்தில் நான் அடிக்கடி கேட்டுக்கொள்வதுண்டு. நாம் சட்டங்கள் இயற்றுகிறோம், அந்த மசோதாக்களில் எல்லாம் நீங்களும் ஆவல் எடுத்து அதில் பங்கெடுக்கவேண்டும் என்று நான் அடிக்கடி அவர்களைக் கேட்டுக்கொள்வதுண்டு.

அந்தமாதிரி அவர்கள் பங்கெடுக்கிற நேரங்களில் எல்லாம் புதிய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்வதை நான் பார்த்திருக்கிறேன். அதேமாதிரி தீர்மானங்கள் எல்லாம் அதிகமாக வருகின்றன. அவர்கள் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இன்று அவர்களைப் போல் எவ்வளவோ இளைஞர்கள் இதே பதவிக்கு வருவதற்குள்ளவர்கள் இருந்தாலும் கூட, இன்றைக்கு அவர்களை, அவர்களது கடசி சார்பில் தேர்ந்தெடுத்திருந்தாலும் கூட, இனிமேல் அவர்கள் எங்களுக்கும் ஒரு பொதுவானவர் என்ற முறையில் கண்டிப்பாக சபையை நல்ல முறையில் நடத்துவார்கள் என்ற நம்பிக்கை உண்டு என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை அவர்களைப் பாராட்டி அமர்கிறேன்.

1974 ஏப்ரல் 17]

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் தொகுதி உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் இன்றையதினம் இந்த சபையின் உதவி சபாநாயகராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

அவர்கள் பண்பாளர். படித்தவர், பட்டம் பெற்றவர். மிகச் சிறந்த முறையில் நல்லொழுக்கத்தோடு நல்ல முறையில் இன்றைய தினம் நம் மத்தியில் எல்லோருக்கும் தெரியக் கூடிய விதத்தில் அவர்கள் பணியாற்றிவருகிறார்கள். இன்று அவர்களுக்கு இந்தப் பதவி கொடுத்திருப்பதில் மிகச் சிறந்த முறையில் தனது திறமை யையும், தன் மற்ற பண்புகளையும் கொண்டு இந்தச் சபையை நன்கு நடத்தி நல்ல முறையில் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு பேரும் புகழும் பெறுவார்கள், நிச்சயமாக சபாநாயகர் அவர்களுக்கு அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள், கட்சி வித்தியாசம் இன்றி தன் கடமைகளையாற்றுவார்கள் என்று கூறி, என் பாராட்டுதல் களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் அருமை நண்பர் திரு. கணபதி அவர்கள் நமது மன்றத் தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக தமிழரசுக் கழகத்தின் சார்பாக அவர்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

திரு. கணபதி அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். சட்ட மன்றத்தில் அருமையாகப் பேசக்கூடிய திறன் படைத்தவர்கள். அவர்கள் இந்தப் பெரும் பொறுப்பை ஏற்ற பிறகு நடுநிலைமை யோடு தன் கடமைகளைத் திறமையோடும் நல்ல முறையிலும் நடத்திச் செல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு அவர்களை மீண்டும் ஒரு முறை பாராட்டி, வாழ்த்தி அமர்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I congratulate the hon. Mr. Ganapathy on his elevation to the Deputy Speakership of this Assembly. From what I know of Mr. Ganapathy during the last one year as the Chairman of the Committee in which I was also a member, I have found him one of the most efficient, pleasantly firm and one capable of carrying on his work without fear or favour. I had a premonition—an astrological premonition (Laughter) that he would be chosen the Deputy Speaker of our House.

In any case, I am very happy that such an youngster with such good qualities and good habits who can exercise pleasant control over the people, such a gentleman has been elevated to this high office. I am sure that this Assembly will certainly be proud of such a Deputy Speaker. Thank you. Sir.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Speaker, Sir, I am very glad that a suitable and deserving hon. Member of this House has been unanimously elected as the Deputy Speaker of the House. Since he has been a member of this House for a long-time, I think he is aware of the great traditions and ideal position of this Assembly and he will, I am sure, strive to improve on it.

I make one request to him and that is this, that he should maintain an impartial and broad outlook towards all the members of this House. I also contragulate the Hon. Chief Minister on having spared such a good man for the service of this House. Thank you, Sir.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற சூழ்நிலை ஏற்பட்டதற்கு முதற்கண் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கணபதி அவர்கள் சிறந்த, சட்டத் துறையில் நல்ல அறிவாற்றல் மிக்கவர்கள் என்பது மட்டுமல்லாமல் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பலரும் சுட்டிக்காட்டியதற்

1974 ஏப்ரல் 17] *[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]*

கிணங்க, நல்ல அடக்க உணர்வோடு, எந்தப் பொருளையும் கூர்ந்து கவனித்து, அவைகள் குறித்து ஒரு முடிவு எடுப்பதற்கு ஆழ்ந்த தன்மையை ஏற்றுக்கொள்பவர் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராக இருந்து இந்தப் பேரவையை சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கு என்னென்ன தன்மைகள், பண்புகள் தேவைப்படுகின்றன என்று நாம் கருதுகிறோமோ அந்தப் பண்புகளும் தன்மைகளும் திரு. கணபதி அவர்களிடத்தில் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்தப் பேரவை சிறந்த மரபுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி மற்ற மாநிலத்தாரும் மற்ற நாட்டாரும் புகழ்கின்ற அளவிற்குப் பாராட்டுரைகள் பெறத்தக்க அளவிற்கு சிறப்பாக வளர்ந்து வந்த ஒன்றாகும். அந்த முறையில் தொடர்ந்து இந்தப் பேரவையினுடைய மரபுகள் காப்பாற்றப்படவும், உறுப்பினர்களுடைய உரிமைகள் எல்லாம் காப்பாற்றப்படவும்; இந்தப் பேரவையினுடைய விதிகள் சிறப்புற நிறைவேற்றப் படவும், தங்களுக்குத் துணையாக இருந்து இந்தப் பேரவை யினுடைய துணைத் தலைவர் பொறுப்பை ஏற்று திரு. கணபதி அவர்கள் சிறப்பாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

> “ சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி.”

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கிணங்க அப்படிக் குறிப்பிட்டதற்கு எடுத்துக் காட்டாக விளங்கி தங்களுக்கு உறுதுணையாக இருந்து எல்லா உறுப்பினர்களுடைய நம்பிக்கை யையும், மதிப்பையும், அன்பையும் பெறத்தக்க அளவிற்கு சிறப்பான முறையில் பணியாற்றக்கூடிய திறன் படைத்தவர் என்ற முறையில் என்னுடைய பாராட்டுதல்களையும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க அவர்களோடு இணைந்து நின்று என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் இந்தப் பேரவையினுடைய முன்னவர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்,

[1974 ஏப்ரல் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அருமை நண்பர் திரு. என். கணபதி அவர்கள் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, போட்டியில்லாமல் அனைத்துக் கட்சிகளும் விட்டுத் தந்து ஒரேமனதாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட உதவியதற்கு முதற்கண் இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சட்டம் பயின்றவர் என்பதும், அந்தப் பயிற்சியினை நீதி மன்றங்களில் நிலைநாட்டியவர் என்பதும், இந்த மாமன்றத்தினுடைய விவாதங்களில் கலந்துகொண்ட நேரத்தில் அதற்கான திறமையைத் தெளிவான முறையில் வெளிப்படுத்தியவர் என்பதும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இங்கே பேசிய பாராட்டுரைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்கள் 1957-க்கு பிறகு நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர் என்பதையும் நாடு நன்கு அறியும். சமுதாயம் எல்லா வகைகளிலும் விழிப்புற வேண்டும், மறுமலர்ச்சி பெறவேண்டும் என்கிற தூய உணர்வோடு, அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தம்பிகளில் ஒருவராக இருந்து பணிபுரிந்து வருகிறார். அப்படிப்பட்ட நல்லவர், நன்றி உணர்வு மிக்கவர், இந்த அவையை நல்ல முறையில் நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர், பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது சாலவும் பொருத்தமுடையதாகும்.

'யார்-எவர்' என்று சட்டப்பேரவை சார்பில் வெளியிடப்பட்டுள்ள நூலில் திரு. கணபதி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு இருப்பதைப் பார்த்தேன். அதில் அவருக்கு மிகவும் பிடித்த

1974 ஏப்ரல் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

விளையாட்டு மட்டைப் பந்து, மேஜைப் பந்து என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த விளையாட்டுத் திறன் இந்த அவைக்கு மிக மிகப் பயன்படும்.

திரு. கணபதி அவர்களை நான் நன்ருகப் புரிந்து கொண்டிருக் கிறேன். திரு. கே. டி. கே. அவர்கள், அனைவருக்கும் பொதுவாக அவர்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய முதல் எழுத்தே 'என்' என்று இருப்பதால், அனைவருமே 'என் கணபதி', 'என் கணபதி' என்று உரிமைகொள்ள வாய்ப்பு உண்டு என்று கூறி, என் கணபதி அவர்களுக்குப் பாராட்டுதல் களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

திரு. என். கணபதி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவையின் முன்னவர் டாக்டர் நாவலர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், மற்றும் என்னை மனமாரப் பாராட்டிய வர்கள், உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

போட்டியின்றி பெரும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு எனக்கு அளித்து, அந்தப் பெரும் பொறுப்பில், அந்தச் சோதனையில் நான் எப்படி வெற்றி பெற்று வெளியே வரப் போகிறேன் என்பதை இப்போதே ஆருடமாகக் கணித்து தலைவரவர்கள் அவர்களுடைய நல்லெண்ணத்தை எனக்குத் தெரிவித்தார்கள். எப்படிப்பட்ட விதத்தில் நடந்து, அவையில் பணியாற்ற வேண்டுமென்று எனக்குச் சொல்லியிருக்கிருர்கள். நான் ஏற்கிற பொறுப்பே உதவி சபாநாயகர் பொறுப்பு. ஆகவே, எல்லோருக்கும் உதவியாக இருப்பதே என்னுடைய பொறுப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. என். கணபதி] [1974 ஏப்ரல் 17

அடுத்தபடியாக, ஜனநாயக மரபுகள், பாரம்பரியம் என்பதை எல்லாம் நான் நூல்களில் மிக அதிகமாகப் பயின்று இருக்கிறேன். நேரடியாகவும் பயிற்சி பெற்று வந்திருக்கிறேன். அந்தப் பாரம்பர்யத்தைக் கடைப்பிடிக்கவும், ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதிலும் துணையாக நான் துணைத் தலைவர் என்ற முறையில் நிற்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த நான், இந்தப் பெரும் பொறுப்பை ஏற்று, அனைத்துக் கட்சித் தலைவர்களும் எனக்கு வழங்கிய பாராட்டுரைக்கு உகந்த முறையில் நடந்துகொள்வதற்கு, நடப்பதற்கு வழிகாட்டியாக இருந்த டாக்டர் பேரறிஞர் அண்ணு அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய மரியாதையையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் கூறி, உங்கள் அனைவருக்கும் உறுதுணையாக நிற்பேன், ஓர்ந்து கண்ணேடாது, ஒரு பக்கம் சாயாது, இந்த அவையை நடுநிலைமையில் நின்று நடத்துவேன் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(7) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் 'கல்வித் துறை' குறித்த அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, I rise to present the Report of the Committee on Estimates on Education Department (Primary and Secondary).

(8) அரசினர் தனித் தீர்மானம்.

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னர் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து—தொடர்ச்சி.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I move the following amendment to the Resolution moved by the Hon. Chief Minister on Centre-State Relations—

For the last paragraph, substitute the following :—

" recommends that the entire matter be referred back to the Committee for recommendation."

The amendment was duly seconded.

THIRU B. VENKATASAMY : Sir, I move the following amendment :—

For the Resolution moved by the Hon. Dr. M. Karunanidhi, Chief Minister, substitute the following :—

" This Assembly recommends to the Government of India to appoint immediately a Compact Committee consisting of constitutional lawyers and experienced administrators to investigate and find out how an eminently Federal Constitution that was given to this country by the Constituent Assembly has been converted in practice into unitary form of Government by the dominant political party which has held the power both at the Centre and most of the States during the last 24 years and suggest steps for restoring the original federal form of Government as contemplated in the Constitution. Further, the Committee be requested to consider in depth all suggestions made by the State Governments, political parties, associations and individuals for decentralisation of political and economic power from Central Government to State Governments and from the State Governments to local self Government bodies and suggest suitable methods of achieving the object of decentralisation of economic and political power without damaging the ability of the Central Government to protect the territorial integrity, unity and solidarity of the country and Indian people."

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்து இருக்கின்ற

மாநில சுயாட்சித் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பாக வன்மையாக எதிர்த்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்தத் தீர்மானத்தை வன்மையாக எதிர்க்கும்போது, மாநில சுயாட்சி வருவதற்கு இப்போது இருக்கின்ற அரசியல் சட்டத்தை திருத்தத் தேவை இருக்கிறதா என்பதை நான் எண்ணிப் பார்க்கும்போது, நிச்சயமாகத் தேவை எதுவும் ஏற்படவில்லை என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இந்தத் தீர்மானத்தில் அடங்கி யிருக்கின்ற, இன்னும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், அதிக நிதி நிலை வரவு வேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் இருக்கத்தான் வேண்டும்; போதுமான நிதி வசதிகளும் இருக்கத்தான் வேண்டும். ஆனால், இன்றைய தினம் இருக்கின்ற அரசியல் சட்டத்தில் ஏறத்தாழ அத்தனை வசதிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை மேலும் வசதிகள் பெற அதிகாரங்கள் தேவை என்று அரசு கருத்தில் கொண்டால், அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வழி வகைகள், மார்க்கங்கள் இருக்கின்றன. ஆகவேதான் கூறுகிறேன். மாநில சுயாட்சி பெறுவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை.

ராஜமன்னார் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் வந்து இருக்கின்ற அறிக்கையைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே அந்தக் குழு அதனிடம் ஒப்படைத்த வேலையைச் சரிவரச் செய்து இருக்கிறார்கள் என்பதை நான் கூறுவதற்குத் தயங்கவில்லை, ஏன் என்று சொன்னால், அந்தக் குழுவிற்கு இந்த அரசு ஆணை பிறப்பித்தது என்ன என்று சொன்னால், முழுமையான 'கம்பிளீட் அடானமி' மாநிலம் பெறுவதற்குத் தக்கவாறு இன்றையதினம் இருக்கும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு வழிவகை செய்யும் ஒரு அறிக்கையைத் தயார் செய்ய வேண்டுமென்று கூறிய ஆணைக்கிசைய அவர்கள் ஒரு அறிக்கையைத் தயார் செய்து இருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஒரு வழக்கறிஞர் தனது கட்சிக்காக விவாப் பத்திரிக்கை தயார் செய்யும்போது எதிர்க் கட்சியின் வழக்கில் இருக்கின்ற நல்ல காரியங்களை எடுத்துக் கூறுவது மரபு அல்ல. அது போல் இன்றையதினம் ராஜமன்னர் குழு அறிக்கை அரசு தன்னிடம் ஒப்படைத்த பணியில் உறுதியாக நின்று, இந்த மாநிலத்திற்கு மாநில சுயாட்சி பெறுவதற்கு எந்தெந்த வகையில் இருக்கின்ற அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமோ அதற்கு ஏற்ப அறிக்கை அளித்து இருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் குழுவானது உண்மையிலேயே ஒரு நல்ல அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைய தினம் உள்ள அதிகாரங்கள் எந்த அளவுக்குப் போதுமான அளவு இல்லை, என்னென்ன காரியங்களைச் செய்ய கூடுதல் அதிகாரம் வேண்டும், எந்த அதிகாரங்களைக் கேட்க வேண்டும், மாநில சுயாட்சி ஏற்படுவதால் இந்த நாட்டிற்கு இருக்கின்ற அபாயங்கள் என்ன, அல்லது மாநிலங்களுக்கு வரும் நன்மை என்ன என்பதைச் சுட்டிக் காட்டி, இதற்கு ஆதரவாக அவர்களுடைய கருத்துக்கள் என்ன என்பதையெல்லாம் இந்த அறிக்கையில் சேர்த்துக் கொடுத்து இருந்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாக நான் இதை வரவேற்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கும். இந்த அறிக்கையை மாநில அரசே கூட வரிவாரியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நாம் எள்ளளவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த திராவிட முன்னேற்றக்கழக மாநில சுயாட்சி கோஷமானது—கோரிக்கையானது நாட்டின் பிரிவினைக்கு வித்திடுகின்ற ஒரு அம்சமாக இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.30)

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தனது தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரையில் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். 'தேவையற்ற ஐயப்பாட்டுப் பின்னணியினூடே இந்தத் தீர்மானத்தின் நோக்கம் பற்றிச் சிந்தித்திட வேண்டாம் . . .' என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கே

ஒரு ஐயப்பாடு இருக்கிறது. இந்த தீர்மானத்திற்குப் பின்னணி ஒன்று இருக்கிறது என்று அவர்கள் அறிந்து இருக்கிறார்கள். ஆக, இந்தப் பின்னணி என்ன என்பதனை நாம் சற்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு வேளை அதனை ஏற்றுக் கொள்கி றோமா, இல்லையா என்பது வேறு விவகாரம். ஆனால் ஒரு பின்னணி இருக்கிறது என்பதனை நான் கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

தி. மு. க. அரசானது மாநில சுயாட்சியை இரண்டு கட்டங் களில் அதிகமாக வலியுறுத்தியதை நாம் நன்றாக உணர்வோம். ஒன்று, இந்த அரசு ஊழல் நிறைந்த அரசு என்று நாங்கள் இந்த அரசின் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினோம். அப்பொழுதே தி. மு. க. அரசு மாநில சுயாட்சி என்ற கொடியை உயர்த்தியது. அதற்குப் பின்பு கோவை தேர்தலின்பொழுது தி. மு. க. படு தோல்வி அடைந்த சந்தர்ப்பத்திலும் கூட மாநில சுயாட்சிக் கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறது.

ஆக, தி.மு.க. வுக்கும், தி.மு.க. தலைவர்களுக்கும் இந்த மாநில சுயாட்சி தாகம் எப்பொழுதெல்லாம் தங்கள் கட்சி பலவீன மாக ஆகிறதோ அப்பொழுதெல்லாம் அதிகமாக எடுக்கின்றது. ஆகவே, மக்கள் மனதைத் திசை திருப்புகின்ற வழியில் இந்த மாநில சுயாட்சி கோரிக்கையை வைத்திருக்கிறார்களே தவிர, வேறு இல்லை என்ற ஐயப்பாடும் இல்லாமல் இல்லை.

ஆக, நாம் இதனை நினைக்கும்பொழுது என்ன தோன்றுகிறது என்று சொன்னால், தண்ணீரில் மூழ்கிச் சாகப்போகிற ஒரு மனிதன் ஒரு கையில் கிடைக்கின்ற ஒரு துரும்பை தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பயன்படுத்த எண்ணுகின்றது போல, தி. மு. க. அரசு மக்களிடமிருந்து விலகிச் செல்கின்றபொழுது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்தக் கோரிக்கையைப் பயன்படுத்தலாமா என்று எண்ணுகிறது. நிச்சயமாக இது பயன் படாது என்பதனை இந்த அரசுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகி றேன்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1962-வது ஆண்டில் நாங்கள் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், ஏன் விட்டார்கள் என்ற விளக்கத்தை அப்பொழுதும் கூறவில்லை. இன்றைய தினமாவது கூறியிருந்தால் நாம் உண்மையிலேயே பாராட்டியிருப்போம்.

1962-வது ஆண்டுக்குப் பின், தி.மு.க. வின் தேசபற்று அதிகமாகிவிட்டதா, நாட்டின் மீது, நாட்டின் ஒருமைப்பாட்டில் அதிக அக்கறை ஏற்பட்டு விட்டதா என்றால், இல்லை என்று நான் தைரியமாகக் கூறுவேன். 1962-ம் ஆண்டில் பிரிவினைக் கொள்கையானது தண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றம், அதற்காகச் சட்டம் இயற்றப் போகிறோம் என்று மத்திய அரசு கூறியவுடன் தி.மு.க. பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டோம் என்று அறிவித்தார்கள். ஆக, பிரிவினைக் கொள்கையானது தி.மு.க. விலிருந்து உண்மையாகவே மனதார விடப்பட்டதா என்றால், இல்லை என்பதனை நாம் நன்றாக அறிகிறோம்.

அடுத்து, மாநில சுயாட்சிக்குப் பின்னணியில் இருக்கிற சில சூழ்நிலைகளை நாம் சற்று நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தி.மு.க. பிளவுபடுவதற்கு முன்பு மதுரையில் நடைபெற்ற மாநாட்டை நாம் நன்றாக ஞாபகம் வைத்திருக்கிறோம். மதுரை மாநாடு, ராஜபாளையம் மாநாடு ஆகிய மாநாடுகள் நடக்கும்பொழுதெல்லாம் முதல்வர் கருணாநிதி அவர்களின் உருவப் படமும், பங்களா தேசத்தின் இன்றைய முதல்வர், அன்று பங்களா தேச விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த முஜிபுர் ரஹ்மான் அவர்கள் படமும் ஒப்பிட்டு அது மாட்டப்பட்டிருந்தது. அது போல இந்த மாநாடுகளி லெல்லாம் திராவிடப் பிரிவினைக் கோஷங்கள் பறைசாற்றப்பட்டன. அதோடு தமிழ்நாடு பிரிவினை கோஷங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அதுமட்டுமல்ல. அந்த மாநாடுகளில் தலைவர்கள் ஆற்றிய உரைகளைப் பார்க்கும்பொழுது தி.மு.க. இன்னும் பிரிவினைக் கொள்கையை விட்டதாக இல்லை என்பதனை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஒரு தலைவர் அன்று கூறினார்கள் Tamil Nadu will be waterloo for Indira அதன் அர்த்தம் என்ன? நிச்சயம் தமிழ் நாட்டுக்கும் மத்திய அரசுக்கும் மாநில சுயாட்சி அடிப்படையில்

ஒரு போர் நடக்க இருக்கிறது, இந்திரா காந்தி அம்மையார் அந்தப் போராட்டத்தில் தோல்வி அடையப் போகிறார்கள், தமிழ்நாடு மாநில சுயாட்சி அடைய இருக்கிறது என்ற கருத்துப்பட அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு தலைவர் கூறினார். ஒருவேளை அவர் இன்று தி.மு.க. வில் இல்லாமல் அன்று தி. மு. க. வின் தலைவராக இருக்கலாம். ஆனால் அவர் அன்று கூறினார்—பிரிவினை இல்லை என்று சொன்னால் மத்திய அரசின் ராணுவத்தைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆக, இந்த அடிப்படையில் தலைவர்கள் கூறிக் கொண்டே இருக்கிறார்கள் என்று சொன்னால் . . .

திரு. முனு. ஆதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் உறுப்பினர் அவர்கள் பிரிவினை கிடைக்காவிட்டால் ராணுவத்தை சந்திக்கத் தயார் என்று எங்கள் தலைவர் பேசியதாகச் சொன்னார்கள். அப்படியில்லை. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தருவதிலே என்ன இடைஞ்சல் இருந்தாலும், மாநில சுயாட்சி கிடைக்கவில்லை என்றால், ராணுவம் வந்தாலும் சந்திக்கத் தயார் என்று தான் சொன்னார்கள். பிரிவினை கிடைக்காவிட்டால் ராணுவத்தை சந்திக்கத் தயார் என்று சொல்லவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: விளக்கத்திற்கு நன்றி.

திரு. கோவை செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் மதுரை மாநாட்டில் பேசியபொழுது, எங்களுடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பதோடு, அதைவிட இந்தியை இந்த நாட்டில் திணித்தால், தமிழகத்தில் உள்ள சக்திகளெல்லாம் ஒன்று திரண்டு எந்தச் சக்தி வந்தாலும் அதைச் சந்திக்கத் தயார் என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் பேசிய பேச்சு அப்படியே எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. மாநில சுயாட்சி கிடைக்காவிட்டால் ராணுவத்தைச் சந்திக்கத் தயார் என்று பேசியிருக்கிறார்கள். அப்பொழுதே கூட திருமதி அனந்தநாயகி அவர்கள் இந்த மாமன்றத்தில் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 17]

திருமதி த. ந. அனந்தநாயகி : நான்கு குருடர்கள் யானையை எப்படிக் கண்டுபிடிப்பது என்று தின்டாடிய மாதிரி இருக்கிறது. திட்டவட்டமாக இது தான் என்று சொல்லிவிட்டால் நலமாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அடுத்தபடியாக பெரியார் அவர்கள் ஆற்காட்டில் பிரிவினைக்காக ஒரு மாநாடு நடத்தினார்கள். அதில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டார்கள். தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் பலர் அதில் கலந்துகொண்டு உரையாற்றி இருக்கிறார்கள். அதோடு மாண்புமிகு முதல் அமைச்சர் பங்களா தேசப் பிரிவினைப் போரின் சம்பந்தமாக இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முன்மொழிந்து ஆற்றிய உரையில் ஒன்றைக் கூறினார்கள். பங்களா தேசத்தின் முஜிபுர் ரஹ்மானுக்கு ஆதரவு கொடுக்கிற பிரதம அமைச்சர் அவர்கள் . . .

***திரு. செ. கந்தப்பன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நம்முடைய ஜேம்ஸ் அவர்கள் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இங்கே அவர்கள் பேசியது அவர்களுடைய கட்சிக் கோட்பாடா என்கிற ஒரு விளக்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காரணம், ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக் மேத்தா அவர்கள் தி.மு.க.-வின் சுயாட்சிக் கோரிக்கையைப் பற்றிப் பேசுகிறபொழுது உள்நோக்கம் கற்பித்தோ அல்லது அரசாங்கத்தின் தூய்மையை சந்தேகித்தோ அல்லது டாக்டர் கலைஞரின் நோக்கத்தை சந்தேகித்தோ சொல்லவில்லை. மாறாக, அதற்குத் தேவை இருப்பதாக மிக அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூறியதில் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்களுடைய அனுமதியோடு நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் :

On Centre-State relationship, Mr. Ashok Mehta said—

"I have no doubt in my mind that there is tremendous scope for sharing the responsibility."

என்று சொல்லி யிருக்கிறார்கள். இது 'இண்டியன் எக்ஸ்பிரஸ்'

ஜுலை 17, 1973-ல் வந்திருக்கிறது. இன்னொரு இடத்தில் மாநிலத்தைப் பற்றிச் சொல்கிறபொழுது அதே ஏட்டில் வந்திருக்கிற ஒரு செய்தி :

Mr. Ashok Mehta, possibly the next President of the Old Cngress, on Monday warned against what is called the destruction of the political personality of the States. 'This is very dangerous' he told a press conference at Satyamurthi Bhavan. Mr. Mehta said that Chief Ministers have been reduced to the status of office boys. There is too much interference by the Prime Minister and the States have lost their individuality.

நான் இங்கே எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனை, இந்த அடிப்படையிலே இன்னும் அவர்கள் இருக்கிறார்களா அல்லது மாறி, தமிழ்நாட்டில் இருக்கிற ஸ்தாபன காங்கிரஸ் இந்திரா காங்கிரசுடன் இணைந்திருக்கிறதா என்பதுதான்.

THIRU R. PONNAPPA NADAR: An important point has been posed by the hon. Member Thiru S. Kandappan, regarding the attitude of the Congress Party on this important matter. Personally I feel there is no contradiction in the statements which are purported to have been made by our esteemed President Mr. Ashok Mehta and which have been referred to by the hon. Member.

I fail to see how there is any contradiction between the statements. It is true that some observations have been made. So far as Rajamannar Committee's report is concerned, we have considered it in our party meetings and we are expressing our views, our considered views and our views will be made known in the course of our speeches. That is the reason why we say that there would be no dispute regarding the discussion; regarding the suggestion of sharing more powers it has to be considered at an All-India level.

It is not for an individual State to pick up a row against the Centre and create an atmosphere which will mar the political horizon. That is the reason why I emphatically reiterate and affirm that in case any constitutional amendment is called for, it would be quite proper for Chief Ministers of all States to come

together in some common platform, either in the National Development Council or some other platform. They can give out their views and find out ways and means to amend the Constitution in the proper manner.

But what has been done now is that our Chief Minister has tabled a resolution stating that the Rajamannar Committee's report be adopted in its modified form pursuant to the resolution tabled by him. That means the Constitution should be amended in toto according to the modifications suggested. Such a view is not healthy and conducive to the national interest. That is the reason why we are constrained to oppose the resolution tabled in this House.

Our considered views will be expressed by the various speakers who participate in the debate. It is not the last word so far as constitutional amendment is concerned. It will have to be done in a broad perspective. It cannot be discussed threadbare within the limited time allotted now. We will be giving our considered views. It is for this Government as well as the Central Government to consider the various aspects.

I think there may not be any doubt which will be lurking in the mind of my hon. friend when he says that there should be sharing of powers.

He has also questioned our negotiations with the Ruling Congress, etc. He need not indicate to us. We know what to decide; we know how to work our party and how to negotiate with the Ruling Congress. These are matters which are not germane to the issue. He need not club this issue with what we have done with the Ruling Congress in Tamil Nadu. That need not be brought at this juncture so that the relationship existing between the two parties may not be marred. Whatever decision has to be taken will be taken by leaders at the national level and it would be considered by our appropriate committees. We shall not enter into argument at it at this moment. With these words I resume my seat.

Thiru S. KANDAPPAN : My hon. friend may answer this only question, viz., whether the Congress (O) is agreeable to the resolution tabled by the Hon. Chief Minister and also the white paper he has circulated indicating the views of the Government. Some members of the Congress (O) have been repeatedly questioning the bona fides of the Government. Do you believe that the speech of the Hon. Chief Minister as well as the statement he has made, is motivated? The hon. Member was saying that we gave up demand for secession because of the Centre's enactment. Even during our late lamented Anna's time, even as far back as 192, we have said that we have withdrawn our demand for secession. It has been done *suo motu*. The hon. Member Mr James is unnecessarily trying to bring into it a motive, saying that because of the Central Act we gave up our demand for secession.

Thiru K. T. K. TANGAMANI : Mr. Deputy Speaker, Sir

Thiru S. KANDAPPAN : When I am speaking.........

Thiru K. T. K. TANGAMANI : I am only addressing the Chair. Can speeches be made by way of clarification?

Mr. DEPUTY SPEAKER : The hon. Member Thiru James was speaking. Mr. Kandappan was asking for clarification. The concerned Member Thiru James has not objected.

Thiru K. T. K. TANGAMANI : I only want to know whether separate speeches could be made to make clarifications.

Mr DEPUTY SPEAKER : Separate speeches are not allowed. I would request the hon. Member Thiru Kandappan to be brief.

Thiru S. KANDAPPAN : Let me finish this one sentence. Most of the party members of the Congress (O) were saying that D.M.K. is not bona fide in claiming for decentralisation. I just want to know from the leader of that party whether when the Administrative Reforms Commission has suggested more powers for States it may be all right but when the D.M.K. asks for decentralisation of powers and for amendment of the Constitution, their bona fides are to be questioned.

1974 ஏப்ரல் 17]

THIRU R. PONNAPPA NADAR: Yes, Sir, we have suspected the *bona fides* of D.M.K. regarding this matter because that is a matter of history. You wanted so many things. You have given up in 1962 something. All these things are past history. That is the reason why the hon. Member Thiru James was saying it. You have given the go-by to something but now you are asking for decentralisation. It is being done with political motive. That is the charge we are going to level against you.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், பாயின்ட் ஆப் கிளாரிபிக்கேஷன். தலைவரவர்களே, மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அவ்வளவு கோபமாகச் சொன்னார்கள். நாட்டுப் பிரிவினையை நாங்கள் விட்டுவிட்டோம் என்பதை வரவேற்று, அவர்களுடைய முன்னாள் தலைவர் பக்தவத்சலம் அவர்கள் பாராட்டி, இதே மன்றத்திலே பேசியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்றையதினம் அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, பங்களாதேஷ் தலைவருக்கு பிரதம அமைச்சர் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்; ஆகையால் நம்முடைய மாநில சுயாட்சி கோரிக்கைக்கு நிச்சயமாக ஆதரவு தருவார்கள் என்று கூறினார்கள். ஆக, இந்த நிலையில், நிச்சயமாக இந்த அளவில் நான் கூறுவதெல்லாம் உண்மையிலேயே மாநில சுயாட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறதா என்று கழிந்த கால சரித்திரத்தை ஒட்டிப் பார்க்கும்போது, பிரிவினைக்குத்தான் அது வித்திடுகின்றது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடந்த கால சரித்திரத்தை மாத்திரம் வைத்து, பிரிவினைக்கு வித்திடும், என்று சொல்வது எனக்குப் புரியவில்லை. கடந்த காலத்தில் இந்திரா காங்கிரசும் பழைய காங்கிரசும் பிரிந்து இருந்தார்கள். இப்போது ஒன்றாகி இருக்கிறார்கள். பிரிவினை அடிப்படையில் தான் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எங்களுக்குள் ஏற்பட்ட உடன்பாட்டைப் பற்றி இப்போது பல கருத்துக்களை எல்லாம் பல இடங்களிலும்—கூறியிருக்கிறார்கள். அந்த உடன்பாடு நாட்டின் நன்மைக்காக ஏற்பட்டது என்பதை மாத்திரம் கூறி, அதற்கு மேல் செல்ல நான் விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் உருவாக்குகின்ற ஒருமைப்பாடு நாட்டின் நன்மைக்காக; நாங்கள் உருவாக்குகின்ற ஒருமைப்பாடு நாட்டின் பிரிவினைக்காகவா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : யார் நாட்டுக்கு நன்மை செய்கிறார்கள் என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். இப்போது படிப்படியாக எடுக்கப்பட்ட பல முடிவுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால்தான் இந்த மாநில சுயாட்சி விவாதம் தேவையில்லை என்பதை நாங்கள் வன்மையாகக் கூறுகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் 1945-ம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன் மொழிந்த அன்றைய தீர்மானத்தின் அடிப்படையிலோ அல்லது 1947-ம் ஆண்டு மாண்புமிகு நேரு அவர்களின் தீர்மானத்தின் அடிப்படையிலோ 1950-ம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியல் சட்டத்தில் இல்லை என்று கூறினார்கள். 1945-ம் ஆண்டில் மாநில சுயாட்சிக்கு ஆதரவாக அந்தத் தீர்மானம் இருந்தது என்றால் 1945-ம் ஆண்டு இந்த நாட்டிலிருந்த சூழ்நிலையை இந்த அரசு நன்றாக உணர்ந்தாக வேண்டும். 1945-ம் ஆண்டு இந்த நாடு முழுவதும் ஒரே தலைமையின் கீழ், ஒரே கருத்தோடு இந்த நாடு விடுதலையடைய வேண்டுமென்ற போராட்டத்தில் சாதி, மத, இன வேறுபாடின்றி அரசியல் கட்சி வேறுபாடின்றி, அனைத்து மக்களும் அன்றைக்குப் போராடினார்கள். அன்றைய தினம் இந்த நாட்டிலுள்ள அனைத்து பிராவின்ஸ், அனைத்து பிரின்ஸ்லி ஸ்டேட்ஸ்களும், அது தவிர அங்கிலேயர் அல்லாத வெளி அதிக்கத்திலிருந்த பிரதேசங்களிலிருந்த மக்களும் ஒன்றாக இணைந்து தான் அந்தப் போராட்டத்தைச் செய்தார்கள்.

ஆக, அனைத்து மக்களும் தேச பக்தியும், நாட்டு பக்தியும் நாட்டு ஒருமைப்பாடும், ஒன்றாக வைத்து தான் அந்தப் போராட்டங்களை நடத்தினார்கள். ஆக இந்த நாட்டில் ஒரு பிரிவினை சக்தி ஏற்படும் என்றோ நாட்டை துண்டிக்கப்பட வேண்டுமென்றோ எண்ணம் அந்தத் தலைவர்களுக்கு ஏற்படவும் இல்லை, ஏற்பட ஏதுவும் ஒன்றுமில்லை.

ஆனால் 1950-ம் ஆண்டு அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது இருந்த இந்த நாட்டு நிலைமையை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாடு சுதந்திரமடைந்தவுடன் நாடு இரண்டாக துண்டிக்கப்பட்டது என்பதை இந்த மன்றம் நன்றாக உணரும். பாகிஸ்தான் ராஜ்யம் இந்தியாவை விட்டு துண்டிக்கப்பட்டது.

அது மட்டுமல்ல. இந்த நாட்டில் ஆங்காங்கே பல பிரிவினை சக்திகள் தோன்றியதையும் நாம் மறந்திடல் ஆகாது. அத்தோடு திராவிட முன்னேற்றக் கழகமானது அன்றைய தினம் திராவிட நாடு என்ற கோரிக்கையை வைத்திருந்தது என்பதை நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்று நான் எண்ணுகின்றேன். அத்தோடு நான் ஒன்றைக் கூறுகின்றேன்.

அன்று பிரின்ஸ்லி ஸ்டேட்ஸ்களெல்லாம், பல ஸ்டேட்ஸ்கள், இந்தியாவோடு சேருவதற்கு மறுத்து சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார்கள். உதாரணமாக திருவாங்கூரில் ஆண்டு கொண்டிருந்த திவான் சி. பி. இராமசாமி அவர்கள் பாகிஸ்தானோடு உடன்பாடு கொண்டு, திருவாங்கூரை தனி ராஜ்யமாகப் பிரகடனம் செய்வதற்கு முனைந்து வந்தார்கள் என்பதை நமக்கு சரித்திரம் நிரூபிக்கின்றது.

அது மட்டுமல்ல. ஹைதராபாத் ராஜ்யத்தில் என்ன நிலைமை இருந்தது. அத்தோடு நமது திராவிட முன்னேற்றக் கழகமானது இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்தால், மெட்ராஸ் ராஜ்யம் மெட்ராஸ் மாநிலம் வெள்ளையர் நேரடி நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் தெரிவித்திருந்தார்கள். இந்த சூழ்நிலையில் அன்றிருந்த தலைவர்களெல்லாம் தேசத்தினுடைய ஒற்றுமை குலைந்து போகக் கூடாது, தேசம் பாதுகாக்கப்பட

வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தான், ஒரு வேளை அதற்கு முன்னதாக மாநில சுயாட்சி எண்ணம் அவர்கள் உள்ளத்தில் இருந்தாலும் கூட, நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று இன்று இருக்கின்ற அரசியல் சட்டத்தை நிறைவேற்றித் தந்தார்கள் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இந்தத் தீர்மானம் கூறுகின்றது என்ன? நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே கடிதப்போக்குவரத்துத் தொடர்புகள், அன்னியச் செலாவணி, இந்த நான்கு தலைப்பின் கீழுள்ள அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசாங்கத்திடம் இருக்க வேண்டும், எஞ்சிய அனைத்து அதிகாரங்களையும் மாநிலங்களுக்கு அளித்தாக வேண்டும் என்று கூறும்போது நிச்சயமாக மத்திய அரசு ஒரு வலுவுள்ள அரசாக இருக்க முடியுமா என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தில் கூறுகின்றோம். மத்திய அரசாங்கம் வலுவுள்ள அரசாங்கமாக இருக்க வேண்டும் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். காலம் சென்ற முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அண்ணா அவர்களும்கூட மத்திய அரசு வலுவுள்ள அரசாக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் தீர்மானத்தைப் பார்க்கும்போது மத்திய அரசாங்கம் வலுவு குறைந்த அரசாங்கமாகவும் மாநில அரசாங்கம் வலுவுள்ள அரசாங்கமாகவும் மாறுவதற்கு ஏற்ற முறையில் இந்த அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் தான் இந்தத் தீர்மானம் இங்கே வந்திருக்கின்றது. இது இந்த நாட்டிற்கு நல்லதா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இருக்கின்ற சூழ்நிலையில் நாடு பாதுகாக்கப்பட்ட நிலையில் இருக்கின்றதா? சைனா நம் நாட்டை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறதா, அல்லது பாகிஸ்தான் நம் நாட்டோடு உள்ள உறவை புதுப்பித்துக் கொண்டதா? இன்னும் எத்தனையோ தீமைகள் நமது நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும்போது நாட்டின் மத்திய அரசு எந்த அளவுக்கு வலுவுள்ள அரசாங்கமாக

இருக்க வேண்டுமோ அது இருந்து தான் ஆக வேண்டும் என்பதை நாட்டுப் பற்றுள்ள, தேச பக்தியுள்ள எந்த நபரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் 1971-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகமானது தனது தேர்தல் அறிக்கையில் கோரியுள்ள ஒன்றை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தத் தேர்தல் அறிக்கையில் உள்ளது கூட இன்று இருக்கின்ற தீர்மானத்திற்கு முரண்பாடாக இருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் அந்தத் தேர்தல் அறிக்கையில் "பொருளாதார வளம் ஒரு சீராக எல்லா மாநிலங்களுக்கும் ஆக்குவதற்கான திட்டத்தை மேற்கொள்ளப்படும் என்பதற்கு தி.மு.க. பொறுப்புடன் பணியாற்ற உறுதி கொள்கிறது" என்று இருக்கிறது. ஆக, இந்த நாட்டிலிருக்கின்ற அனைத்து மாநிலங்களின் பொருளாதாரமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையைத் தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைய தினம் தீர்மானத்தைப் பார்க்கும்போது இந்த நான்கு அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசாங்கத்தில் இருந்தால் இந்த நாட்டிலிருக்கின்ற அனைத்து மாநிலங்களின் பொருளாதார நிலையைப் பாதுகாக்கின்ற பொறுப்பு யாரிடம் இருக்கும்? இல்லையென்று சொன்னால் நிச்சயமாக பல மாநிலங்களின் பொருளாதாரம் சிதைவு அடையும் என்பதை நிச்சயமாக யாரும் மறுக்க இயலாது.

ஆக, இன்றையதினம் வந்திருக்கின்ற தீர்மானத்தைப் பார்க்கும் போது நிச்சயமாக முன்னுக்குப் பின் முரண்பட்டதாக, இது ஒரு ஆப்டர் தாட் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றைய தினம் நமது நாட்டிலிருக்கின்ற நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற பெரும் ஆபத்தை நாம் அனைவரும் உணர்ந்திருக்கின்றோம். கர்நாடக மாநிலமானது காவிரியின் குறுக்கே அணை கட்டியதன் விளைவாக தஞ்சைத் தரணி இப்போதிருக்கின்ற வளத்தை இழந்து விடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படக் கூடிய நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை

நிச்சயமாக நாம் அனைவரும் மறந்திருக்க இயலாது. மாநில சுயாட்சியை கர்நாடக மாநிலம் கேட்டால், மத்திய அரசாங்கம் இப்போது இருக்கின்ற சக்தியைக் கூட இழந்து விட்டால், தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கின்ற ஆபத்திலிருந்து தமிழ் நாட்டைக் காப்பது யார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதே ஒரு வேளை மத்திய அரசாங்கத்திற்குப் போதுமான அதிகாரம் இருந்தாலும் கூட . . .

திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாநில சுயாட்சி கொடுத்து விட்டால் அவர்கள் காவிரியில் அணை அங்கே கட்டப்பட்டு விடுமென்ற பாணியில் பேசுகிறார்கள். இப்போதே மத்திய அரசு தன்னுடைய அதிகாரத்தில் இருக்கிறபோதே கூட, கவர்னர் ஆட்சி அங்கே நடந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்ற நிலைமையிருந்தாலும், நிதி ஒதுக்கி அணை கட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். மத்திய அரசாங்கம் விரோதமாக இருக்கிறது என்பதுதான் குற்றச்சாட்டு. மாநிலங்களுக்கு விரோதமாக மத்திய அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பது தானே குற்றச்சாட்டு.

(நண்பகல் 12-00)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நமது மாநில அரசின் ஸ்டாண்டே கூட அணை கட்டக் கூடாது என்கிற ஆட்சேபனை இல்லை. நமக்குக் கிடைத்து வந்த தண்ணீர் அளவு குறையக் கூடாது என்பதுதான்.

திரு. எல். கணேசன் : அணை கட்டுவதற்கே கூட இரண்டு மாநிலங்களில் தொடர்பு உடைய ஆறுகள் எனில் அனுமதி பெற்றே கட்ட வேண்டுமென்பது விதி.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறிய கருத்தைத்தான் அன்பரும் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரியான விவகாரங்கள் எழும்போது மத்திய அரசு வலுவுள்ள அரசாக இருந்தால்தான் இரண்டு மாநிலங்களுக்கு மிடையே ஒரு நீதியை நிலைநாட்ட முடியும் என்கிற கருத்தினை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநிலங்களுக்கிடையே ஏற்படும் நீர் பற்றிய தகராறுகள் எப்படித் தீர்க்கப்பட வேண்டும் என்பது குறித்த தமிழ்நாடு அரசின் கருத்துரைகளில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அதையும் உறுப்பினர் படித்துப் பார்த்தார் களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் அவர்கள் 11.25-க்கு ஆரம்பித்தார்கள். இப்போது 12 மணி ஆகிறது. இன்னும் பத்து நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய இந்த விவாதத்தில் எங்கள் கட்சியின் சார்பில் யாரும் கலந்து கொள்ளாததற்கு வருத்தம் தெரிவித்தார்கள். அவர்களுக்கு திருப்தி ஏற்படுகிற வகையில் எங்கள் கட்சியின் சார்பில் எல்லாக் கருத்துக்களையும் சொல்வதற்கு தாங்கள் அனுமதி அளிக்க வேண்டு மென்று சுட்டிக்காட்டுகிறேன்.

நமது மாநிலத்திலுள்ள அனைத்துத் தொழில்களுக்கும் வெளி மாநிலங்களில் இருந்து தான் 'கோல்' எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோம். மின்சாரத்திற்குக் கூட மற்ற மாநிலங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாநில சுயாட்சியை எல்லா மாநிலங்களும் பெற்றுவிட்டால் இதற்கு இடையூறு வரும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, ராஜமன்னர் குழு அறிக்கையில் அரசியல் சட்டத்தில் முக்கிய சில ஷரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். குறிப்பாக ஆர்ட்டிகிள் 256, 257 ஆகியவை எல்லாம்—அதாவது மத்திய அரசு மாநில அரசு களுக்குக் கட்டளை பிறப்பிக்கிற அதிகாரங்கள் எல்லாம் எடுக்கப் பட வேண்டும் என்கிறார்கள். பாராளுமன்றம் சட்டங்கள் இயற்று கிறபோது, அந்தச் சட்டத்தை அமல்படுத்தச் சொல்லும் கட்டளை களைத்தான் மாநிலங்களுக்கு மத்திய அரசு அதன் மூலம் கட்டளை பிறப்பிக்க அந்த ஷரத்துக்கள் இருக்கின்றன. for that purpose direction can be given by the Centre. இதற்கான கட்டளைகளை

மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறதே தவிர, மாநிலத்தின்மீது, ஆதிக்கியத்தைச் செலுத்துவதற்கு இந்த ஷரத்துக்கள் இல்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, மாநில அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் எதுவும் மத்திய அரசுக்கு இல்லை என்று வைத்துக் கொள்வோம். அதுபோல மாநிலங்களில் உள்ள கார்ப்பரேஷன் களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லை என்றால்—கார்ப்பரேஷன்களில் நடக்கும் மோசடிகளை மாநில அரசு எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? சென்னை கார்ப்பரேஷனையே எடுத்துக் கொண்டால் மாநில அரசுக்கு அதிகாரம் இருந்த காரணத்தினால்தான் உடனடியாக அந்தக் கார்ப்பரேஷனைக் கலைத்து ஊழல், மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள்மீது மாநில அரசினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முதலமைச்சர் அவர்களால் முடிந்தது. இதுபோல மாநில அரசுகளில் ஊழல்கள், மோசடி குற்றச்சாட்டுகள் எழுகிறபோது அதை மேற்பார்வை செய்வதற்கு ஒரு சக்தி இருப்பது விரும்பத்தக்கது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நீதித் துறையை எடுத்துக்கொண்டால் உச்ச நீதி மன்றத்திற்கு அரசியல் அமைப்புப் பிரச்சினைகள் அல்லது மத்தியச் சட்டத் திற்குப் பொருள் விளக்கம் கூறுதலைத் தவிர மற்ற வழக்குகளில் அப்பீல் செய்கிற முறை தவிர்க்கப்பட வேண்டும் என்கிறார்கள். நான் கூறிக் கொள்வேன்—இதற்குக் காரணமாக—மத்திய அரசில் உள்ளவர்களின் ஆதித்தியம் தான் உச்ச நீதி மன்றத்தில் இருக் கிறது என்கிற ஐயப்பாடுதான். இதுபோன்ற ஐயப்பாடு ஏற்படுவது நல்லதா என்று கேட்க விரும்புகிறேன். அப்படிப் பார்த்தால் உயர்நீதி மன்றங்களில் மாநில அரசுகளின் ஆதிக்கியம் தான் இருக்கிறது என்கிற ஐயப்பாடும் எழும்பக் கூடும். இது போன்ற ஐயப்பாட்டை அகற்றி—நீதிமன்றங்கள் நடுநிலையோடு செயல்பட உதவ வேண்டுமே தவிர உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ள வழியே இருக்கக் கூடாது என்பது சரியல்ல.

உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளை நியமிக்கின்ற பொறுப்பு— இப்போது மாநில அரசுகளின் கருத்துரைகளைக் கேட்டு மேதகு ஆளுநர் அவர்கள் நியமிக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்கது

என்று கூறியிருக்கிறார்கள். நிச்சயமாக வரவேற்கத்தக்கதுதான். இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கின்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்கும் அது நிறைவேற்று கிற சட்டத்திற்கு ஜனாதிபதி தன் கையொப்பம் கொடுத்து அனும திக்கிற பொறுப்பும் இருக்கிறது. அது மிகவும் முக்கியமான அம்சம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால் இந்த நாட்டிலுள்ள யாருக்கும் பாதுகாப்பு இல்லாமல் போகும். மாநில அரசுக்கு இந்த அதிகாரம் வந்தால்—நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்—சபாநாயகரை நாம் எந்த எந்த முறையில் எல்லாம் நமக்கு அதிகாரம் இருக்கிறது என்று மாற்றியிருக்கிறோம் என்பதை—ஆகவே இந்த அதிகாரம் மாநிலத்திற்குத் தேவையில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் இந்த நாட்டில் பல்வேறு மைனாரிட்டி கள் இருக்கிறார்கள். சில மைனாரிடிகள் மதத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம் லீக் ஒரு அரசியல் கட்சி—மைனாரிட்டியினர் தங்கள் மதத்தின் அடிப்படையிலேயே கட்சி வைத்திருக்கிறார்கள். ஜனசங்கமும் மதத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு கட்சியாக இருக்கிறது. ஒருவேளை ஜனசங்கம் ஆட்சியில் இருக்கக்கூடிய நிலைமை ஒரு மாநிலத்தில் வந்தால் அங்குள்ள முஸ்லீம் மைனாரிட்டிகள் நிலைமை என்ன ஆகும்? இதை லத்தீப் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோல ஜனசங்கம் பெரும்பான்மை பெற்று மத்தியில் ஒரு அரசு அமைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் என்ன ஆகும்?

திரு. ஜே. ஜேம்ஸ் : ஜனசங்கம் எல்லாப் பகுதிகளிலும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்ற தடவை ஜனசங் கத்தோடு தேர்தலில் கூட்டு வைத்துக் கொண்டார்களே, ஒருவேளை இவர்களே வெற்றி பெற்று அமைந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

திரு. ஜே. ஜேம்ஸ் : உங்களோடும் கருத்து வேறுபாடுள்ள பலர் கூட்டு சேர்ந்திருப்பதனால் என்ன ஏற்பட்டிருக்கிறது? அதுபோல அப்போதும் எந்தத் தோஷமும் ஏற்பட்டிருக்காது. அதுபோல முஸ்லீம் லீக் பெரும்பான்மை பெற்று ஒரு மாநிலத்தில் அரசு அமைத்துவிட்டால் அந்தப் பகுதியில் உள்ள மைனாரிட்டியான ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் கதி என்ன ஆகும்? இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு உறுப்பினரே எல்லாக் கருத்துக்களையும் சொல்வது என்றால் 2 மணி நேரம் கூட போதாது. பலரும் பேச இருப்பதால் ஒவ்வொருவரும் சில சில கருத்துக்களைத் தொகுத்து குறிப்பிட்ட நேரத்திற்குள் பேச வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் ஏற்கனவே அதிக நேரம் எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கடைசியாக, நண்பர் ஆலடி அருணா அவர்கள் கூறினார்கள், இந்த அரசியல் சட்டத்தைக் கடலில் தூக்கி எறிய வேண்டிய நிலை ஏற்படும், இது இந்த நாட்டைப் பாது காக்கக்கூடிய நிலையில் இல்லை, என்று.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். கனம் ஆலடி அருணா அவர்கள் இந்த கான்ஸ்டிட்யூஷனை வங்கக் கடலில் போட வேண்டுமென்று சொல்கிறார். இங்கு மெம்பராகப் பிரமாணம் எடுத்ததே கான்ஸ்டிட்யூஷனுக்கு உட்பட்டுத் தான். ஆகவே, அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு, பிறகு வங்கக் கடலிலே தூக்கி எறியலாம்.

திரு. எல். கணேசன் : நாம் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பதோ, மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதோ அந்த அரசியல் சட்டத்திற்கு விரோதமானது இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசியல் சட்டத்தையே மதிக்காமல் வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று சொல்கிறவருக்கு இங்கே பதவி வகிப்பதற்கு என்ன இருக்கிறது?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு ஆலடி அருணா அவர்கள் கூறினார்கள். அவர் ஒரு வழக்கறிஞராக இருப்பதால், அதன் பலனைப் பற்றி அவருக்குத் தெரியாமல் இல்லை. தி.மு.க. அரசு பதவியேற்று, இந்த ஆட்சியில் இருக்கிறது என்றால், அந்த அரசியல் சட்டம் இருப்பதால்தான் மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் இன்று முதலமைச்சராக இருக்கிறார். ஒருவேளை ஆலடி அருணா அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது என்ன கோபமோ ? . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசியல் சட்டத்தை எழுதிய அம்பேத்கார் அவர்கள் அதைக் கொளுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுதெல்லாம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அதனால்தான் தி.மு.க.வி லிருந்து கொளுத்தி, அதற்குத் தண்டனையும் பெற்றார்கள். அதற்குப் பிறகு, இப்பொழுது ஆட்சிக்கு வந்த பிறகு தான் மாற்றிக் கொண்டு விட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அண்மையிலேதான் கோடம்பாக்கத்தில் கக்கன் அவர்கள் தலைமையில் அம்பேத்கார் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆலடி அருணா அவர்கள் இதை என்னுடைய சொந்தக் கருத்து என்று சொன்னார்கள். கட்சியின் கருத்து என்று சொன்னால் அதனால் முதலமைச்சருக்கு எவ்வளவு ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்துதான் அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளாததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானம் தேவையற்றது, இது தேவையில்லை யென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் முதலமைச்சர் அவர்கள் அம்பேத்கார் அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தவேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார். எனக்கு ஞாபகம் இல்லை. ஆதாரம் கொடுங்கள். நான் சொல்வது, நீங்கள் வெளியே போய்

என்ன வேண்டுமானாலும் கொளுத்துங்கள், சாப்பிடுங்கள். ஆனால், அரசியல் சட்டப்படி பிரமாணம் எடுத்துவிட்டு, அதை வங்கக் கடலில் போடுகிறோம் என்று சொன்னால் என்ன நியாயம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு ஏதாவது அப்ஜெக்ஷன் இருந்தால், பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து தனியாக டிஸ்கஸ் பண்ணலாம். இதிலே ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள்?

திரு. முனு ஆதி: 4 குருடர்கள் சேர்ந்து யானையைக் கண்டு பிடித்தார்கள் என்று அனந்தநாயகி அவர்கள் கூறினார்கள். எதிர் காலப் பதவி ஆசையை—குருடர்கள் பார்த்ததுபோல் பார்த்து, முழுமை அடையாத நிலைமையை அவர்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. அருணா ஒன்றும் முரண்படவில்லை. அம்மையார் அவர்கள் ஒரு கட்சியின் சார்பிலே உறுதி மொழி எடுத்து, இன்னொரு கட்சியின் சார்பிலே இங்கே பேசுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தப்பாகச் சொல்லாதீர்கள். We have not taken oath for the party; we have taken oath under the Constitution.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் உங்களைத் தேர்ந் தெடுத்த மக்களுக்கே மதிப்பளிக்காதவர்கள். அரசியல் சட்டத் தைப் பற்றிப் பேசியிருக்கிறீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆனால், இதை மக்களைச் சந்தித் துத்தான் செய்திருக்கிறேன், பேசிக் கொண்டிருக்கிறேன் என்று கலைஞர் கருணாநிதி அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அதைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டாம்.

திரு. க. மு. இராசகோபால்: அரசியல் சட்டத்தைக் கொளுத் தியவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்ததாகச் சொன்னார் கள். அப்பொழுது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் சென்னையிலே கொளுத்துவதாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னபோது, முன்கூட்டியே கைது செய்துவிட்டார் கள். ஆனால், மதுரை, செங்கற்பட்டு போன்ற இடங்களிலே

கொளுத்திய பிறகு, ஆணை பிறப்பித்து இப்படிக் கைதாக்கினார்கள். அதனால அதற்குப பினனால் இருநதவா அனறைய முதலமைச்சர் பகதவத்சலம என்பதை இந்த அவைக்குத தெரிவிததுககொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே, ஒரு வரலாற்றைச் சொல்லிவிடுகிறேன். எல்லாக் கட்சியிலேயும் இப்படிப்பட்ட பதவிப் பிரமாணங்கள் செய்வதைப் பற்றி சொன்னதனாலே தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்திலே யூனியன் ஜாக்கின் கீழ் பண்டித ஜவகர்லால் நேரு வைஸ்ராயிடத்திலே பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு, பிரதம அமைச்சரானார்கள். ஆகவே, அது ஒன்றும் புதிதல்ல.

THIRU K. M. SUBARMANIAM : Hon. Deputy Speaker, I have taken the oath under the present Constitution and I am going to speak in support of the Resolution brought by the Chief Minister. The reason is this. I feel I am not contradictory in my conscience. I have seen the working of the Constitution and I am working under it. But I think if the Constitution is altered and if it is bettered, the working of it will be better and that is the reason why, though we take the oath under the Constitution, we propose an amendment or alteration of it whenever we find it necessary for the good of the people. I do not think there is any objection to support such an amendment.

So far as we are concerned, we are taking this matter a bit lightly, I think. This is a very serious matter and this vitally affects about 55 crores of the people of India. This particular resolution is not a resolution pertaining to Tamil Nadu alone. For, if this resolution is accepted, or partially accepted with amendments, the working of the Constitution will be different, the administration will be different and the entire Indian financial conditions will be different.

Today, it is well known that decentralisation brings in better results. I do not think any experienced politician or administrator or executive will oppose decentralisation in any form. We

are thinking of decentralisation because of that. Secondly, the original Constitution was drafted by the Constituent Assembly, consisting of efficient lawyers, constitutional lawyers, efficient and experienced administrators, but not of men closely connected with the living conditions of the people. That has to be taken into account. Twenty-two or twenty-three years of the working of the Constitution has shown that we are gradually degenerating; our economic condition is terribly failing; inflation is raging like anything; unemployment is increasing on the one side and we are getting all sorts of inefficiency because of the fact that all administrative powers are concentrated in Delhi.

Sir, one great man—I do not wish to name him now—when the Constitution was adopted asked me. ' Do you know what the Constitution is, K.M.S. '. I did not know for, then I was a small boy. He said, ' The State is only a magnified Corporation of Madras '. It has only the powers of a magnified municipality. All power is concentrated in the Centre '. ' One day ', he said, ' people may drastically alter the Constitution so that the administrative powers are vested with the States '. To say that the D.M.K. Government brings in this resolution because of its weakness is meaningless. People know the present state of the country. We have to analyse why things are like this. On the basis of such an analysis it you find that justice cannot be done if directions are given from Delhi for the good of Kanyakumari, that power has to be transferred to the executive authority of Kanyakumari.

Similarly, both the Centre and the State are in charge of administration. The State has got certain responsibilities and similarly the Centre has got certain responsibilities, which the Centre alone can perform. Whatever that has to be administered by the State must be passed on to the States. I do not say that everything should be passed on to the States, as mentioned here

Take for example, Railways, I am alive and I know the M.S.M. Railway and S.I. Railway during the British days. There were small and small railway companies and the administration was not bad. Why not the administration of Railways be given to the States? Now there are Zonal Railways. Instead

of Zonal Railways, there is nothing wrong in having State Railways. The question is this. The entire co-relation and co-ordination must rest with the Board with power to the States to administer.

What is State autonomy? State Autonomy is full power to govern the States. State Autonomy is more powers to the States to administer within the limited framework of the Constitution. State autonomy means passing of such powers to the States to govern the States properly in all common matters. The subjects like Finance, like Defence or certain other aspects of Finance like Foreign Exchange, Foreign Relations, Foreign Debts can rest with the Central Government. They have been mentioned clearly here. I doubt whether they would be accepted in toto by other States.

The first and foremost is the Constitution of Inter-Council of States. This is very important. To-day the people are agitated against the rise in prices of essential commodities.

There was a Bandh in Maharashtra. There was a Bandh in Tamil Nadu. Who was responsible for this? Who was responsible for this rise in prices of essential commodities? If there is such an Inter-State Council, all the Chief Ministers can meet, think and take a decision on such vital matters. Yesterday only, Sir, under your Chairmanship we discussed one important thing with regard to the Housing Board.

We discussed that the Banks have refused to give credit to the Housing Board. The Schedule Banks have refused to give credit to the Housing Board at not less than 12½ per cent. Is it right on the part of the Schedule Banks, Sir? Are we to tolerate such a state of affairs?

If the banking is within the control of the State, can they say like that, Sir? Like that there are so many things. The Resolution has been drafted very nicely. The real powers that are necessary are with the Central Government now. There is a curb on getting credit facilities by the State Institutions. Since there is a curb on credit policies, the private bankers are lending money at 24 or 36 per cent. The private people get loans from them and charge the interest on the consumers.

Therefore, the prices are shooting up like anything. Now I am doing my business. If I am refused loan by a Schedule Bank or by a nationalised bank, I will go to some Champalal and get the money at 24 per cent or 36 per cent for four months and increase the prices of goods. Correspondingly, the retail prices will go up. This will happen, if there is no control by the State on banking, if there is no control on credit policy, if there is no control on industrial policy, and if there is no control on licencing policy. All these things are sure to happen. How can we accuse a Chief Minister of a State and how can the Chief Minister of a State control the rise in prices of commodities in such a situation? How can he control the prices?

The cotton prices are controlled by the Centre. The steel prices are controlled by the Centre. Steel is the most vital raw material for industries for production of essential commodities. It is a vital commodity for the construction of houses. It is a vital commodity for the manufacture of cycles, nails, cutting machines and so many other things. The prices are not controlled by the Government of Tamil Nadu.

Similarly, price of sugar is controlled by the Government of India and 30 per cent of the production is given by the Centre for open market sales. Why should there be this 30 per cent open market sales? It is only to please the so-called capitalists this 30 per cent free market sale has been introduced.

Similarly, with regard to cloth also, they have made the same thing. I know this because I am in cloth trade for the past 36 or 37 years. In the cloth trade, 25 per cent is controlled cloth. What is happening is this. So many mills instead of producing controlled cloth, they simply show in their accounts that they have produced so much of quantity of controlled cloth. Can the Hon. Minister for Industries, Thiru Madhavan get into the mill and ask the mill owner what is his production of controlled cloth? The power is vested with the Centre. I am only quoting a few examples.

1974 ஏப்ரல் 17] [Thiru K. M. Subramaniam]

The price of cotton cloth has been increased by 20 per cent just 15 days back. Increase of 20 per cent is not a joke. The price of the essential commodity of cloth goes up. The millers are happy about the increase in their commodity. It is because the Centre could not have good administration though they may have good rules.

Unless the State autonomy comes true, unless the State is given full powers, it would be difficult to solve the problem of rise in prices of essential commodities.

I think even in Railways, the State should have powers. Of course, I do not think the State should have power in Income Tax because there is difficulty in the collection of taxes. But the State should have powers in sharing the income-tax. In the collection of income-tax, there is this dfficulty. If the tax is collected in Madras, then the business people will have their accounts in Bombay and Calcutta and it may not be possible to trace them.

So far as the other subjects mentioned by our Hon. Dr. M. Karunanidhi on the views of the Tamil Nadu Government on Rajamannar Committee's Report, I do not agree cent per cent. I agree 90 per cent and would like to say that State autonomy is an absolute necessity. Otherwise what will happen is, as pointed out by my friend Aladi Aruna, the Constitution has to be thrown into the Bay of Bengal. He need not throw the Constitution into the Bay of Bengal but the people themselves will throw it in the Bay of Bengal because they cannot tolerate the huge starvation, they cannot tolerate mismanagement, and they cannot tolerate large scale unemployment. The people will be forced to rebel. Unless a Committe sits immediately and goes into the recommendations of this legislation, it cannot be averted. The States should have full effective powers to control, to govern to regulate the matters and act properly; otherwise, they are completely doomed. Thank you Sir.

* திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை மிக வன்மையாக எதிர்த்து சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் தேவையற்றது, காரிய சாத்தியம் இல்லாதது, நாட்டிற்கு அபாயம் விளைவிக்கக்கூடியது என்ற காரணங்களால் நான் இதனை வன்மையாக எதிர்க்கிறேன். தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி இங்கே விவாதிக்கும்போது

We cannot discuss it in abstract. We will have to discuss it therotically as well as, in the present contex''

இந்தத் தீர்மானத்திற்கு அடிப்படையாக ராஜமன்னார் கமிட்டி அறிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பற்றிச் சொல்லும்பொழுது இந்த அறிக்கைக்குப் பெயர் Report of the Centre-State Relations Inquiry Committee என்று இருக்கிறது. மெய்யாகவே இந்த கமிட்டி 'சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஸ்' பற்றிய என்கொயரி கமிட்டி அல்ல.

It was a Committee formed with the purpose of arguing a case for State autonomy. This was the reason why a Committee was appointed. It was not appointed to go into the question of Centre-State relations, to go into the question of how to readjust the Centre-State relations for the objective of having a strong and united country.

(பிற்பகல் 12.30)

அடுத்து சட்ட மேதைகளை இந்தக் கமிட்டி உறுப்பினர்களாக அரசு நியமித்தது. நான் நினைக்கிறேன் இந்த மோசமான வழக்கை வாதாடுவதற்குச் சாதாரண வழக்குரைஞர்கள் போதாது, மிகுந்த கெட்டிக்கார வழக்கறிஞர்களாக இருக்க வேண்டும். 'Very skilled and clever lawyers are essential என்ற வகையிலே தான் இவர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அவ்வளவு கெட்டிக்கார வழக்குரைஞர்களாக இருந்தும் அவர்களாலே கூடப் போதுமான அளவில் சரியாக வழக்கை உருவாக்க முடியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்வேன்.

அடுத்து, மாநில சுயாட்சி என்ற அந்த வார்த்தையை, என்ற அந்தத் தீர்மானத்தை முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்குச் சில காரணங்கள் முக்கியமானவை

என்று சொல்லப்படுகிறது. மக்களுக்கு நன்மைகள் செய்வதற்கு, நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் போதவில்லை என்பது ஒரு காரணம். தேவையான பணம் கிடைக்கவில்லை மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து என்பது இன்னொரு காரணம். பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படுகிறது என்பது மூன்றாவது காரணம். பாரபட்சம் காட்டப்படுகிறது என்பது இன்னும் ஒரு காரணம். இம்மாதிரி பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதிகாரத்தைப் பொறுத்த வரையில் இங்குமங்கும் போதாது என்ற உணர்வுகள் இருக்கலாம். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே ஏற்கனவே இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டே பல நல்ல காரியங்கள் இந்த மாநிலத்திலே முன்னர் காங்கிரஸ் அரசுகளாலே செய்யப்பட்டிருக்கின்றன. ஏராளமான தொழில்களைத் தொடங்கி, இந்த மாநிலத்திலே மின்சார வசதியை அதிகப்படுத்தி, பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து சமுதாய மாற்றம் ஏற்படுத்தப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருவதற்கு இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டே செய்ய முடிந்தது. ஆனால் இப்பொழுது நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இந்த அரசு இருக்கின்ற அதிகாரத்தை எப்படிப் பயன் படுத்துகிறது என்றால்—இந்த மாநிலத்தில் ஜனநாயகத்தைப் பாழடிப்பதற்கு, தனது கட்சியின் சர்வாதிகாரத்தை, party autocracy இங்கே உருவாக்குவதற்குத்தான் முயன்று கொண்டிருக்கிறார்கள். கிடைக்கின்ற அதிகாரத்தை மக்களுக்கு நலம் பயக்கும் காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் ஒரு கட்சியின் ஆதிக்கத்தை என்றென்றைக்கும் நிலைபெறச் செய்ய, ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கப் பயன்படுத்தும் நிலையில் மேலும் அதிகாரம் வேண்டுமென்று கேட்கும்பொழுது அந்தக் கோரிக்கையை I cannot view it without suspicion.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திற்குக் கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆனால் இங்குள்ள உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு இயக்கம், இன்னும் பல்வேறு அமைப்புகள் இவற்றிற்கெல்லாம் கூடுதலாக அதிகாரம் வேண்டுமென்று அவைகள் கேட்கின்றனவே அதற்கு நீங்கள் அளிக்கும்

பதில் என்ன? சட்டபூர்வமாக இருக்கட்டும், சட்டத்தில் என்ன சொல்கிறது என்பது வேறு இருக்கிறது, ஆனால் நடைமுறையிலே பாரபட்சம் காட்டுவதில்லையா? நடைமுறையிலே அவர்கள்மீது சர்வாதிகாரத்தைத் திணிப்பதில்லையா?

இவைகளை யெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள். பதில் என்ன சொல்கிறார்கள் என்றால் பல்வேறு நிலைகளில் இவை தேவைப்படு கின்றன என்று சொல்கிறார்கள். அவைகளுக்கும் கூடுதல் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற 'ஃபிலாசபி' இருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த ஃபிலாசபி கிடையாது. சாதாரண மக்களிடத்திலே அதிகாரம் போக வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அதிகாரத்தைத் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டு தவறுகளைச் செய்ய வேண்டுமென்ற ஃபிலா சபியை வைத்துக் கொண்டு, எங்களுக்கு இன்னும் கூடுதலாக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது முரண்பட்டதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணம் போதுமான அளவில் இல்லை என்று சொல்லியிருக் கிறார்கள். ஃபைனான்ஸ் கமிஷனைப்பற்றிக் குறைப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள். பணம் போதாது என்ற கோரிக்கையை நான் தவறு என்று சொல்ல மாட்டேன். எந்த மாநிலமும், எந்த உள்ளாட்சியும், எந்த அமைப்பும் கூடுதலாக வேண்டுமென்று 100 கேட்டால்தான் 50-வது கிடைக்கும். ஒவ்வொரு மாநிலத் திற்கும் கூடுதல் வேண்டுமென்று ஒவ்வொரு மாநிலமும் கேட்கும். அப்படிக் கேட்பதை நான் குறை சொல்ல மாட்டேன். ஆனால் அதையே ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது. இந்த மாநிலத்திற்குப் பாரபட்சம் காட்டு வதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால் உண்மை வேறு வகையாக இருக்கிறது. ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன்.

Fourth Five-Year Plan— Central assistance
என்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் பார்த்தால், நான் நான்கைந்து மாநிலங்களைப்பற்றி மட்டும் கணக்கைச் சொல்கிறேன்.

Gujarat 34.7 per cent out of the total outlay.

Haryana 34.7 per cent.

1974 ஏப்ரல் 17] *[திரு. ஏ. சுப்பிரமணியம்]*

Maharashtra 27 per cent.

Punjab 34 per cent.

Tamil Nadu 40 per cent.

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் இதற்குமேல் கேட்க வேண்டாமென்பதற்காகச் சொல்லவில்லை. நான் சொல்வது, தமிழகத்திற்கு மட்டும் ஓரவஞ்சனை காட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு உண்மை அல்ல. It is opposed to facts. என்பதனைக் காட்டுவதற்காக இந்த ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டேன்.

இன்னொன்றும் சொன்னார்கள். ஃபைனான்ஸ் கமிஷன் போதுமான அளவில் நிதி ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். புரஹிபிஷனுக்காக நஷ்ட ஈடு தரவில்லை என்ற குறைபாடு அரசின் சார்பில் சொல்லப்பட்டது. ஃபைனான்ஸ் கமிஷனிடம் என்ன கேட்டார்கள்? புரஹிபிஷனை அமல்படுத்திவிட்டு நஷ்ட ஈடு வேண்டுமென்று கேட்கவில்லை. புரஹிபிஷனை அமல் செய்தால் எங்களுக்கு இழப்பு ஏற்படக் கூடும், அதற்கு நீங்கள் உத்தரவாதம் கொடுப்பீர்களா என்று கேட்டார்கள். அவர்கள் கொடுக்கவில்லை. ஆகவே, அதைக் குற்றச்சாட்டாகச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலைகளைப் பொறுத்த வரையில் இராஜமன்னார் கமிட்டி அறிக்கை என்ன சொல்கிறது? அந்த அறிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. 57-வது பக்கத்தில்

Financial autonomy of the Centre and State is vital to the preservation of the federal principle.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதே அறிக்கையிலே 17-வது பக்கத்திலே

'The reasons for the perpetuation and growth of unitary trends are mainly

(c) Inadequacy of State's fiscal resources and consequent dependence on Centre for financial assistance.'

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இராஜமன்னார் கமிட்டி அறிக்கையே சொல்கிறது, பல மாநிலங்களுக்கு—எல்லா மாநிலங்களுக்கும் இருக்க முடியாது—பல மாநிலங்களுக்கு செல்வாதாரப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் அவைகள் மைய அரசினிடத்தில் நிதி உதவிக்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட மாநிலங்கள் என்ன செய்வது? பல மாநிலங்கள் இருக்கின்றன. எதற்காக இதைப்பற்றிச் சொல்கிறேன் என்றால், இராஜமன்னார் கமிட்டி.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தம்முடைய கருத்தைச் சொல்லியிருந்தால் நான் குறுக்கிட்டிருக்க மாட்டேன். இராஜமன்னார் கமிட்டி அறிக்கையில் முரண்பாடு இருப்பதாக இல்லாத ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மேற்கோள் காட்டியதைத்தான் நான் சொல்கிறேன். போதுமான நிதி ஆதாரங்கள் மாநிலத்தில் இல்லை என்று சுட்டிக்காட்டி, அடிக்கடி கெஞ்ச வேண்டியிருக்கிறது என்று சுட்டிக்காட்டி, பரிந்துரைகள் வரும்பொழுது அந்த நிலையை மாற்ற நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பெருக்கித் தாருங்கள் என்று முடித்திருக்கிறார்கள். எனவே இதில் முரண்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. சுப்பிரமணியம் : நிதி ஆதாரங்கள் என்பது கேட்டவுடன் கிடைக்கின்ற காமதேனு அல்ல. நிதி ஆதாரங்கள் என்பது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். நமக்கே தெரியும்.

பீஹார் மாநிலத்தில் நிலக்கரி அதிகமாக இருக்கிறது, இன்னொரு மாநிலத்தில் இன்னொரு பொருள் அதிகமாகக் கிடைக்கிறது, அதனால் அதிக வருவாய் இருக்கிறது.

பம்பாய், கல்கத்தா போன்ற மாநிலங்களில் தொழில்கள் மிகுதியாகக் குவிந்து கிடக்கின்றன. எனவே அங்கே வருமான வரிகள் கூடுதலாகக் கிடைக்கும், தொழில் வரி கூடுதலாகக் கிடைக்கும்.

ஆனால் ஒரிசாவை எடுத்துக் கொண்டால் தொழில்துறையில் பின்தங்கி இருக்கிறது. எனவே நிதி ஆதாரங்களை இஷ்டம்போல் ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்வது சாத்தியப்படாது.

1974 ஏப்ரல் 17] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்தையும் நிதி ஆதாரங்களை நீங்களே தேடிக் கொள்ளுங்கள் என்று சுயாட்சி கொடுத்தால் என்னவாகும்? கோவை மாவட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் நிறையக் கிடைக்கும், ஆனால் இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்கு அப்படிக் கிடைக்காது. ஆகவே, மாவட்டத்திற்கு மாவட்டம், தாலுக்காவிற்குத் தாலுக்கா எப்படி மாறுபட்டிருக்கிறதோ, அதேபோல்தான் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டிருக்கிறது. அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் மட்டுமே நிதி ஆதாரங்களைத் தேடிவிட முடியாது.

இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சேங்ஷன் ஆவதில் தாமதம் ஏற்படுகிறது, ஆகவே, மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்கிறார்கள். தாமதம் எல்லாயிடத்திலும்தான் ஏற்படுகிறது. ஒரு மாநில ஆட்சியிலே மாதக் கணக்கிலே ஆண்டுக் கணக்கிலே தாமதம் ஏற்படுகிறது. பல்வேறு பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக மாதக்கணக்கில் ஆண்டுக்கணக்கில் சேங்ஷன் ஆகாமல் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு சுயாட்சி கொடுக்கலாமா? தாமதம் ஏற்படுகிறது என்றால் பல நிர்வாக இயந்திரங்களில் பல்வேறு கோளாறுகள் இருக்கலாம். அந்த இயந்திரத்தை நாடு முழுவதிலும் சீர்திருத்தி அமைக்க வேண்டும்.

தாமதத்திற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. நிர்வாக இயந்திரத்தில் இருப்பவர்கள் மனிதர்கள் தான். மனிதர்கள் பல்வேறு விருப்புகள், வெறுப்புகளுக்கு உள்ளாவார்கள். எல்லா இடங்களிலும் இருக்கிறது. சாதி உணர்வுகள் இருக்கும், பிரதேச உணர்வுகள் இருக்கும், மாவட்டம் என்ற உணர்வு இருக்கும். அம்மாதிரி— They also play a part இதெல்லாம் அன்றாட நிர்வாகத்தில் ஏற்படுகிற கோளாறுகள்— Human factor plays a major role in that அந்த மாதிரி விஷயங்களுக்கு அரசியல் சட்டத்தை மாற்றி நாட்டின் பொலிடிகல் செட்-அப்பையே மாற்ற வேண்டுமென்று கூறுவது சரியான தல்ல.

இது அபாயகரமானது என்பதற்குச் சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். இதைச் சொல்வதற்கு முன்னால் முதலமைச்சர் அவர்கள் உரையில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 1947 ஜனவரி மாதம் கான்ஸ்டிடுவன்ட் அசெம்பிளியில் பேசியதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அடானமஸ் ஸ்டேட் வேண்டு மென்று அவரே கூறியிருக்கிறார் என்று சொன்னார்கள். இது 1947-ம் ஆண்டு ஜனவரி மாதம் நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு கூறிய கருத்து.

நாடு விடுதலை பெற்றது ஆகஸ்டு 15-ம் தேதிதான். அன்று இந்தியாவுக்கு விடுதலை பெற்றது எந்த அடிப்படையில்? பெத்திக் லாரன்ஸ் திட்டத்தின் அடிப்படையில், லார்டு வேவல் திட்டத்தின் அடிப்படையில் சுதந்திரம் கிடைத்தது. அதற்குப் பல்வேறு எதிர்ப்புகள் இருந்தன. அன்று பிரின்ஸ்லி ஸ்டேட்ஸ்—600-க்கு மேற்பட்ட மன்னர்கள் இருந்தனர். அவர்கள் ஆங்கில அரசின் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்பட்டனர். பிரதேச வெறிகளை வளர்த்து வந்தார்கள். அந்த எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து எப்படியும் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்தாக வேண்டும், ஆங்கிலேய ஆட்சி அகற்றப்பட வேண்டுமென்ற காரணத்தால் சிலபல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.

அன்று மன்னர்களுக்கு மானியம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டோம். கவனன்ட்ஸ் ஏற்படுத்தி புனிதமானது என்று சொன்னோம். மானியங்கள் உண்டு, பிரின்ஸ்லி ப்ரிவிலெஜஸ் தரப் படும் என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. ஆனால் பின்னர் The covenant was torn to pieces இதனைப் பலர் எதிர்த்தார்கள். அன்று கவனென்ட் புனிதாமனது என்று சொன்னார்கள். நாம் என்ன பதில் சொன்னோம்? கால மாறுதலுக்கேற்றவாறு மாற்றுவதாகச் சொன்னோம்.

அந்நிய அரசின் பாக்கெட்டுகளாக, சுதந்திரத்தை சாபடேஜ் செய்யும் ஏஜெண்டுகளாக அவர்கள் இருப்பார்கள் என்ற காரணத்தால், அன்று அவர்களுக்குச் சலுகைகள் காட்ட வேண்டிய

அவசியம் ஏற்பட்டது, காட்டினோம். இன்று கால மாறுதலுக்கேற்ப அதை எடுத்து விட்டோம். அப்படி பல்வேறு மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

முப்பது முறை அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆமாம்; செய்திருக்கிறோம். எதற்காக? இந்த நாட்டை இன்றைய நிலையிலிருந்து முன்னுக்குக் கொண்டு போக, பொருளாதாரத் துறையில் நாட்டிலிருக்கும் ஏற்றத் தாழ்வுகளை அகற்ற, சமுதாய நீதியை ஏற்படுத்த இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்தோம். ஆனால் இந்தத் தீர்மானத்தைப் பார்த்தால். இந்த நாட்டைத் துண்டாடுகிற வகையில் இருக்கிற தன்மை இருக்கிறது. மைய அரசைப் பலவீனப்படுத்தும் வகையில் இருக்கிறது. அன்று ஜவகர்லால் நேரு அவர்கள் சொன்னதை மேற்கோள் காட்டுவது பொருந்தாது. அன்றைக்கு இருந்த நிலையில் சொன்னார்கள். அதே ஜவகர்லால் நேரு இருந்துதான் 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி இந்த அரசியல் சட்டத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் இவர்கள் பல்வேறு அதிகாரங்களைக் கேட்கிறார்கள் என்பது தெரிகிறது. கான்ஸ்டிடியூஷன் 256-வது ஆர்டிகிளையே எடுத்து விட வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த ஆர்டிகிள் என்ன சொல்லுகிறது? நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களை மாநிலங்கள் ஒழுங்காக நிறைவேற்றுகின்றனவா என்பதைக் கண்காணித்து டைரக்ஷன் கொடுக்கும் அதிகாரத்தைத் தந்திருக்கிற பிரிவு அது. அந்தப் பிரிவை எடுத்து விட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாம்தான் நாடாளுமன்றத்தை உருவாக்கி வைத்திருக்கிறோம். நாடாளுமன்றத்திற்குப் போட்டியாக சூப்பர் பார்லிமெண்ட் போல் இன்டர் ஸ்டேட் கவுன்சில் என்ற ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படுவதற்கு டைரக்ஷன் கொடுக்கும் அதிகாரம் மைய அரசுக்குக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஏப்ரல் 17

டாக்ஸைப் பொறுத்தவரை என்ன சொல்லுகிறார்கள்? இன்கம் டாக்ஸ், எக்ஸைஸ் டியூட்டி, கார்ப்பரேஷன் டாக்ஸ், எஸ்டேட் டியூட்டி, டெத் டியூட்டி, டர்மினல் டாக்ஸ் என்று எல்லா வரிகளும் போட மாநில அரசுக்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். முதலமைச்சர் கருணை கூர்ந்து மைய அரசுக்கு விட்டிருக்கும் வரிகள் இரண்டே இரண்டு. கஸ்டம்ஸ் டியூட்டி, எக்ஸைஸ் டியூட்டி. இந்த இரண்டு வரிகளை வைத்துக் கொண்டு சென்டர் ஸ்ட்ராங்காக இருக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி இருக்கும்?

Financially also the Centre must be strong: militarily the Centre must be strong and politically also the Centre must be strong.

எல்லா வகையிலும் சென்டர் வலுவாக இருந்தால்தான் நல்லது. இப்போதுள்ள நிலை முன்பு மாதிரி அல்ல.

Fissiparous tendencies have raised their heads throughout the country

பல்வேறு வகையான பிரிவினை எண்ணங்கள் வருகின்றன. இந்த நாட்டில் முற்போக்கான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். மாநிலங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் முற்போக்கான சட்டங்கள் நாடு முழுமையும் வர முடியாது. ஒரு மாநிலத்தில் முற்போக்கான அரசாங்கம் இருக்கலாம். வேறு சில மாநிலங்களில் பிற்போக்கான அரசாங்கங்கள் இருக்கலாம். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 20 நிமிடம் கேட்டீர்கள். இன்னும் ஐந்து நிமிடத்திற்குள் முடித்து விடுங்கள்.

திரு. முனு ஆதி: இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பேசுவதற்கு சான்ஸ் இல்லை. நேரம் இல்லையென்று ஆகிவிட்டது. துணைத் தலைவர் தேர்தல் எல்லாம் முடிந்து 11½ மணிக்குத் தான் இந்த விவாதத்தை ஆரம்பித்தோம். பேச வேண்டிய பிரச்சினை அதிகமாக இருப்பதால் 19-ம் தேதியோடு

முடித்து விடாமல் 20-ம் தேதியும் வைத்துக் கொள்ளலாம். எல்லாக் கட்சிகளும் தங்கள் கருத்துக்களை விளக்கமாகச் சொல்ல வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிக்கு ஒருவர் வீதம் பேசுங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று உறுப்பினர்கள் பிரச்சினையை இழுத்துக் கொண்டு சென்றிருக்காவிட்டால் 11½ மணி ஆகியிருக்காது.

திரு. முனு ஆதி : முதல்வர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் பேசி 20-ம் தேதியும் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம் இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அப்படி பிற்போக்கான அரசாங்கங்கள் இருந்தால் முற்போக்கான சட்டங்களை அந்த அரசுகள் கொண்டு வராது. நாட்டில் உள்ள முதலாளித்துவ சக்திகளைப் பற்றி நமக்குத் தெரியும். இந்த நாட்டில் இருக்கும் முதலாளித்துவ சக்திகள் மட்டுமல்ல, அந்நிய நாட்டு சக்திகள் கூட பல இடங்களில் செயல்படும் என்பது அவர்களுக்கே தெரியும். அது எங்கெங்கு ஊடுருவுகிறது என்று தெரியும். இப்படி ஆங்காங்கு பிற்போக்கு சக்திகள், முதலாளித்துவ சக்திகள், அந்நிய நாட்டு சக்திகள் ஊடுருவ இடம் கொடுத்துவிட்டால் மத்திய அரசு எப்படி வலுவாக இருக்க முடியும்?

மாநிலத்திற்கு மாநிலம் தகராறு வருகிறது. யார் அவற்றைத் தீர்ப்பது? மாநில சுயாட்சிப்படி மைய அரசுக்கு இருக்கிற அதிகாரங்கள், டிபென்ஸ், கம்யூனிகேஷன்ஸ்—மற்ற அதிகாரங்கள் எல்லாம் மாநிலங்களுக்குத்தான் என்று சொல்லிவிட்டார்கள். இவ்வளவு அதிகாரங்களைக் கொடுத்து விட்ட பிறகு மாநிலங்களுக்கிடையே ஏற்படுகிற பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி? அவற்றை எல்லாம் தீர்ப்பதற்கு மைய அரசுக்கு அதிகாரம் வேண்டுமா, வேண்டாமா? அந்த நிலையில் என்ன ஏற்படும்? 'சிவில் வார்' உண்டாகும். அமெரிக்காவில் லிங்கன் காலத்தில் வந்தது போல் மாநிலத்திற்கு மாநிலம் 'சிவில் வார்' உண்டாகும்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஏப்ரல் 17

இப்போதே பல்வேறு பிரச்சினைகளைக் கிளப்பி விட்டுக் கொண் டிருக்கிறோம். மாநில வெறியை, மொழி வெறியை உண்டாக்குகிற மாதிரி ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களே பேசுகிறார்கள். மகா ராஷ்டிரத்தில் தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் பாதிக்கப் படுகிறார்கள். இங்கு இரண்டு கோஷம் இருக்கக் கூடாது, மற்ற மொழிக்காரர்கள் அடக்கத்தோடு இருக்க வேண்டும் என்றெல்லாம் முதலமைச்சரே சொல்லும் நிலை ஏற்பட்டால் மாநிலத்திற்கு மாநிலம் ஆங்காங்கு 'சிவில் வார்' தான் வரும்.

அது இந்த நாட்டில் வர வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர் களா? நிச்சயம் கூடாது என்று நான் நினைக்கிறேன். இந்த நாடு ஒற்றுமையான, வலுவான நாடாக இருக்க வேண்டுமென்று தான் நாங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டோம். சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் நாங்கள். பல தியாகங்களைப் புரிந்திருக்கின்றனர் பலர். உயிரைக் கொடுத்து தியாகங்கள் செய்தது எதற்காக? அவர்கள் நாடு பிரிந்து போக தியாகம் செய்ய இல்லை. நாடு வலுவாக இருக்க வேண்டுமென்றுதான் அவர்கள் தியாகம் செய்தார்கள்.

அடுத்தபடியாக, கால மாறுதல் பற்றிச் சொல்லும்போது நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் டெல்லியில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். ஜனநாயகத்தை இந்த நாட்டில் வளர்ப்பதற்கான ஆலோசனைகளைக் கூற ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அதற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன், நானும் போயிருந்தேன், நாற்பது ஐம்பது வல்லுநர்கள், சட்ட வல்லுநர்கள், மற்றும் பெரியவர்கள் வந்து கூடியிருந்தார்கள்.

அப்போது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர் சொன் னார், பஞ்சாயத்து ராஜ் என்பது ஜயப்பிரகாஷ் அவர்களுக்கு, அவர்களது நெஞ்சுக்கு இனிய ஒன்று. ஊராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கருத்துச் சொல்லப்பட்ட போது அவர்கள்—அந்தக் குடியரசுக் கட்சித் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தார்கள்—அதைக் கடுமை யாக எதிர்த்தார்கள். எதிர்த்ததற்குக் காரணம் என்ன? இன்றி

ருக்கிற சமுதாய அமைப்பில் பஞ்சாயத்து ராஜ்யம் என்று கொடுத்துவிட்டால் அங்கு ஜாதி இந்துக்கள் தான் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று கூறி, பஞ்சாயத்து ராஜ்யம் என்று வந்தாலும் மேலே இருக்கிற அரசுக்கு அதில் தலையிடுகிற அதிகாரம் இருந்துதான் தீரவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு காலத்தில் பல்வேறு கருத்துக்கள் இருந்தன. சுதந்திர போராட்டக் காலத்திலும் அதற்கு பின்னல்கூட எவல்யூஷன் ஸ்டேஜில் பல்வேறு கருத்துக்கள் பலரால் சொல்லப்பட்டு வந்தன. அரசியல் கட்சிகளும் காலத்திற்கேற்ப, நடைமுறைக்கேற்ப, தங்கள் கருத்துக்களை, தங்கள் கோட்பாடுகளை, தங்கள் குறிக்கோள்களை நிலைமைக்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படத்தான் செய்யும்.

தியரிப்படி ஒன்றைச் செய்தால் ப்ராக்டிக்கலாகப் பல கஷ்டங்கள் சில சமயங்களில் நேரிடுகின்றன. ஆகவே 1947-ல், 45-ல், 35-ல் என்ன சொன்னர்கள், என்று சொல்வதை விட்டு இன்றிருக்கிற ப்ரெசண்ட் டே கான்டக்ஸ்டில் பார்க்க வேண்டும். அப்படி அது சரியாக இருக்குமா என்று பார்க்கும்போது இது ஆபத்தானது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இது யாரிடமிருந்து வருகிறது, எங்கிருந்து வருகிறது என்று பார்க்கும்போது இன்னும் பெரிய ஆபத்தாகத்தான் எங்களுக்குப் படுகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூடக் கேட்டார்கள். திரு. கந்தப்பன் அவர்கள்கூட கேட்டார்கள்.

Do you suspect our bona fides?

என்று கேட்டார்கள். ஆம்

but we do not suspect individuals' bona fides. We do suspect the bona fides of the ruling party.

காரணம் என்ன. சரித்திரம்.

முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1962-ல் திராவிட நாடு கோரிக்கையை விட்டு . . .

[1974 ஏப்ரல் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சரித்திரம் என்றால் அப்போது நேரு அவர்கள் பேசியதும் சரித்திரம்தான். அந்தச் சரித்திரத்தை விட்டுவிட்டு இந்தச் சரித்திரத்தை மாத்திரம் எடுத்துக்கொள்வது என்ன முறை?

திரு. ஏ. சுப்பிரமணியம்: நேருவைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் எல்லோருக்கும் தெரியும். அதனால்தான் சொல்கிறேன். வார்த்தைகள், எல்லோரும் ஒரே வார்த்தைகளைத்தான் பயன்படுத்துவார்கள். சர்வாதிகாரத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்களும், காலமெல்லாம் சர்வாதிகாரம் செலுத்துகிறவர்கள் ஜனநாயகம் பற்றிப் பேசினால், காலமெல்லாம் அக்கிரமங்கள் செய்கிறவர்கள் பூஜை செய்ய முற்பட்டால், கோவிலுக்கு சென்று கும்பிடுகிறேன் என்று சொன்னால், வார்த்தைகள் சரியாக இருக்கலாம், ஆனால் யார் சொல்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் பேசுகிற கருத்துக்கள் பி.எஸ்.பி. அடிப்படையில் எடுத்துக் கொள்வதா அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சி அடிப்படையில் எடுத்துக் கொள்வதா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தக் கேள்வி வரும் என்று எனக்குத் தெரியும். பி.எஸ்.பி. தலைவர்கள் கூட, நான் இருந்த பி.எஸ்.பி. கட்சித் தலைவர்கள் கூட ஸ்ட்ராங் சென்டர் வேண்டும் என்று சொல்கிறார்கள். முன்பு பி.எஸ்.பி. சொல்லி வந்த டிசென்ட்ரலைசேஷன் கொள்கை பொருந்தாது என்று வெளிப்படையாக நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள்.

உங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் 1962-ல் பிரிவினையை நாட்டுப் பற்றினால் விடவில்லை. 1962-ல் சட்டம் வரும் என்று தெரிந்ததற்குப் பிறகு பிரிவினை வாதம் பேசுவது கிரிமினல் குற்றம் என்று ஆக்கப்படுமென்று தெரிந்ததற்குப் பிறகு விட்டார்கள். அப்படி விட்டதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் கூடச் சொன்னார்கள் நாங்கள் அதை வரவேற்கிறோம் என்று. வரவேற்றோம் என்றால் இன்னொன்றும் சொல்லியிருக்கிறோம் நீங்கள் மாறவேண்டும் என்று. டாக்டர் ஜெக்கில் அன்ட் மிஸ்டர்

ஹைட் போல் ஒரு நேரத்தில் ஒரு முகத்தைக் காட்டுகிறீர்கள், இன்னொரு நேரத்தில் இன்னொரு முகத்தைக் காட்டிக் கொண்டிருக் கிறீர்கள்.

பிறகு தனிக் கொடி வேண்டுமென்று கூடக் கேட்டார்கள். மாநிலச் சுயாட்சி கேட்டார்கள். இங்குள்ள அமைச்சர்கள், மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கூட ஆர்க்காடு மாநாட்டில் தனித் தமிழ்நாடு வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு வகைகளில் பேசுகிறார்கள். அரசியல் சட்டத்தைக் கடலில் தூக்கி எறிய வேண்டும் என்று பேசுகிற அளவிற்கு வந்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆர்க்காட்டில் பகுத்தறி வாளர் மாநாடு நடைபெற்றது. உறுப்பினர் அவர்கள் பகுத்தறிவை ஒப்புக்கொள்ள மறுக்கிறார் போலிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பகுத்தறிவைப் பொறுத்தவரையில் உங்களைவிட நான் முன்னே நிற்கிறவன். ஆனால் பகுத்தறிவு என்பது தனித் தமிழ் நாடு அல்ல. உங்களுடைய உள் உணர்வுகள் உரிய நேரத்தில் வெளிப்படுகின்றன. உள்ளுணர்வுகள் எல்லாம் தமிழ்நாடு, தனி நாடு, தனி நாடு என்று இருக்கின்றன. முன்னமே பேசினீர்கள் அல்லவா, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது, தெற்கு சுரண்டப்படுகிறது என்று, அந்த உள்ளுணர்வால் வந்த தீர்மானம் இது. ஆகவே இந்தத் தீர்மானம் ஆபத்தான தீர்மானம். இந்த நாட்டின் சாவரினிட்டி அன்ட் இன்டக்ரிட்டியைக் காப்போம் என்று சொல்வது வெறும் வார்த்தை. இந்தத் தீர்மானம் உண்மையில் இந்த நாட்டைத் துண்டாட . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எடுத்துச் சொல்கிற வாதத்தைச் சந்திக்க முடியாதவர்கள் இப்படி பிரிவினை என்ற ஒரு திரையைப் போட்டு அதை மூடிவிட முயற்சிப்பார்கள். அந்த முயற்சியில் நண்பர் சுப்பிரமணியம் போன்ற திறமையாளர்கள் ஈடுபடுவது நல்லதல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நீங்கள் பிரிவினைவாதத்தை விட வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு. ஆனால் உங்கள் நடைமுறை, உங்கள் பேச்சுக்கள் இவற்றைப் பார்த்த பிறகு நீங்கள் அதை விட்டதாக இல்லை, திராவிட நாடு கேட்க முடியாது என்ற காரணத்தினால்தான் இன்றையதினம் வேறு வகையில் மாநிலச் சுயாட்சி என்று மாற்றி, மைய அரசுக்கு இருக்கிற அதிகாரங்கள் முழுமையும் பெறுவதற்கு, ஒன்றிரண்டு அதிகாரங்களை விட்டுவிட்டு அதிகாரங்கள் முழுமையையும் பிடுங்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றுவது இந்த மாநிலத்திற்கும், இந்த மாநில மக்களுக்கும் நல்லதல்ல என்று கூறி அமர்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, many hon. Members have produced arguments for and against the resolution. But I would merely strike a note of caution and patience.

Mature and prudent statesmen were commissioned with the task of preparing the report on State Autonomy and we have faith in their judgment. We are also aware of the frustration on the part of the Government of Tamil Nadu. On the one hand we have this present Government with its go-ahead schemes; it has its goals which it would like to reach; there is inflation which has to be arrested; new industries to initiate and so many other matters it can implement if only it had the means to do and that too in the least amount of time.

But there are certain curbs which have been made by the Central Government and it is lack of funds which halt the wheels of progress.

I do not doubt the ability of the Government. The fact that a bold piece of ligislation of this magnitude is brought forward, is proof of its mature thinking and of the confidence it has in its own ability to accomplish these things. This, it has sought to do today.

But Governments change; they are not constant; also the forms of Government alter and so, this instrument of Government in the hands of wise administrators can be a very good thing.

1974 ஏப்ரல் 17] [Thirumathi Alda M. Powler]

But in the hands of unwise ones, it can become a dangerous weapon Who can guarantee all succeeding Governments will be wise, strong, able and committed to the cause of the people and their welfare? This, then, Sir, is my personal worry.

The second reason of concern is because of the fact that all the States of India are involved in this resolution. When we look at the political map of the country, we see chaos and confusion. The strength of one State has to be matched by all the other States. Some States are the play-ground of mischievous groups and the welfare of the State is not their prime consideration, rather the success of their exploits. The more terrible, the better they feel. Governments so often go out of power. All sorts of people share the responsibility for it. (autonomy).

My humble submission is that we should set aside all political considerations and bring wise, sane, sobre statemanship to bear upon this issue.

(பிற்பகல் 1-00)

We have to remember that the decisions taken to-day are not for this Government alone, or for this generation alone, but years to come will be the best judge of the situation. A hundred years from now, the Government of that day must look back to the Government of to-day and congratulate this Government for its wisdom. I merely state that caution, restraint and patience be brought to bear on this epoch—making Resolution.

Thank you, Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, அவை முன்னால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரை மணி நேரம் இருக்கிறது. உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் அரை மணி நேரத்தில் முடிக்கவில்லையென்றால் நாளை எடுத்துக்கொள்கிறேன். ஒரு மணி நேரம் கொடுத்தால் நல்லது. இந்த ½ மணியில் எவ்வளவு கன்டன்ஸ் செய்யவேண்டுமோ செய்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கே கொஞ்சம் நேரம் 1½ மணிக்குப் பிறகு எடுத்துக்கொண்டு முடித்து விடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1½ மணிக்கு மேல் உட்கார வேண்டாம் என்று பார்க்கிறேன். நாளை தொடர்ந்து பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி பார்க்கலாம், பேசுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, இன்று சபைக்கு முன்னால் முதலமைச்சர் அவர்களால் பிரேரேபிக்கப் பட்டு இருக்கும் இந்தத் தீர்மானமானது முக்கியமான தீர்மானம் என்பதில் ஐயமில்லை. எனவேதான் இந்தத் தீர்மானத்தில் நம்முடைய கருத்தைக் கொஞ்சம் ஆழமாகச் சொல்லவேண்டுமென்ற முறையில் எங்கள் கட்சியின் சார்பில் திருத்தம் கொடுத்து இருக்கிறோம்.

இந்தத் தீர்மானத்தை விவாதிக்கிறபோது அரசு எடுத்த சில நடவடிக்கைகளைப் பற்றி நான் பாராட்டவேண்டும். 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் டாக்டர் ராஜமன்னார், டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி முதலியார், திரு. சந்திரா ரெட்டி ஆகிய மூவர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு அளித்த சிபார்சை இங்கே வந்த பிறகு விவாதிக்கவேண்டுமென்று கிட்டத்தட்ட 2 ஆண்டு காலமாகத் தொடர்ந்து பலரும் கேட்டு இருக்கிறார்கள். என்ன காரணமோ தெரியவில்லை, அரசு அதை விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் இன்று விவாதிக்க எடுத்துக் கொள்கிறபோது, விவாதத்தில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடியவர்களுக்கும் விவரங்கள் சரியாகத் தெரியக்கூடிய அளவில் அரசின் கருத்தை ஒரு வெள்ளறிக்கையாகவும் வைத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை ரொம்ப உதவியாக இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் இதே மாதிரி மத்திய மாநில உறவு சம்பந்தமாக மத்திய சர்க்கார் அனுமந்தையா குழுவின் சிபார்சின் சுருக்கமும் எங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, விவாதத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு இந்த சபைக்கு உதவியாக செய்யப்பட்டிருக்கும் காரியத்தை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் இந்தத் தீர்மானத்தின் பேரில் பல விவரங்களை எடுத்துப் பேசிய ஆலடி அருணா அவர்கள் சொன்ன சில கருத்துக்களை நாம் முதலில் கவனிக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அவர்களுடைய பிரசங்கத்தின் பெரும் பகுதி எப்படி இந்த அரசியல் சட்டமானது மெஜாரிட்டி மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் அமைக்கப்பட்ட அரசியல் சட்டம் என்று ஒரு அஸ்திவாரத்தைப் போட்டு, அடுத்தபடியாக அப்படிப்பட்ட இந்த அரசியல் சட்டத்தைக் கண்டிப்பாக நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது அதை நிராகரிக்கவேண்டும் என்ற அடிப்படையிலே சொன்னார்கள்.

அவர் எம்ஃபாடிகாக அதைச் சொல்லக்கூடிய விதத்தில் அதை வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று சொன்னார்கள். இதில் தான் எங்களுக்கும் ஆளும் கட்சிக்கும் இருக்கும் முரண்பாடு. அமைக்கப்பட்டு இருக்கும் அரசியல் சட்டம் பற்றி என்ன கருத்து கொண்டு இருக்கிறீர்கள். அது துலாம்பரமாகத் தெரிந்தாக வேண்டும். ஆகவேதான் இந்தப் பிரச்சினையிலே அரசியல் சட்டத்தை திருத்தவேண்டியதில்லை என்கிறபோது, இதிலே பொதிந்து இருக்கும் சில அரசியல் பிரச்னை பற்றி சொல்லித்தான் ஆக வேண்டும் என்று கருதுகிறேன்.

அம்மாதிரி சொல்கிற நேரத்தில் சற்று இந்த விவாதத்திற்கு அப்பால் போகிறது என்று சொல்லி என்னைத் தடுக்காமல் இருக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஜனவரி மாதம் என்று நினைக்கிறேன். இந்த திராவிட முன்னேற்றக் கழகம் 'பொலிடிகல் பிலாசபி' என்ற அடிப்படையில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திருத்தம் என்னவென்றால்—

"The political philosophy was incorporated as an amendment to the Party's Constitution under the heading 'Objectives of the Party' at the meeting of the D.M.K. General Council held at Pudukottai in the beginning of January"

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று திருத்தம் கொண்டு வந்தார்கள். இதை ஒரு அரசியல் கோஷமாக அவர்கள் கட்சிக்கு வைத்தார்கள். அதை வைத்த உடனேயே

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் இது நம்முடைய நாட்டிற்கு அபாயகரமான போக்கு. இந்த அரசியல் கோஷத்தை வளர்க்க விடுவோமானால் பெரும் தவறு இழைக்கும் நிலையேற்பட்டு விடும். இந்தத் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கே பெரும் தீங்கு ஏற்பட்டு விடும் என்று சொன்னோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், புதுக்கோட்டை மாநாட்டில் தீர்மானம் போடவில்லை, அதற்கு முன்னாலே பொதுத் தேர்தலுக்கு முன்பே, 1971-க்கு முன்பே திருச்சியில் பஞ்சாப் மாநில முதல்வர் குர்நாம்சிங் அவர்கள் தலைமையில் நடந்த மாநாட்டில் அந்த கோஷத்தை வைத்தோம். அதற்குப் பிறகு, நாமெல்லாம் கூட்டு சேர்ந்து 1971--தேர்தலில் நின்றோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அது உங்களுடைய திட்டமாக இருந்து இருக்கலாம். முதலில் எழுத்து மூலமாகச் சொன்னது புதுக்கோட்டை மாநாட்டில்தான். அதற்கு முன்னே பலர் பல விதமாகப் பேசியிருக்கலாம். ஆனால் அந்த மாநாட்டில்தான் உங்களுடைய கட்சியின் சட்ட திட்டத்தில் அதை வைத்தீர்கள். உங்களுடைய குறிக்கோள் என்ன என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.
When you define the purpose as such, you will have to spell out. இதை ஸ்பெல் அவுட் செய்கிறபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொல்ல ஆரம்பித்தார்கள். இந்தப் பின்னணியில் எங்களுடைய கருத்து என்னவென்றால்

'Undoubtedly, Centre-State relations in India need recasting in the direction of giving more powers to the States, especially in the sphere of finance and fiscal resources, so as to put an end to all elements of Central arbitrariness. But the problem is not a mere constitutional problem, it is a political and class problem, both at the centre and in the States.

The real problem is to integrate the urges and aspirations of the working people and other democratic sections of society in every State with those of the nation as a whole. In order to do this, while the powers of the States need enlarging in some

spheres, at the same time the Centre must be in a position to maintain the basic integrity and unity of India as a whole both to ensure integrated all-India economic development as well as to cambat the disruptionist and fissiparous forces at work, which are innumerable and which have imperialist, neocolonialist backing.

மத்திய-மாநில உறவு சம்பந்தமாக எங்களுடைய கருத்தை நான் சொல்கிறேன். எங்களுடைய கருத்தைப்பற்றி நேற்றேகூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் திருத்தக் கூடாது என்று சொல்கிறீர்களா என்று கேட்டார்கள்.

The Constitution should be amended to ensure :

Judges, including the Chief Justices of the Supreme Court and High Courts, shall be appointed from among the names of the panels approved by Parliament in the case of Supreme Court and by the concerned State Assemblies in the case of the High Courts.

The minimum qualifying age for voting right should be lowered from 21 to 18. This is essential to ensure our young people the full measure of participation in the political life.

The system of proportional representation should replace the present system for elections to the Lok Sabha and State Assemblies.

The posts of Governors should be abolished.

இது அதிகாரபூர்வமாக நாங்கள் உங்களுடைய தீர்மானம் வந்த பிறகு நிறைவேற்றியது. இதுதான் எங்களுடைய நிலை. எங்களுடைய நிலையைப் பொறுத்தவரையில் மத்திய மாநில உறவு சம்பந்தமாக எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதல்ல. மாறுதல் எந்த உருவத்தில் வரவேண்டுமென்று நாங்கள் வெளிப்படுத்தி இருக்கிறோம்.

அப்படி வெளிப்படுத்தக் கூடிய முறையில்தான் 1971-லும் பிறகு 1972-லும் இந்த இரண்டு தடவைகளிலும் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் நாங்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். 1971 தேர்தல் அறிக்கை மிகவும் முக்கியமானது. அது

அன்றைக்கு இடைத் தேர்தல் வருகிறபோது நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எங்கள் எலெக்ஷன் மானிபஸ்டோவில் தெளிவாகப் பல விஷயங்களை நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

The posts of Governors should be abolished.

The Council of Ministers should be restricted to the maximum of 10 per cent of the total elected membership of the Lok Sabha and the concerned State Assemblies. The Prime Minister and Chief Minister must be a member of the Lok Sabha and the Assembly concerned

என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாம் பார்க்கிறோம். 46 பேர் பீகார் மந்திரி சபையில். அதைக் கூடக் குறைக்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

The Upper House should be abolished.

The provision for joint session of two Houses of Parliament should be made explicity applicable for passing the Constitution Amendment Bills by joint session.

The provisions relating to emergency shall be drastically revised to reduce the emergency powers, particularly those that affect the democratic rights and weaken democracy.

The Constitutional provision relating to Centre-State relations should be amended to provide for more powers to the State consistent with the basic unity of the country.

இன்னும் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறோம். எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த அரசியல் சட்டத்தை அப்படியே எடுத்துக்கொண்டு இன்றைக்கு நமக்குக் கிடைத்த அனுபவத்தை வைத்து என்னுடைய கட்சியில் சில முடிவுகளை எடுத்திருக்கலாம். மற்ற எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஆலோசித்தால் எந்த மாதிரியாகத் திருத்தம் கொண்டு வர முடியும் என்று ஒரு முடிவுக்கு வர முடியும். அந்த மாதிரி சொல்கிறபொழுது மாநில மத்திய அரசு உறவு சம்பந்தமாகச் சில திருத்தங்கள் தேவை. அந்தத் திருத்தங்களின்படி மாநிலத்திற்கு அதிக

அதிகாரம் எந்தக் கட்டத்தில் எந்த முறையிலே இருக்க வேண்டும் என்று மிகத் தெளிவுபட சொல்லியிருக்கிறோம். ஆனால் நமக்கு முன்னால் வந்திருக்கக்கூடிய விஷயம் என்ன?

இங்கே வந்திருக்கக்கூடியது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற ஒரு பிரச்னை அல்ல. இங்கே வந்திருக்கக்கூடிய விஷயம்—நான் முழுவதையும் சொல்ல விரும்பவில்லை—1, 2, 3, 4, 5, 6 இந்த சிபார்சுகள்—17 சிபார்சுகள் இருக்கின்றன 215-வது பக்கத்தில் சாப்டர் 21-ல் கொடுத்திருக்கிறார்கள்—அந்த 17 சிபார்சுகளில் முதல் ஆறு சிபார்சுகளை எடுத்துக்கொண்டால் மத்திய அரசை ஒரு சம்பிரதாயபூர்வமான இணைப்பு சர்க்காராக மாற்றி விடுகிறது, மத்திய அரசை பலகீனப்படுத்துகிறது. மத்திய அரசு அமைப்பு இருக்கிறதே, அந்த அமைப்பே இருக்கவேண்டுமா என்ற கேள்வி எழுப்பக்கூடிய முறையில் இருக்கிறது.

இதைப் பார்க்கும்பொழுது நம்முடைய ரிபோர்ட்டில் ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 1935-ம் வருஷச் சட்டத்தில் மாநிலங்களுக்கு என்ன அதிகாரங்கள் இருந்தனவோ அந்த அதிகாரங்கள்கூட இப்பொழுது இல்லை என்பது போல சொல்லியிருப்பதைப் பல இடங்களில் நாம் பார்க்கலாம். நம்முடைய ராஜமன்னர் கமிட்டி ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபொழுது தான் நாம் கொஞ்சம் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கவேண்டியிருக்கிறது. 1935-ம் வருஷத்திற்கு முன்னால் 1919-ம் வருஷச் சட்டத்தில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்குத்தான் டயார்கி என்று சொன்னார்கள். சில இடங்களில் அப்படித்தான். ராஜா பனகல் அவர்கள் அப்படிப் பணியாற்றியிருக்கிறார்கள். அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்தார்கள். அந்த டயார்கியை ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு மதத்தையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய

The Hindu Religious Endowments Board is a creation of diarchic form of Government.

அப்படி நம்முடைய சென்னை மாகாணத்தில் அந்த அளவுக்குச் செய்தார்கள். அதற்கு மேலும் கொஞ்சம் அதிகாரம் வேண்டும் என்று கூறுகிறபொழுது 1935-ம் வருஷ சட்டத்தைப் பார்த்தால்

The Power of the States or Provinces is conferred by the Crown.

மத்தியிலே இங்கிலாந்தில் இருக்கக்கூடிய அரசு இருக்கிறதே அந்த அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் தன்னுடைய அதிகாரத்தைக் கொடுக்கிறது. அன்றைக்கு ஒரு மத்திய சர்க்கார் கிடையாது, மத்தியிலே பிரதம அமைச்சர் கிடையாது. சென்னை மாகாணத்தில் அன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் தான் பிரதம மந்திரி என்று பெயர். ஸி. ராஜகோபாலாச்சாரியார் அப்படி 1937-ம் ஆண்டில் பிரதம மந்திரியாக இருந்தார். ஒவ்வொரு மாநிலத்திலும் பிரதம மந்திரி, அந்தப் பிரதம மந்திரியைக் கட்டுப்படுத்துவதற்கு கவர்னர், கவர்னர்களுக்கெல்லாம் சேர்ந்து ஒரு கவர்னர்-ஜெனரல், அந்த முறையில் தான் அப்பொழுது அவர்கள் வைத்திருந்தார்கள்.

எல்லோருமே யாருக்குப் பதில் சொல்லவேண்டியவர்களாக இருந்தார்கள் என்று சொன்னால், லண்டனில் இருக்கக்கூடிய சர்க்காருக்குத்தான் பதில் சொல்லவேண்டும் என்று வந்தது. எப்படி 10, 12 மாநிலங்கள் இருந்தனவோ அம்மாதிரி 500 சமஸ்தானங்களும் இருந்தன. அந்த சமஸ்தானங்களுக்கும் அதே அதிகாரம், அந்த சமஸ்தானங்களும் நேரடியாக லண்டனில் இருக்கக்கூடிய அந்த அரசின் கீழே தான் இருக்க வேண்டும் என்ற முறையில் வைத்திருந்தார்கள். இதுதான் 1935-ம் வருஷத்திய அமைப்பு.

1935-ம் வருஷத்திய அமைப்பு 1947-ம் வருஷத்திய அமைப்பு அல்ல. 1947-ம் வருஷத்தில் நமக்குக் கிடைத்தது என்ன? எல்லா மாநிலங்களும் ஒன்றாகச் சேர்ந்து எப்படியாவது பிரிட்டிஷாரை வெளியேற்றி விடவேண்டும், அரசாங்க அதிகாரத்தை உண்மையிலேயே நமக்குக் கொடுப்பது, அரசாங்க அதிகாரத்தை நாம் பூராவும் பெற்றுக்கொண்டு நாம் பகிர்ந்துகொள்வோம் என்ற முறையில் வந்தது.

'இன்ஸ்ட்ருமெண்டு ஆஃப் இண்டிபெண்டென்சைப்' பார்க்க வேண்டும்.

1974 ஏப்ரல் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

The power was transferred to the entire people of India. It was not transferred to the people of Madras State or Bombay State. It was transferred to the entire people of India.

அப்படி வந்த முறையில்தான் அன்றைக்கு ஒரு அரசியல் நிர்ணய சபை ஏற்பட்டது. அந்த அரசியல் நிர்ணய சபை அன்றைக்கு அமைத்தது போதுமா, சரியானதா என்று கேட்டால் நான் ஒன்றுகூட சொல்வேன். பொதுவாக ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்ன அளவுக்குக் கூட அது அரசியல் நிர்ணய சபையாக இருக்கவில்லை. மத்தியில் சட்டசபை இருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் சட்ட சபை இருந்தது. மாநில சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்கார்ந்து அந்த அரசியல் நிர்ணய சபை அமைந்திருந்தது. நமக்குத் தெரியும் அந்த அரசியல் நிர்ணய சபை அன்றைக்கு இருந்த நிலைமையில் ஜவஹர்லால் நேரு அவர்களின் பெருமை என்னவென்றால், அன்றைக்கு சுதந்திரத்திற்கு முன்னின்ற காங்கிரஸ் கட்சியின் பெருமை என்னவென்றால், 'ஒரு கட்சிப் பிரச்னையாக ஆக்க நாங்கள் விரும்பவில்லை, இந்த நாட்டில் எல்லாப் பகுதி மக்களும் கூட சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்.

எங்கள் கட்சி சார்பில் ஒரே உறுப்பினர் இருந்தார் ஸோமநாத் லாகரி, அவர்கூட அரசியல் நிர்ணய சபையில் இருந்தார். எங்களைக் கைது செய்த நேரத்தில் அவரையும் பாதுகாப்புக் கைதியாகப் பிடித்துவிட்டார்கள். எல்லாவிதமான கருத்துக்களையும் கொண்டு வந்து வைத்து படிப்படியாக நல்லதோர் அரசியல் சட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் கையில் விடப்பட்டது.

என்ன சந்தேகம் வருகிறது என்றால், அவர் அரசியல் சட்டத்தையே உருவாக்கியவர். அவர் எந்த இடத்தில் அரசியல் சட்டத்தை நெருப்பில் வைக்கவேண்டும் என்று சொன்னார் என்பது தெரியவில்லை. அரசியல் சட்டத்தை உருவாக்கியதே டாக்டர் அம்பேத்கார் அவர்கள். அவருடைய விவாதத்தைப் பார்த்தால் நமக்குப் பெரும் உதவியாக இருக்கிறது. நேற்று முந்தைய தினம் கூட இதைப்பற்றி விவாதித்தோம்.

அரிசனங்கள் அர்ச்சகராக இருக்கவேண்டும் என்று சொல்லி, மதத்தின் பெயரால் கட்டுப்பாடு இருக்கக்கூடாது என்று பார்க்கிறபொழுது டாக்டர் அம்பேத்காரைவிடத் தெளிவாக வேறு யாரும் பேசி இருக்க முடியாது. மதம் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது, அரசியல் சட்டம் தான் மதத்தையும், மதத்தின் பெயரால் இருக்கக்கூடிய எல்லாவற்றையும் கட்டுப்படுத்தவேண்டும், மதம்தான் தங்களுக்குப் பெரியது என்று சொன்னால் முஸ்லீம்கள் வேறு தேசத்திற்குப் போகவேண்டும், பாகிஸ்தானில் வேண்டுமானால் அப்படி இருக்கலாம், இந்தியாவில் அப்படி இருக்க முடியாது என்று ஆணித்தரமாகப் பதில் சொல்லி நமக்கு வழி காட்டியிருக்கக்கூடிய மாமேதை அரசியல் சட்டத்தை அன்றைக்கு விளக்கிச் சொன்னார். அரசியல் சட்டத்தை உருவாக்கிய அவரே அரசியல் சட்டத்தை நெருப்பில் வைக்கவேண்டும் என்று எந்த இடத்தில் சொன்னார் (ஒரு குரல்—திரு. பெ. சீனிவாசன் அவர்கள் இங்கே சொன்னார்) என்பது எனக்குப் புரியவில்லை. அது எந்த சந்தர்ப்பத்தில் சொன்னார் ? அதற்குத்தான் நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால்

For purpose of argument if you say that a man like Dr. Ambedkar

நெருப்பு வைக்கவேண்டும் என்று சொன்னார் என்று சொன்னால்

it does not do credit to Dr. Ambedkar, a great man.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயம் இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லியிருந்தால் சொல்லியிருக்கலாம். அப்படி ஒரு நிலைமையாக இருந்திருக்குமே தவிர,

When some thing is taken out of the context

என்ற முறையில் சொல்வது என்றால், அது சரியுமல்ல, முழுமையாகவும் ஆகாது. அதே மாதிரி ஜவஹர்லால் நேரு அவர்கள் 1947, ஜனவரி 22-ல் அடானமியைப் பற்றிச் சொன்னார்கள். அதே மாதிரி ரெஸிடுயரி பவர்ஸ் பூராவும் ஸ்டேட்சுக்குத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னார் என்றால், வாஸ்தவம் தான். சுதந்திரம் கிடைத்த பிறகு அவர் கூறியிருக்கிறார் என்றால்,

He is not only a Constitutional pandit, but is also a political leader. He is leader of a great country.

1974 ஏப்ரல் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நாடு பிரிவினை ஆகிறது, நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லி அதற்கு முன்னால் பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஞாபகப்படுத்துகிறேன், அன்றைக்கு கூப்லாண்ட் திட்டம் என்ற ஒரு திட்டம் வந்தது. அந்தத் திட்டத்தை ஆதரித்தது டாடா, பிர்லா. கூப்லாண்ட் திட்டத்தின்படி ஹிந்துஸ்தான், பாகிஸ்தான், பிரின்சஸ்தான் என்று மூன்று ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்று சொன்னதைத் தேசிய இயக்கம் நிராகரித்தது. தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட எல்லாக் கட்சியினர்களும் நிராகரித்தோம். நிராகரித்ததற்குப் பின்னால் இந்தக் கருத்து வேண்டாம், இம்மாதிரி பிரிவினை கூடாது, பாகிஸ்தானைக்கூட இந்திய யூனியனோடு சேர்க்க வேண்டுமென்ற கருத்து இருந்ததே தவிர, இம்மாதிரி மூன்று ஸ்தானங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற நிலை இல்லை. வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் பிரிந்தது. பாகிஸ்தான் பிரிந்ததை யாரும் விரும்பவில்லை. பாகிஸ்தான் பிரிந்தாகிவிட்டது. பிரிந்த பிறகு இந்தப் பிரிவினையைப் பயன்படுத்தியது யார்? அந்தப் பிரிவினையை உருவாக்குவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அதே நிபுணர்கள்தான் அதைப் பயன்படுத்தினார்கள். அதைப் பயன்படுத்திய முறை காஷ்மீரை வைத்துக்கொண்டு. அப்போது காஷ்மீரை வைத்துப் பயன்படுத்தியதை ஜவஹர்லால் நேரு அவர்கள் புரிந்து கொண்டார்கள். அதனால் நம்முடைய அரசியல் நிர்ணய சபை சட்டத்தை அமைக்கும்போது அதையெல்லாம் கருத்தில் கொண்டு, அதிக அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். மக்களைக் கேட்டால் அதற்கு ஒத்துக்கொள்வார்கள் என்ற முறையிலே மத்திய அமைப்பு உருவாகியது.

the set-up must be democratic centralism.

எல்லா மக்களுக்கும் நல்ல ஜனநாயக ரீதியிலே விவாதிக்க இடம் இருக்க வேண்டும். ஆனால் பிடி அங்கேதான் இருக்க வேண்டும் என்ற ஒரு சிந்தனை அப்போது வந்தது ஆச்சரியமான விஷயம் அல்ல.

நேற்று பேசும்போது ஆலடி அருணா அவர்கள் மிகத் திறமையாக பிரசென்ட் செய்தார்கள். அவர்களுடைய கேசை திறமையாக பிரசன்ட் செய்தார்கள். அவர்களுடைய கேசை வேறு

எந்த லாயரும் அப்படி பிரசென்ட் செய்திருக்க முடியாது. இந்த மாதிரி ஒரு பெடரேஷன் என்று இருந்தால் அதனுடைய ரெசுடுவரி பவர்ஸ்,

The residuary power in any federation will go to the States.

என்று சொன்னார்கள். பின்னல் கந்தசாமி அவர்கள் பேசும் போது அப்படி அல்ல.

residuary powers go to the Centre in the case of the Canadian constitution; in the case of the Australian constitution the residuary powers go to the States.

என்று யாரோ ஒருவர் பேசிய விஷயத்தைச் சொன்னார்கள். நாம் அமைத்திருக்கக்கூடிய இந்த அரசியல் சட்டம்—

when it is a written constitution.

ரொம்ப ரிஜிடாக இருக்கும். சிலவற்றை மாற்ற முடியாது. அதனால்தான் அமெரிக்க கான்ஸ்டிடியூஷனை மாற்றுவது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. நம்முடைய அரசியல் சட்டம்,

though it is a written constitution, it is flexible and allows certain provisions to be modified.

என்ற முறையில் இருக்கிறது. ஆகவேதான் 32, 33 தடவைகள் மாற்றியிருக்கிறோம். அதை அமென்ட்மென்ட் செய்வது நம்முடைய பெருமையைத்தான் காட்டுகிறது; அதனால் நமக்கு சிறுமை அல்ல. இதை பெடரேஷன் என்றும் சொல்ல முடியாது unitary constitution with some federal bearings here and there என்று சொல்லியிருக்கிறார்கள். அது நம்முடைய இந்திய ஜன நாயகம் என்று சொல்ல வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் வல்லபாய் பட்டேல் இந்த நாட்டுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார் என்று சொல்வோம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்களைச் சுட்டுப் பொசுக்கியது அவர்தான். அதனால் எங்களுக்கு அவர்மேல் வெறுப்பு இருந்தாலும், 500-க்கு மேற்பட்ட துண்டுகளாக, சமஸ்

தானங்களாக சிதறிக் கிடந்த இந்தியாவை ஒரே அமைப்பாகக் கொண்டுவந்தவர் அவர்தான்; அதனால் அவரைப் பாராட்டுகிறோம். சிதறிக் கிடந்த பகுதிகளை எல்லாம் ஒன்றாக்கி ஒரே தேசமாக்கியது பாராட்டத்தக்கது. வருங்கால சரித்திரம் அதைச் சொல்லும். இப்படி முதலாளித்துவம் வளர்ந்து, ஏகாதிபத்தியத்தை விரட்டிட எல்லோரும் ஒன்றுபடுகிறார்கள். இந்தியா அப்படித்தான் இருக்கிறது.

இந்தியா எப்போது ஒன்றாக இருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. தமிழ் இலக்கியங்களை நன்றாகப் படித்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். மணிமேகலையில் ஒரு இடம் வருகிறது. தாதி என்ற ஒரு தாய் வருகிறாள். அவளுடைய பாவம் தீருவதற்காக வாரணாசியிலிருந்து கன்னியாகுமரி நோக்கி வருகிறாள். அப்படி வருகின்ற சமயத்தில் காவேரிக் கரையில் குழந்தை பிறக்கிறது. இந்தக் காவியம் எழுதப்பட்டு, ஆயிரம் வருஷத்திற்குக் குறையாமல் இருக்கும் என்று கருதுகிறேன். அப்போதே ஏதோ ஒரு ஒற்றுமை இந்தியாவில் உருவாகி இருக்கிறது. (குறுக்கீடு) சீனாவிலிருந்து ஆள் வந்ததாக நான் சொல்லவில்லை; அவர்கள் வேறு காரியங்களுக்காக வந்தார்கள். நான் அதைச் சொல்லவில்லை. பாவம் தீருவதற்காக வாரணாசியிலிருந்து கன்னியாகுமரிக்கு அந்தத் தாய் வந்ததாகத் தமிழ் இலக்கியம் இருக்கிறது.

There was probably a cultural unity.

எங்களுடைய கட்சியில் இருக்கின்ற பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) வடக்கே இருப்பவர்கள் இங்கே வந்தார்கள்; இங்கே இருப்பவர்கள் அங்கே போனார்கள். அதில் ஒன்றும் தப்பு இல்லையே.

இன்றைக்கு இருக்கக்கூடிய ஸ்டேட்ஸ் இங்கே எப்படி வந்தது என்று தெரியும்.

Only when capitalism develops the concept of autonomous States comes

இல்லாவிட்டால் சிறுநில மன்னர்கள், குறுநில மன்னர்கள்—இப்படித்தான் இருப்பார்கள். முதலாளித்துவம் வளரக்கூடிய நாட்டில்தான்—

When capitalist form of development takes place, States want autonomy.

இப்போது இங்கே என்ன வருகிறது என்றால், நம்முடைய மனதில் முதலாளித்துவம் வளரவேண்டும், தொழில் வளரவேண்டும் என்ற நிலை இருந்து வருகிறது. அது எந்த அளவுக்கு இருக்கவேண்டும்? உலகிலுள்ள பல நிலைமைகளை வைத்துப் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது ஓர் அபாயம் இருக்கிறது. அப்படி என்ன அபாயம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. நான் சோவியத் நாட்டுக்கு எதிரி என்ற முறையில் சொன்னார்கள். இந்திய மக்களின் தேசிய இயக்கத்தை ஆதரிக்கின்றவர்கள் அங்கே இருக்கிறார்கள்.

ஏகாதிபத்திய வெள்ளையர்கள் இங்கே இருந்து மூலப் பொருட்களை எடுத்துக்கொண்டுபோய், அங்கிருந்து 'ஃபினிஷ்ட்' பொருட்களாக இங்கே கொண்டுவந்து விற்று பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் 'பஞ்சத்தை பஞ்சால் வெல்வோம்' என்று காந்தியடிகள் சொன்னார்கள். ஏகாதிபத்தியம் இங்கே கூடாது என்று சொன்னார்கள். அந்த எதிர்ப்பு உணர்ச்சி நமக்கு இன்றைக்கு இருக்கிறது. (குறுக்கீடு).

ஏகாதிபத்திய நாடும், சோசலிச நாடும் ஒன்று என்று சொல்கிறார்கள்.

சீனா கம்யூனிஸ்ட், சோவியத் கம்யூனிஸ்ட் என்று சர்ச்சை எழுந்து, கருத்து வேற்றுமை வந்து கட்சி பிளவுபடும் நிலைமை வந்தது. (குறுக்கீடு). 1962-ல் என்று சொல்கிறார்கள். மாறுபட்ட கருத்தின் காரணமாக கட்சியில் பிளவு ஏற்பட்டது. அதை வைத்துக்கொண்டு நாங்கள் எதிரி என்று சொல்கிறார்கள்.

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நேற்றைய தினம் அவர்கள் பேசுகின்றபோது 'சோவியத் யூனியனை எல்லா வகையிலும் முன் உதாரணமாகக் கொள்ளவில்லை; ஆனால் அங்கே இருந்து வருகிற சோசலிஷ அமைப்புகளுக்காக மட்டும் இதைச் சொல்கிறேன்' என்று சொன்னார்கள். பின்பற்றுகிறேன் என்று சொல்லவில்லை; உதாரணமாகச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அதனால் சோவியத் யூனியனை எதிர்க்கிறார்கள் என்று சொல்லவில்லை; அரசியல் எதிர்ப்பு காட்டவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் மறுத்து அவர்களுக்குப் பதில் சொன்னால் பிறகு கோபம் வரும். சோவியத் நாட்டிலே கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள் என்றாலும், இங்கே இருக்கிறார்கள் என்றாலும் கம்யூனிஸ்டு கட்சியிலே ஜாதி வேறு பட்டவர்கள் அல்லது மதம் வேறுபட்டவர்கள் இருப்பார்கள். இதை சரித்திரம் எடுத்துக்காட்டியிருக்கிறது. இதைச் சொன்னால், . . .

திரு. எல். கணேசன்: சோஷலிச சித்தாந்தத்தை ஆதரிக்கின்றவர்கள் கம்யூனிஸ்டுகளை எதிர்க்க முடியும் என்ற கருத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இல்லையா?

திரு. கே. டி. கே. தங்கமணி: இது ஒரு சோஷலிச நாடு. சோவியத் நாடு ஒரு சோஷலிச நாடு. நான் எதிர்க்கிறேன் என்று சொல்லலாம். அது வேறு ஒரு நாடு. அப்படிச் சொல்வதில் தப்பு இல்லை. இங்கே ஆளும் கட்சி சோவியத் நாட்டுக் கொள்கைக்கு மாறுபட்டிருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு முக்கியமான பிரச்சனையை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இன்று நேற்று அல்ல, நீண்ட நெடுங்காலமாகவே சோவியத் நாட்டின்மீது ஒரு நல்ல பற்றும், ஆழ்ந்த அன்பும் கொண்டது கழகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இப்போது சோவியத் ரஷியாவுடன் அதிக உறவு ஏற்படுத்த முடியாமல் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பார்த்துக்கொண்டிருந்தாலும் அதற்கும் மேலாக அன்பு காட்டிக்கொண்டிருப்பது ஆளும் கட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

390 மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னர் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[1974 ஏப்ரல் 17

திரு. கே. டி. கே. தங்கமணி : முதலமைச்சரவர்கள் எந்த அரசாங்க தூதரகத்திற்கும் போகலாம் அவர்களும் அழைக்கத் தயாராக இருப்பார்கள். அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை. எங்களுடைய செல்வாக்கை விட முதலமைச்சருக்கு அதிக செல்வாக்கு உண்டு.

சோவியத் நாட்டில் நடைபெறும் மாநாட்டுக்கு யாரை அனுப்பலாம் என்று கேட்டால் (குறுக்கீடு) நாங்கள் போகிறோம். அதைப் பற்றிச் சொல்லவில்லை. நான் போய் வந்தால், சோவியத் நாடு எப்படி இருக்கிறது என்று ஒருவர் என்னைக் கேட்டால் நன்றாக இருக்கிறது என்று நான் சொன்னால் 'இவன் கம்யூனிஸ்டுக்காரன், அப்படித்தான் சொல்வான்' என்று சொல்லிவிடுவார்கள். 1969-ம் வருஷம்தான் முதன் முதலாக நான் சோவியத் நாட்டுக்குப் போனேன். அதனால் அந்த மாநாட்டுக்கு மற்றவர்களை அனுப்ப வேண்டுமென்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆலடி அருணாவையும் மற்றவர்களையும் எனக்கு இருக்கின்ற ஒரு சிறிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுப்பலாம். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கிற முதலமைச்சரவர்கள், அவர்கள் நினைத்தால் எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் போகலாம். அதற்கு நான் சிபாரிசு செய்ய வேண்டியதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் உறவு என்று சொன்னதை அங்கே போவதற்கு பாஸ்போர்ட் வாங்கித் தர வேண்டுமென்ற முறையில் சொல்லவில்லை; உறவு என்பதை வேறு முறையிலே சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களை சோவியத் நாட்டுக்கு அழைக்கக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. கட்சித் தலைமையில் அப்படிச் சொல்லவில்லை. (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

243. Notification issued with G.O. Ms. No. 31, Rural Development and Local Administration, dated the 4th January 1974, in regard to division of Chidambaram Municipality into twenty-eight wards and reservation of one seat for Scheduled Caste and two seats for women in the Chidambaram Municipal Council. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

244. Notification issued with G.O. Ms. No. 96, Rural Development and Local Administration, dated the January 1974, in regard to division of Arkonam Municipality into twenty-eight wards and reservation of one seat for women in the Arkonam Municipal Council. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. *Reports, Notifications and other Papers*

@ 189. The speech of Hon. Dr. M. KARUNANIDHI, Chief Minister on 16th April 1974 moving the Resolution on "State Autonomy" in the Legislative Assembly (English and Tamil).

190. Report of the Enquiry Committee on Fire Accident at Ennore Thermal Station.

191. Report of the Committee on Estimates on Education Department (Primary and Secondary).

@ Laid on the table of the House on 16th April 1974.

[1974 ஏப்ரல் 17

இணைப்பு I

[250-ம் பக்கத்தில் 29-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

Copy of G.O. Ms. No. 1713, dated 25th July 1970, from the Department of Industries, Government of Tamil Nadu (*Vide* unstarred Question No. 3149 by Thiru N. Kittappa, M.L.A.).

Abstract.—Tamil Nadu State Transport Department—Display of advertisement on buses—Advertisement charges—Revision of rates—Ordered.

READ AGAIN—

G.O. Ms. No. 1403 (Transport) Industries, Labour and Co-operation, dated 9th March 1963 and G.O. Ms. No. 928, Industries, dated 20th August 1969.

READ ALSO—

From the Director, Tamil Nadu State Transport Department, letter No. 11991/Supdt. M/69, dated 5th March 1970.

From the Director, Tamil Nadu State Transport Department, letter No. 11991/Supdt. L/69, dated 15th June 1970.

ORDER.

In modification of the orders issued in the G.Os. read above, the Government direct that the following rates of advertisement charges and agency commission shall be charged in respect of advertisements in State Transport buses.

2. Rear panel rates (excluding Corporation tax)—

City Routes—

For the 1st 25 panels	...	Rs. 30 per panel per month.
26–50 panels	...	Rs. 25 per panel per month.
51–100 panels	...	Rs. 20 per panel per month.
Above 100 panels	...	Rs. 15 per panel per month.

District routes (excluding Corporation/Municipality Tax)—

1 to 25 panels	...	Rs. 50 per panel per month.
26–50 panels	...	Rs. 45 per panel per month.
51–100 panels	...	Rs. 40 per panel per month.
Above 100 panels	...	Rs. 35 per panel per month.

1974 ஏப்ரல் 17]

The existing concessions for long-terms contract both for city and district rear panel advertisements as indicated below, shall be retained :—

Quarterly—5 per cent.

Half-yearly—10 per cent.

Yearly—15 per cent.

Top side panel rates (exclusive of Corporation tax).—Rs. 50 per panel per month.

The top side panels shall be the standard size of 15″ height uniformly.

3. *Agency Commission.*—For purposes of payment of agency commission, the rear panel and top side panels business shall be taken as one and the following rates shall be paid to the authorised agents :—

Up to Rs. 10,000—Nil.
From Rs. 10,001 to 50,000—10 per cent.
From Rs. 50,001 and above—15 per cent.
of the total value of business procured during the year.

4. The enhanced rates shall be deemed to have come into force with effect from 1st April 1970 for those who have already booked orders earlier than this date, the old rates shall be levied. The agents appointed for booking orders for the bus panels from 1st April 1970 shall be charged the revised rates specified in this order.

5. This order issues with the concurrence of the Finance Department *vide* that department's U.O. No. 86055/HB/70-1, dated 24th July 1970.

இணைப்பு II

[251-ம் பக்கத்தில் 31-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினவிற்குரிய விடையைக் காண்க.]

At present 61 Co-operative Mini Super Markets are functioning in the following places :—

Answer—

District.	*Places where Mini Super Markets are functicning.*
(1)	(2)
Madras ...	1. Ashoknagar.
	2. Triplicane.
	3. Royapettah.
	4. Adayar.
	5. Luz.
	6. Shastri Nagar.
	7. Beasant Nagar.
	8. Egmore.
	9. Washermanpet.
Tirunelveli ...	10. Kovilpatti.
	11. Tiruvengadam.
	12. Kalingapatti.
	13. Papankulam.
	14. Ambasamudram.
	15. Tuticorin.
	16. Nanguneri.
Coimbatore ...	17. Coimbatore.
	18. Coimbatore (Sowdeswari).
	19. Mettupalayam.
	20. Tiruppur.
	21. Erode.
	22. Gobichettipalayam (Gobi).
	23. Palladam.
	24. Pollachi.

District. (1)		Places where Mini Super Markets are functioning. (2)
Ramanathapuram	...	25. Aruppukkottai.
		26. Sivaganga.
		27. Ilyangudi.
		28. Devakottai.
		29. Rameswaram.
		30. Karaikudi.
		31. Thulukkapatti.
		32. Rajapalayam.
		33. Mudukulathur.
Madurai	...	34. Dindigul.
		35. Batlagundu.
		36. Andipatti.
		37. Kodaikanal.
		38. Bodinaickanur.
Thanjavur	...	39. Mayuram.
		40. Thiruvaiyaru.
		41. Mannargudi.
		42. Orathanad.
South Arcot	...	43. Villupuram.
		44. Chidambaram.
		45. Neiveli.
		46. Vadalur.
Tiruchirappalli	..	47. Dalmiapuram.
		48. Thuraiyur.
		49. Lubbaikudikadu.
		50. Srirangam.
		51. Pettaivaithalai.
		52. Karur.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

District.	Places where Mini Super Markets are functioning.
(1.	(2)
North Arcot ...	53. Katpadi.
	54. Arani.
	55. Vaniyambadi.
Chingleput ...	56. Chingleput.
	57. Uthiramerur.
	58. Nanganallur.
Salem ...	59. Mettur.
	60. Salem.
The Niligiris ...	61. Coonoor.

பதில்.

தற்போது 61 கூட்டுறவு சிற்றங்காடிகள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்குகின்றன :—

மாவட்டம்	சிற்றங்காடிகள் இயங்கும் இடங்கள்.
சென்னை	1. அசோக்நகர்.
	2. திருவல்லிக்கேணி.
	3. இராயப்பேட்டை.
	4. அடையாறு.
	5. லஸ்.
	6. சாஸ்திரிநகர்.
	7. பெஸண்ட் நகர்.
	8. எழும்பூர்.
	9. வண்ணாரபேட்டை.
திருநெல்வேலி	10. கோவில்பட்டி.
	11. திருவேங்கடம்.
	12. கலிங்கபட்டி.
	13. பாப்பன்குளம்.

1974 ஏப்ரல் 17]

மாவட்டம்	சிற்றங்காடிகள் இயங்கும் இடங்கள்
(1)	(2)
திருநெல்வேலி—தொடர்ச்சி	
	14. அம்பாசமுத்திரம்.
	15. தூத்துக்குடி.
	16. நாங்குநேரி.
கோயம்புத்தூர்.	17. கோயம்புத்தூர்.
	18. கோயம்புத்தூர் (சௌடேஸ்வரி)
	19. மேட்டுப்பாளையம்.
	20. திருப்பூர்.
	21. ஈரோடு.
	22. கோபிசெட்டிபாளையம் (கோபி).
	23. பல்லடம்.
	24. பொள்ளாச்சி.
இராமநாதபுரம்.	25. அருப்புக்கோட்டை.
	26. சிவகங்கை.
	27. இளையான்குடி.
	28. தேவகோட்டை.
	29. இராமேஸ்வரம்.
	30. காரைக்குடி.
	31. துலுக்கப்பட்டி.
	32. இராஜபாளையம்.
	33. முதுகுளத்தூர்.
மதுரை	34. திண்டுக்கல்.
	35. வத்தலகுண்டு.
	36. ஆண்டிபட்டி.
	37. கொடைக்கானல்.
	38. போடிநாயக்கனூர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாவட்டம்.	சிற்றங்காடிகள் இயங்கும் இடங்கள்.
(1)	(2)
தஞ்சாவூர்	39. மாயூரம்.
	40. திருவையாறு.
	41. மன்னார்குடி.
	42. ஒரத்தநாடு.
தென் ஆர்க்காடு	43. விழுப்புரம்.
	44. சிதம்பரம்.
	45. நெய்வேலி.
	46. வடலூர்.
திருச்சிராப்பள்ளி	47. டால்மியாபுரம்.
	48. துறையூர்.
	49. லப்பைகுடிக்காடு.
	50. ஸ்ரீரங்கம்.
	51. பேட்டைவாய்த்தலை.
	52. கரூர்.
வட ஆர்க்காடு	53. காட்பாடி.
	54. ஆரணி.
	55. வாணியம்பாடி.
செங்கல்பட்டு	56. செங்கல்பட்டு.
	57. உத்திரமேரூர்.
	58. நங்கநல்லூர்.
சேலம்	59. மேட்டூர்.
	60. சேலம்.
நீலகிரி	61. கூனூர்.

1974 ஏப்ரல் 17]

இணைப்பு III

[318-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

Call attention Statement made by the Honourable Minister for Agriculture.

Solanum elaeagnifolium, a deep rooted perennial weed and a native of Central America, got introduced into Tamil Nadu in the early fifties accidentally through the wheat imported from U.S.A. This weed has spread in the fields of Coimbatore district over 10,000 hectares in the blocks of Udumalpet, Dharapuram, Kundadam, Kangayam, Pongalur, Palladam, Sulur, Sarkarsamikulam, Kinathukadavu and Pollachi. It is also found in Coimbatore and Singanallur Municipal limits and in the neighbouring districts of Salem and Madurai.

This weed is called by the names 'Kattukandankathiri, Kudivillambi', etc., in Tamil. It spreads both vegetatively from its deep seated root stock and by seeds. Its fruits and seeds are readily carried by water but more commonly disseminated as a feed stuff. The weed has a very deep root system extending up to ten feet in the soil. Its stem bears small thorns and manual weeding becomes rather difficult. Hence its complete eradication poses a challenging problem.

Realising the seriousness of the weed, research on the control of Solanum elaeagnifolium has been undertaken by the Tamil Nadu Agricultural University in April 1973. Field experiments are being conducted in the following three centres in farmers holdings with the object of controlling the weed :—

(1) Udumalpet ... Udumalpet Block.

(2) Peedampalli ... Sulur Block.

(3) Kongarapalayam ... Kundadam Block.

So far, 24 herbicides were tried for the control of the weed. Out of these, Picloram (Tordon 22 K) Picloram + 2,4-D (Tordon 101 Mix), Salts of 2, 4-D, Bromacil and SAN. H 9789 were found to be efficacious and superior to others.

Among all these herbicides, Tordon 22 K is found to be outstanding giving complete control of the weed for a period of about six months when used at the rate of 5 kg. active ingredient/ha., though it may not completely eliminate the weed from the soil. But this herbicide is not available in India and has to be imported from U.S.A.

Salts of 2, 4-D are useful for controlling this weed for about two months. This herbicide can be used in cereal crops like *cholam, maize, cumbu, ragi and tenai* for controlling the weed temporarily. Results of experiments conducted with 2. 4-D at 2 Kg ha. in three split applications in maize has resulted in an additional income of Rs. 225/ha. over hand-weeded crop. The cost of one kg. of 2, 4-D is Rs. 20 and cost of one application including the cost of chemical is Rs. 45/ha.

Besides these, many experiments are being conducted both in laboratory and under field conditions to find out whether 2, 4-D and Tordon 22 K can control the weed permanently. From the results obtained so far, it is seen that application of Tordon 22 K might control the weed completely, when it is applied four or five times at an interval of 3 to 4 months. The research in this respect is in progress.

காட்டுக்கண்டங்கத்தரி.—ஆழமாக வேரூன்றிச் செல்லும் ஒரு புதர்ச் செடியான காட்டுக்கண்டங்கத்தரி **(Solanum Elaeagai folium)** மத்திய அமெரிக்காவைச் சேர்ந்ததாகும். 1950-59 ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையுடன் இதுவும் தற்செயலாகக் கலந்து வந்து விட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, தாராபுரம், குண்டடம், காங்கேயம், பொங்கலூர், பல்லடம், சூலூர், சங்கராசாமிகுளம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வட்டாரங்களிலுள்ள 10,000 ஹெக்டேர் பரப்பளவில் இது பரவியுள்ளது. கோயம்புத்தூர், சிங்காநல்லூர், நகராட்சி எல்லைப் பகுதிகளிலும், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் இத்தாவரம் பரவிக் காணப்படுகிறது.

இத்தாவரம் தமிழில் "காட்டுக்கண்டங்கத்தரி" 'குடிவிளம்பி" என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இது ஆழமாக வேரூன்றிச் செல்லும் புதர்ச்செடியாகும், இதன் விதைகளும் பழங்களும் நீரினால் எளிதில் பரவுகின்றன. பொதுவாக இதன் விதைகள் ஆடு

மாடுகளினுல் உட்கொள்ளப்பட்டு அவற்றின் கழிவுப் பொருட்களுடன் வெளியேறும் வகையில் பரவுகின்றன. இக்களை மிக ஆழமாக 10 அடி ஆழம் வரையில் வேரூன்றுகிறது. இதன் தண்டுகளில் சிறிய முட்கள் உள்ளன. எனவே கையினுல் வெட்டி எறிவது என்பது கடினமான காரியம். எனவே இதனை அறவே ஒழிப்பது என்பது பெருத்த பிரச்சினையாகும்.

இக்களையின் கடுமையான தன்மையை உணர்ந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1973, ஏப்ரல் திங்களில் இந்த புதர்ச் செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கத்துடன் கீழ்க்காணும் மூன்று இடங்களிலுள்ள உழவர் நிலங்களில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன:—

1. உடுமலைப்பேட்டை—உடுமலைப்பேட்டை வட்டாரம்.
2. பீடம்பள்ளி—சூலூர் வட்டாரம்.
3. கங்கரபாளையம்—குண்டடம் வட்டாரம்.

இதுவரை இந்த புதர்ச் செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த 24 வகை மருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் பிக்லோரம் (Picloram Tordon 22 K) பிக்லோரம் பிளஸ் டு (Picloram + 2 4-D (Tordon 101 MIX) 2, 4-D உப்பு வகைகள் ப்ரோமாஸில் (Bromacil) சான் எச் 9789 (SAN H 9789) ஆகியவை ஏனைய பூச்சிக்கொல்லி மருந்துகளை விட சிறந்தவையாக உள்ளன.

மற்றெல்லா மருந்துகளைக் காட்டிலும் டார்டன் 22 கே என்பது அதிக பலனளிப்பதாக உள்ளது. ஹெக்டேர் ஒன்றுக்கு 5 கிலோ வீதம் பயன்படுத்திஞல் 6 திங்கள் கால அளவுக்கு இக்களைகளின் வளர்ச்சி முழுவதையும் கட்டுப்படுத்த முடியும். ஆனுல் இப்புதர்ச் செடியை மண்ணிலிருந்து அறவே அகற்ற முடியாது. ஆயினும், இம்மருந்து இந்தியாவில் கிடைப்பதில்லை. அமெரிக்காவிலிருந்து தான் இறக்குமதி செய்யவேண்டும்.

2, 4 வகை உப்புகள் இப்புதர்ச் செடியின் வளர்ச்சியை இரு திங்களுக்குக் கட்டுப்படுத்த உபயோகமாக உள்ளன. சோளம், மக்காச் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை போன்ற தானிய

[1974 ஏப்ரல் 17

வகைகளைப் பயிரிடுகையில் இப்புதர்ச்செடி வளர்ச்சியைத் தாற்காலிகமாகக் கட்டுப்படுத்த மேற்சொன்ன மருந்து பயன் படுத்தப்படலாம். மக்காச்சோள பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 2 கிலோ கிராம் என்ற அளவில் 2, 4 D வகை உப்புக்களை மூன்று முறை தெளித்து பரிசோதனை செய்ததில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 225 கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. கையினால் களைகளை அகற்றியதனால் கிடைக்கும் பலனைக்காட்டிலும் இது அதிகமாகும். ஒரு கிலோ 2, 4 D உப்பின் விலை ரூ. 20 ஆகும், மருந்தின் விலை உட்பட, ஒரு முறை மருந்து தெளிப்பதற்கான செலவு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 45 ஆகும்.

இவற்றைத் தவிர, 2, 4 D டார்டன் 22 K ஆகிய மருந்துகள் இந்த புதர்ச்செடியின் வளர்ச்சியை நிலையாகக் கட்டுப்படுத்த முடியுமா என்பது குறித்து ஆய்வுக் கூடங்களிலும், வயல்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. K டார்டன் 22 என்ற மருந்தை மூன்று நான்கு மாத இடைவெளியில் நான்கைந்து முறை பயன்படுத்தினால், இப்புதர்ச்செடி வளர்ச்சியை அறவே கட்டுப்படுத்த முடியுமென்று இதுவரை கிடைத்துள்ள முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது. இது குறித்து ஆய்வுப் பணி நடந்தேறி வருகிறது.

சட்டமன்ற LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS